கருத்தரங்கக் கட்டுரைகள்

பதிப்பாசிரியர் :

முனைவர் **தி. கணேசன்**

சைவ சித்தாந்த ஆராய்ச்சியாளர்

Vol. I

No. : 1, 2 & 3

வெளியீடு :

ஸ்ரீ துர்கா இந்தியவியல் ஆய்வு நிறுவனம்

P.S. கிருஷ்ணய்யர் ஞாபகார்த்த அறக்கட்டளை

நயினாரகரம் - தென்காசி.

2009

கருத்தரங்கக் கட்டுரைகள்

பதிப்பாசிரியர் :

முனைவர் தி. கணேசன்

சைவ சித்தாந்த ஆராய்ச்சியாளர்

இணை பதிப்பாசிரியர் :

ல. நரேந்திர சர்மா

ந்யாய சிரோமணி

Vol. I No. : 1, 2 & 3

வெளியீடு :

ஸ்ரீதுர்கா இந்தியவியல் ஆய்வு நிறுவனம்

P.S. கிருஷ்ணய்யர் ஞாபகார்த்த அறக்கட்டளை

நயினாரகரம் - தென்காசி.

2009

பொருளடக்கம்

பக்கம்

- ❋ முகவுரை 5
- ❋ வேண்டுகோள் 7
- ❋ சுவடிப் பதிப்பும், ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவன நூலகமும் 8
- ❋ சில வெளியீடுகளும் பதிப்புகளும் 10
- ❋ சில குறிப்பிடத்தக்க பதிப்புகள் 13
- ❋ 3-ம் ஆண்டு கருத்தரங்கம் 18
- ❋ கருத்தரங்கக் கட்டுரைகள் - சுருக்க அறிமுகம் 22

1. புராணங்கள் புகழும் ஸ்ரீவைகானஸம் 27

- சங்கேந்தி டாக்டர் எஸ். முத்து
  ஸம்ஸ்க்ருத விரிவுரையாளர்,
  விவேகானந்தா கல்லூரி, மைலாபூர், சென்னை - 4.

2. பொதுவாழ்க்கையில் நீதிஸ்லோகங்கள் 35

- வித்வான் K. ஜெகந்நாதன்
  ஸம்ஸ்க்ருத பண்டிதர், சேலம்.

3. ஸ்ரீ வைகானஸ ஆகமத்தில் நித்யார்ச்சனா விதி 46

- Dr. S. சுதர்சன்
  நூலகர், சரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சாவூர்.

4. சைவாகமங்கள் கூறும் சில முக்கியச் செய்திகள் 60

- Dr. T. கணேசன்
  சைவசித்தாந்த ஆராய்ச்சியாளர், French Institute, புதுச்சேரி.

5. மீமாம்ஸா கூறும் இஷ்டிகள் 71

- Dr. G. கிருஷ்ணமாச்சார்யார்
  ஸம்ஸ்க்ருத பண்டிதர், சென்னை.

பக்கம்

6. सामवेदस्य परिचयः (ஸாமவேதம் - ஓர் அறிமுகம்) 73

- V. ராமக்ருஷ்ணன்
ஸம்ஸ்க்ருத விரிவுரையாளர்,
ஸம்ஸ்க்ருத கல்லூரி, சென்னை.

7. சுவடிபாதுகாப்பும் பாதுகாப்புணர்வும் 78

- முனைவர் ப. பெருமாள்
பாதுகாப்பாளர் மற்றும் நூலகர்,
சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

8. த்வைதமதம் - ஓர் அறிமுகம் 85

- S.N. க்ருஷ்ணா
உதவி ஆராய்ச்சியாளர், KSRI - சென்னை.

9. புராணங்களில் தேசபக்தி 88

- Dr. T.V. VASUDEVA
Deputy Director, K.S.R.I., Chennai.

10. Recent Developments in the Library of Sridurga Indological Research Institute 95

- S. VENKATACHALAM
Researcher, Sridurga Indological Research Institute.

11. தென்னிந்தியச் சுவடிகளும் அவற்றைப்பற்றிய விழிப்புணர்வும் 97

- J. வரதராஜன்
ஆராய்ச்சியாளர், ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம்.

12. சிவபூஜை - ஓர் அறிமுகம் (சைவசித்தாந்த அடிப்படையில்) 101

- சத்யோ. சு. ஸ்ரீதர் சாமிநாதன்
ஆய்வாளர், சமஸ்க்ருதத் துறை,
சென்னை பல்கலைக்கழகம்.

முகவுரை

ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனத்தின் கருத்தரங்கக் கட்டுரைகள் (2, 3வது கருத்தரங்குகள்) அடங்கிய இதழின் முதல் தொகுதியை தற்பொழுது ஆராய்ச்சியாளர்கள், அறிஞர்கள், ஆய்வு மாணவர்கள் மற்றும் வாசகர்களின்முன் வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இதழில் ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம் வளர்ந்தவிதம், நூலகத்திலுள்ள சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், பழமையான புத்தகங்கள், மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றின் மூலம் நாம் பெறும் வரலாற்றுச் செய்திகளும், இந்த ஆய்வு நிறுவனத்தில் நடந்து முடிந்த 2வது 3வது கருத்தரங்குகளில் பங்கேற்ற ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வல்லுநர்கள் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

அவற்றில் இந்த ஆய்வு நிறுவன நூலகத்தில் உள்ள சுவடிகளின் அடிப்படையில் எழுந்த கட்டுரையும், எதிர்காலத்தில் வரவிருக்கும் புத்தகங்களைப் பற்றிய கட்டுரை ஒன்றும் இடம் பெற்றுள்ளன.

சிறப்புமிக்க கருத்தரங்குகளில் சைவாகமம், வைஷ்ணவாகமம், ஸ்தலபுராணம், தர்மசாஸ்த்ரம், வேதாந்தம், வ்யாகரணம், சுவடிகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, பகவத்கீதை, ஸமஸ்கிருத நாடகம் எனப் பல்வேறு கோணங்களில் ஆராய்ச்சியாளர்களால் பதிவு செய்யபட்ட கருத்துக்கள் கோவையாக இங்கே மிளிர்கின்றன.

இத்தனை சிறப்பு வாய்ந்த இந்த இதழை அணிசெய்யும் விஷயங்கள் ஆய்வுலகிற்குப் பயன்களை மிகவும் நல்குவன. சிறப்பான வகையில் இவற்றைப் படைத்தளித்துள்ள ஆராய்ச்சியாளர்களுக்கும், மொழித்துறை வல்லுநர்களுக்கும் அறக்கட்டளை சார்பாக என்னுடைய பாராட்டுக்களையும் நன்றிகளையும் உரிதாக்கி மகிழ்கின்றேன்.

இவ்விதழ் நல்லமுறையில் வெளிவர முயற்சி செய்த நிர்வாக இயக்குநர் திருமதி R. கலா ராமசாமி அவர்களுக்கும் இங்கு பணிபுரியும் ஆராய்ச்சியாளர்கள், உதவி ஆராய்ச்சியாளர்கள், நூலகர், உதவியாளர்கள், கணினிப் பிரிவுப் பணியாளர்கள் ஆகியோருக்கும் மற்ற வகையில் உதவிபுரிந்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இதழினை ஆராய்ச்சியாளர்களும் ஆய்வுமாணவர்களும், அறிஞர்களும் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

திரு. K. ராமசாமி
தலைவர்
P.S. கிருஷ்ணய்யர் ஞாபகார்த்த
அறக்கட்டளை

நயினாரகரம்
05.08.2009

வேண்டுகோள்

கருணையே உள்ளமாகக் கொண்ட நம் மூத்த அறிஞர் பெருமக்களும், முன்னோர்களும் அரிய பெரிய பொக்கிஷமான பல தலபுராணங்கள், இலக்கணங்கள், சாஸ்த்ரங்கள், வேதப்ரயோகங்கள், ஆகமங்கள் இன்னும் பிறவற்றையும் பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாகவும், காகிதப் பிரதிகளாகவும் நமக்குத் தந்துள்ளனர். விலையற்ற பொக்கிஷங்களான அவற்றை மேலும் பழுதடைவதற்கு முன் ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனத்திலுள்ள சுவடிக் காப்பகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால் அவை அத்துறையைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்களுக்கும், ஆய்வு மாணவர்களுக்கும் பயன்படும். அவற்றிலிருந்து அறிஞர்களும் பொதுமக்களும் அறிந்து பயன்பெறும்வண்ணம் நூல்கள் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்படும்.

ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவன நூலகத்திற்கு இம்மாதிரியான ஓலைச்சுவடிகளையும் நமது கலாசாரம், ஆன்மீகம் தொடர்பான பழமையான நூல்களையும் அன்பளிப்பாகக் கொடுப்பதன்மூலம், அவர்கள் சுவடியைப் பாதுகாத்த புண்ணியத்தையும் அவற்றை எழுதியவர்களுடைய அழியாப் புகழைப் பறைசாற்றிய பெருமையையும் ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம் உள்ளளவும் பெறுவர். அச்சுவடிகளைக் காணவருவோர்க்கு இலவச அனுமதியும், பதிப்பாகிவருமாயின் பதிப்பில் பெயர் இடம் பெறுவதோடு, அப்புத்தகத்தின் ஐந்து பிரதிகளையும் பெறுவர். எனவே "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளையும், கையெழுத்துப் பிரதிகளையும், அச்சுப்புத்தகங்களையும் நூலகத்திற்கு தந்துதவ வேண்டுகிறேன்.

நயினாரகரம் — **K. ராமசாமி சர்மா**

24-8-2009 — அறக்கட்டளைத் தலைவர்

சுவடிப் பதிப்பும், ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவன நூலகமும்

திருமதி. R. கலா ராமசாமி
பொது செயலாளர்
ஸ்ரீ துர்கா ஆய்வு நிறுவனம்

உலகிலுள்ள பழம்பெருமை வாய்ந்த ஓலைச்சுவடி நூலகங்களில் ஒன்றாக வளரத் தொடங்கியுள்ள நிறுவனமே ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம். இந்த நிறுவனமும் அதைச்சார்ந்த நூலகமும் எப்படி எப்போது தொடங்கப்பட்டன என்பனவற்றைச் சற்று சுருக்கமாகப் பார்ப்போம்.

P.S. கிருஷ்ணய்யர் ஞாபகார்த்த அறக்கட்டளையின் ஓர் அங்கமாக இந்த ஆய்வு நிறுவனம் தொடங்கப்பெற்றது. வைத்திய சாத்திரம், மந்திர சாத்திரம் ஆகியவற்றைச் சார்ந்த ஏறக்குறைய ஆயிரம் ஆண்டு பழமைவாய்ந்த சுவடிகள் இங்கே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 75% சுவடிகள் வடமொழியில் உள்ளன. மலையாளம், தெலுங்கு முதலிய மொழிகளிலும் சில சுவடிகள் உள்ளன. மேலும் இந்நூலகத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அச்சிட்ட நூல்களும் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் தமிழ், ஆங்கிலம், வடமொழி, தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, மராட்டி போன்ற மொழிப் புத்தகங்களும், கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன.

.இந்நூலகத்திலுள்ள பெரும்பாலான ஓலைச்சுவடிகள் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. சில வடமொழி நூல்கள் தெலுங்கு எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. அக்காலத்தில் ஒருவகை மொழி ஒருமைப்பாடும்

இருந்துவந்தது. அதனால்தான் வடமொழியைத் தெலுங்கு, தேவநாகரி, கிரந்தம் போன்றவற்றில் எழுதிவந்தனர்.

இந்த ஆய்வு நிறுவன நூலகத்திற்குப் பெரும்பாலும் பல அன்பர்கள் ஓலைச்சுவடிகளை அன்பளிப்பாக வழங்கி வருகின்றனர்; அவற்றுடன் அச்சிட்ட நூல்களையும் சிலர் அன்பளிப்பாகத் தந்துள்ளார்கள்.

இங்குள்ள சில அரிய சுவடிகளைப் பதிப்பிக்க இருமொழி அல்லது மும்மொழி வல்லுநர்கள் தேவைப்படுகின்றனர். அவர்கள் கிரந்தம், தேவநாகரி, தெலுங்கு, மலையாளம் (திகளாரி) ஆகிய பழைய எழுத்துக்களில் நல்ல தேர்ச்சி பெற்றவர்களாகவும், வடமொழி, தமிழ் மொழி இலக்கிய இலக்கணங்களில் அறிஞர்களாகவும், சுவடிகளை ஆராயும் பொறுமையுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

ஓலைச்சுவடிகளில் பலவகையான பிழைகள் மலிந்திருப்பது ஆராய்ச்சியாளர்கள் அறிவர்; பதிப்பாசிரியர்கள், ஆய்வாளர்கள், கணினிப் பிரிவு உதவியாளர்கள் போன்றோர் கூடியவரையில் பிழைகளைக் களைந்தாலும், அவர்களின் கவனத்தையும் மீறித் தப்பிவிடுகின்ற பிழைகளும் உள்ளன. அக்குறைகளைக் களைந்து படிப்பது வாசகர்களின் கடமை.

"குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்"

என்பது பதிப்பாசிரியர்கள் தங்கள் முன்னுரையின் முடிவில் உச்சரிக்கும் ஒரு பொதுவான வாசகமாகும்.

வெளியீடுகளும் பதிப்புகளும்

ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம் இதுவரை சுமார் 20 புத்தங்களை வெளியிட்டுள்ளது. அவற்றில் சில பிற வெளியீட்டார்களின் உதவியுடன் வெளிவந்துள்ளன, அவை பின்வருப்வை.

1. सुभाषितश्लोकमञ्जरी (தமிழ்ப் பதவுரைடன்) – முதல் பாகம்

   தொகுப்பு:- வித்வான் K. ஜெகந்நாதன்

   வெளியீடு:- ஸ்ரீ துர்கா ஆய்வு நிறுவனம்

2. सुभाषितश्लोकमञ्जरी (தமிழ்ப் பதவுரைடன்) – இரண்டாம் பாகம்

   தொகுப்பு:- ஸ்ரீ L. நரேந்திரன்

   வெளியீடு:- ஸ்ரீ துர்கா ஆய்வு நிறுவனம்.

3. சிவசங்காபிஷேக க்ரியா மஞ்ஜரி

   தொகுப்பு:- R. செல்வம் பட்டர் (எ) கல்யாணசுந்தர பட்டர்

4. தாம்ரபர்ணீ வைதிக ஸமாஜம் முக்கியவிலாசம்

   தொகுப்பு:- வைதிக ஸமாஜம்

5. சதாபிஷேக விழா சிறப்பு மலர்

   (ருக்வேதீய சதாபிஷேகச் சிறப்பும் - செய்முறையும்)

   தொகுப்பு:- சிவஸ்ரீ வித்யாசங்கர சாஸ்த்ரிகள்

   வெளியீடு:- ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம்

6. ஸ்துதி ஸங்க்ரஹம் - க்ரந்தலிபி

தொகுப்பு:- சிவஸ்ரீ G. கார்த்திகேயசிவம்

7. இறைவனைத் தரிசிக்க எல்லோருக்கும் உரிமை

ஆசிரியர்:- சிவஸ்ரீ S. அருணசுந்தரசிவாசாரியார்

8. ஸ்ரீமத்ஞானசிவாசாரியார் அருளிய சிவபூஜாஸ்தவம்

பொழிப்புரை:- Dr. T. கணேசன்

9. சிவாலய வழிபாடு

ஆசிரியர்:- சிவஸ்ரீ: G. கார்த்திகேயசிவம்

10. சிவாஷ்டோத்தரசதநாமஸ்தோத்ரம்

பதிப்பாசிரியர்:- Dr. T. கணேசன்

வெளியீடு:- ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம்

11. திக்பாலகா ஸூக்தம்

தொகுப்பு:- தாம்ரபர்ணீவைதிகஸமாஜம்

12. சிவலிங்கமஹத்வம்

ஆசிரியர்:- ஸ்ரீமதி ஆண்டாளம்மாள்

13. ஷோடசோபசாரமந்த்ரஸங்க்ரஹ:

தொகுப்பு:- சிவஸ்ரீ G. கார்த்திகேயசிவம்

14. உன்னதபுரீச்வரமாஹாத்மியம்
(மிலட்டூர் ஸ்தலபுராணம் தமிழ்ச்சுருக்கம்)

ஆசிரியர்:- Dr. T. கணேசன்

வெளியீடு:- ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம்

15. புஷ்பாஞ்ஜலி

ஆசிரியர்:- சிவஸ்ரீ K. செல்லமணி பட்டர்

வெளியீடு:- ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம்

16. ஸ்ரீமத் அகோரசிவாசாரியார் அருளிய சைவானுஷ்டானவிதி

தொகுப்பு ஆசிரியர்:- சிவஸ்ரீ G. கார்த்திகேய சிவம்

17. ஸ்ரீமத் சிவஜ்ஞானபோதம் அமூலமும் உரையும்

உரை ஆசிரியர்:- Dr. S.P. ஸபாரத்னசிவாச்சாரியார்

18. அசிந்த்யவிச்வஸாதாக்யாகமம் -
புண்யவிதி, புண்யநிர்ணய விதிபடலம்
மற்றும் இவ்விருபடலங்களின் தமிழாக்கமான
சிவபுண்ணியத்தெளிவு - நிகமஞானதேசிகர் இயற்றியது

பதிப்பாசிரியர்:- Dr. T. கணேசன்

19. ஸ்ரீமத் ஸர்வஜ்ஞானோத்தராகமம் - யோகபாதம்

ஸ்ரீமத் அகோர சிவாச்சாரியார் இயற்றிய விருத்தியுரையுடன் கூடியது)

பதிப்பாசிரியர்:- Dr. T. கணேசன்

20. अक्षर मालायाः पट्टिका ******

Compiled By Vidvan K. Jagannathan

21. சிவாலயசேவாக்ரமம்

ஆசிரியர்:- Dr. T. கணேசன்

வெளியீடு:- ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம்

சில குறிப்பிடத்தக்க பதிப்புகள்

1. 15. 5. 2008 அன்று நடைபெற்ற ப்ரும்மஸ்ரீ K. ராஜகோபால திக்ஷீதர் அவர்களின் சதாபிஷேக வைபவத்தில் வெளியிடப்பட்ட திக்பாலகா ஸுக்தம் க்ரந்த எழுத்திலிருந்து முதன்முறையாக தேவநாகரியில் ஸ்வரத்துடன் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்தது. வைதிகர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன்படும் வகையில் பதம் பிரித்து வெளியிடப்பட்டது.

2. ருக்வேதீய சதாபிஷேகச் சிறப்பும் செய்முறையும் என்னும் நூல் சிவஸ்ரீ வித்யா சங்கர சிவாசாரியார் அவர்களால் பல நூல்களை ஆராய்ந்து விரிவான முன்னுரை, முக்கிய விளக்கங்கள் ப்ரயோக மந்திரங்கள் ஆகியவற்றுடனும் தேவநாகரி எழுத்தில் ஸ்வரத்துடன் முதன்முதலில் ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனத்திலிருந்து வெளியிடப்பட்டது.

3. ஷோடசோபசாரமந்த்ரஸங்க்ரஹ: எனும் புத்தகம் சிறந்த வண்ணப்படங்களுடன் க்ரந்தம் மற்றும் தேவநாகரி எழுத்துக்களில் ஸ்வரங்களுடன் முன்னுரையுடன் வெளியிடப்பட்டது.

4. உன்னதபுரீச்வரமாஹாத்மியம் - மிலட்டூர் ஸ்தலபுராணம் - தமிழ்ச் சுருக்கம் பழைய கையெழுத்துப் பிரதிகளிலிருந்து மூலநூல் பாடபோதங்களுடன் வெளியிடத் திட்டமிட்டு அதன் தமிழ்ச் சுருக்கம் குறுகிய காலத்தில் வெளிவந்தது. மூலநூல் விரிவான உரையுடன் அடுத்த வருடம் வெளியிட உள்ளோம். 31.5. 2009 அன்று மிலட்டூரில் ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனத்தின் பதிப்பாக வெளியிடப்பட்டது.

5. புஷ்பாஞ்ஜலி என்னும் நூலில் ஸ்ரீ சிவபிரான் முதலிய தெய்வங்களுக்குச் சாற்றவேண்டிய பத்திர, புஷ்பங்கள், தெய்வங்களுக்கு

ஆகாத மலர்கள் முதலிய அரிய செய்திகள் அடங்கியுள்ளன. இந்நூலின் நடுப்பகுதியில் பூக்களின் படங்கள் மிகவும் சிறப்பாக இருக்கும்வண்ணம் வெளியிடப்பட்டது. (நாள் 21. 6. 2009)

6. सुभाषितश्लोकमञ्जरी என்னும் நூல் இந்த ஆய்வு நிறுவனத்தின் முதல் வெளியீடு ஆகும். வித்வான் கி. ஜெகந்நாதன் அவர்கள் தொகுத்து எழுதி அவருடைய மகளின் திருமண விழாவில் வெளியிடப்பட்டது. (2007--ஆம் ஆண்டு)

7. இறைவனைத் தரிசிக்க எல்லோருக்கும் உரிமை:-

இறைவனைத் தரிசிக்க இந்துக்கள் எல்லோருக்கும் உரிமை உண்டா? கிடையாதா? என்பதுதான் இந்தப் புத்தகத்தின் முக்கியக் கருத்து. இதுபோன்ற கருத்துக்களை ஆகமங்களின் ஆதாரத்தில் விளக்கியுள்ளார் சிவஸ்ரீ S. அருணசுந்தர சிவாச்சாரியார் அவர்கள்.

8. சிவபூஜா ஸ்தவம்:-

ஆத்மார்த்த சிவபூஜையினையும், அதன் விளக்கங்களையும், நுணுக்கங்களையும் தொகுத்து வழங்குவதே இந்நூலின் சிறப்பம்சம். சிவபூஜாஸ்தவம் என்ற இந்நூல் சிவபூஜையை முறைப்படி விளக்குவதன் வாயிலாக சிவபெருமானைத் துதிப்பதாக அமைந்துள்ளது. ஸ்ரீமத் ஞானசம்பு சிவாச்சார்யார் இயற்றிய இந்த நூலிற்குத் தமிழாக்கம் Dr. T. கணேசன் அவர்கள் (சைவ சித்தாந்த ஆராய்ச்சியாளர், பாண்டிச்சேரி) தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள்.

9. சிவசங்காபிஷேகக்ரியாமஞ்ஜரி:-

சிவாகமங்கள் சிவபெருமானுக்கு விசேஷமான அபிஷேகங்களைப் பற்றி விரிவாக கூறுகின்றன. சங்காபிஷேகம் 108 - 1008 என்ற முறையில் செய்ய வேண்டியவைகளைப் பற்றியும் மகாபிஷேகம் என்ற முறையில் திரவியங்களிலிருந்து 24-36 என்ற பலமுறைகளைத் தெளிவாகவும் விரிவாகவும் (கலசமுறையுடன்) கூறுகிறது.

10. சிவலிங்கமஹத்வம் :-

சிவலிங்கத்தின் மஹிமையை மட்டும் தனியே விளக்கி இதுவரை நூல் எதுவும் செய்யப்படவில்லை அக்குறையை நீக்கும்வண்ணமாக வேதம், சிவாகமம், புராணம், இதிஹாஸம், திருமுறை ஆகியவற்றுள் காணப்படுகின்ற சிவலிங்கத்தின் அரிய பெருமைகளைப் பற்றி நடைபெற்ற ஓர் சொற்பொழிவின் வடிவமே இப்புத்தகம். சிவலிங்கபூஜை செய்தால் என்னென்ன பயன்கள் ஏற்படும் என்று சொல்வதைவிட சிவலிங்கத்தைப் பூஜை செய்தவர்கள் எவ்விதமான பலனை அடைந்தார்கள் என்பதை விளக்குதல் சிறப்பு என்பதை இப்புத்தகமானது விளக்கி இருக்கிறது.

11. சிவாலய வழிபாடு:-

வழிபாடானது மனிதனின் வாழ்க்கையை எல்லா வகையிலும் முன்னேற்றுவதில் பெரும்பங்கு வகிக்கிறது என்பதும், வழிபாடு செய்பவர்கள் அதன் நெறிமுறைகளை நன்குணர்ந்து தவறாது எப்படிப் பின்பற்ற வேண்டும் என்பதும் வழிபாடு தேவையற்ற ஒரு சடங்கு என்று கருதுவோருக்கும் ஏனையோருக்கும் ஏற்படும் ஸந்தேஹங்களை இந்நூலின் ஆசிரியர் சிவஸ்ரீ க. கார்த்திகேயசிவம் அவர்கள் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

12. ஸ்துதிஸங்க்ரஹம்:-

மனிதன் தன்னுடைய வாழ்வில் முன்னேற்றம் அடைவதற்கு நமது சான்றோர்கள் பல வழிகளை அருளியுள்ளார்கள். அவற்றுள் ஒன்று இறைவனை அவனுடைய மஹிமைகளைச் சொல்லி போற்றி வழிபட்டு அருள் பெறுதல். இதற்கு "ஸ்துதி" என்று பெயர். அப்படிப்பட்ட ஸ்துதிகளின் ஸங்க்ரஹத்தை ஆசிரியர் சிவஸ்ரீ க. கார்த்திகேய சிவம் அவர்கள் முழுக்க முழுக்க க்ரந்த லிபியிலேயே வெளியிட்டு உள்ளார்.

13. சிவாஷ்டோத்தரசதநாமஸ்தோத்ரம்:-

பக்தி நெறி ஒன்றையே பரப்புவதற்காக எழுந்த புராணங்கள் கணக்கற்ற ஸ்தோத்திரங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன. அவற்றுள் சிவபெருமானின் கணக்கிலடங்கா மஹிமைகளை வரிசைப்படுத்தும்

ஓராயிரம் திருநாமங்களே ஸஹஸ்ரநாமதோத்திரம் ஆகும். மஹாபாரதம் மற்றும் பல புராணங்களில் எட்டு சிவஸஹஸ்ரநாம ஸ்தோத்திரங்கள் உள்ளன என்று இதன் தொகுப்பு ஆசிரியர் **Dr T.** கணேசன் கூறுகிறார். சிவபெருமானின் நூற்றெட்டுத் திருநாமங்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் புகழ்வாய்ந்த நீலகண்டதீக்ஷிதர் வடமொழியில் இயற்றிய விரிவான உரையைத் தழுவிச் சுருக்கமாகத் தமிழில் பொருள் விளக்கம் கொடுத்து ஸமஸ்க்ருதம் அறியாதவர்களுக்கும் தெளிவாகப் புரியும்படி கூறியுள்ளார்.

14. ஸ்ரீமத்அகோரசிவாச்சார்யார் அருளிய சைவானுஷ்டானவிதி-

வேதங்களில் கூறப்பட்டுள்ள விதிகள் யாவற்றுக்கும் ஸந்த்யாவந்தனம் எங்ஙனம் மூலமாகத் திகழ்கிறதோ அதுபோல சைவகிரியைகள் யாவற்றுக்கும் அடிப்படையாகத் திகழ்வது சைவானுஷ்டானம் ஆகும். இந்நூலில் காலை எழுந்த உடன் செய்ய வேண்டிய சிவத்யானம் தொடங்கி ஸந்த்யாவந்தனம் வரையிலான கிரியைகள் அடங்கியுள்ளன என்பதை ஸ்ரீமத்அகோரசிவாச்சார்யபத்ததியில் உள்ள விஷயங்களை இதனுடைய தொகுப்பாசிரியர் க. கார்த்திகேயசிவம் அவர்கள் கூறுகிறார்.

15. ஸ்ரீமத் சிவஜ்ஞானபோதம் - மூலமும் உரையும்:-

ஸ்ரீமந் நடராஜப் பெருமானுடைய டமருகத்திலிருந்து வெளிப்பட்ட "அ, இ, உ, ண்" எனத் தொடங்கும் மாஹேசுவர சூத்ரம் போன்று ஞானப் பெருநூல்கள் அனைத்தின் சாரமாகத் திகழ்வது சிவஞானபோதம் எனும் ஒப்புயர்வற்ற தனிநூல். பன்னிரண்டு சூத்திரங்களையே கொண்டுள்ள "சிவஞானபோதம்" என்பது சைவாகமங்களின் சாரம் என்றும் ஒவ்வோர் ஆகமமும் கூறும் முடிவான பொருள் இதுதான் என்றும் பொருள் ஒற்றுமையை **Dr. S.P.** ஸபாரத்னசிவாச்சாரியார் அவர்கள் விளக்கியுள்ளார்.

16. அசிந்திய விச்வஸாதாக்யாகமமும் சிவபுண்ணியத்தெளிவும்

அசிந்திய விச்வஸாதாக்யம் என்பது சிந்தியாகமத்தின் உபாகமம். புண்ணியவிதி மற்றும் புண்ணியநிர்ணயவிதி ஆகிய இரு படலங்களும் சிவபுண்ணியங்களை மிக விரித்துக் கூறுகின்றன. இந்த ஆகமம்

இதுநாள்வரை அச்சாகவில்லை. இவ்விரு படலங்களையும் 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நிகமஞானதேசிகர் என்னும் சைவ ஆசாரியர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். மூலமும் தமிழ் மொழிபெயர்ப்பு நூலும் இதில் அடங்கியுள்ளன. சிவபக்தியை ஆதாரமாகக் கொண்டு செய்யப்படும் புண்ணியங்கள் பெரும் பயனைக் கொடுக்கவல்லன என்பதை மேற்படி நூல்களின் அடிப்படையில் **Dr. T.** கணேசன் அவர்கள் தன்னுடைய முன்னுரையில் அழகாக தெரிவித்துள்ளார்.

17. ஸ்ரீமத் ஸர்வஜ்ஞானோத்தராகமம்:- (யோகபாதம்)

இது மூல உபாகமங்களுள் இல்லை. அனைத்து ஆகமங்களின் ஸாரமாக இருப்பதால் இந்த ஆகமம் ஸர்வஞானோத்தரம் எனப் பெயர் பெற்றது. முதன்முறையாக ஸ்ரீமத் அகோரசிவாசாரியாரின் வ்ருத்தியுரையுடன் மாணவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் பயனளிக்கும்வண்ணம் பாண்டிச்சேரி **French Institute,** ஆராய்ச்சியாளர் **Dr. T.** கணேசன் அவர்களின் குறிப்புகளுடன் கூடிய விரிவான முன்னுரையுடனும் பல சுவடிகளை ஒப்புநோக்கிய பாடபேதங்களுடனும் தமிழில் மொழிபெயர்ப்புடனும் வெளியிடப்பட்டது.

3-ஆம் ஆண்டு கருத்தரங்கம்

ஸ்ரீ துர்கா ஆய்வு நிறுவனத்தின் 3 - ம் ஆண்டுத் துவக்க விழாவினை முன்னிட்டு நடைபெற்ற 2 - நாள் கருத்தரங்கம் ஆய்வு நிறுவன வளாகத்தில் 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் 6, 7 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

6.9.2008 சனிக்கிழமை காலை 11.00 மனிக்கு 2 - நாள் கருத்தரங்கு வேத கோஷத்துடன் தொடக்கவிழா நடைபெற்றது.

அறக்கட்டளைத் தலைவர் திரு **K.** ராமசாமி சர்மா அவர்களும் பொதுச்செயலாளர் திருமதி **R.** கலா ராமாசாமி அவர்களும் தலைமை ஏற்று வரவேற்புரை வழங்கிச் சிறப்பித்தார்கள்.

இவ்விழாவின் முதல் அமர்வு காலை 11.20 மணிக்குப் பேராசிரியர் **Dr. S.** கோதண்டராமன் (வ்யாகரண பண்டிதர்) அவர்களின் "தர்மசாஸ்த்ரம் ஓர் பார்வை" என்ற தலைப்பில் இன்றைய சூழலில் தர்மசாஸ்திரங்களின் பயன்களைப் பற்றி விவரித்து பார்வையாளர்களின் கேள்விகளுக்கும் பதிலுரைத்துத் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து திருநெல்வேலி தெற்குமடம் மடாதிபதி சிவஸ்ரீ வித்யாசங்கர சிவாசாரியார் அவர்கள் பொதிகையில் தோன்றி தென்பாண்டி நாட்டை வளம் கொழிக்கச் செய்யும் தாமிரபர்ணி நதியின் அருமை பெருமைகளை விளக்கும் "தாம்ரபர்ணீ மாஹாத்மியம் ஓர் பார்வை" என்ற தலைப்பில் தாமிரபர்ணி தீர்த்த மஹிமையையும், புராண விஷயங்களையும் மிக அழகான முறையில் தொகுத்து அளித்தார். (இந்த தாம்ரபர்ணீ மாஹாத்ம்யம் என்ற நூல் விரைவில் புத்தகமாக வெளிவர ஆய்வுபணிகள் நடைபெற்று வருகின்றன) அதற்கான மொழிப்பெயர்ப்பு

Dr. T. கணேசன் அவர்களின் தலைமையில் ஆராய்ச்சி நடைபெறுகிறது) இத்துடன் முதல் அமர்வு இனிதே நிறைவு பெற்றது.

இரண்டாம் அமர்வு:-

மதியம் 2:00 மணி அளவில் Dr. S. முத்துபட்டர் அவர்கள் (ஸமஸ்கிருத விரிவுரையாளர், விவேகானந்தா கல்லூரி, சென்னை) புராணங்களும் ஸ்ரீ வைகானஸ ஆகமமும் என்ற தலைப்பில் வைஷ்ணவாகமமான ஸ்ரீவைகானஸ ஆகமத்தின் சிறப்புக்களைப் புராணங்களோடு விரிவான விளக்கத்துடனும், பார்வையாளர்களின் கேள்விகளுக்கு பதிலும் கூறி சிறப்புரையாற்றினார்.

சிவராத்திரி - சிறிய ஆய்வு

இந்தக் கட்டுரையை சிவஸ்ரீ. S. அருணசுந்தர சிவாச்சாரியார் (வ்யாகரண விரிவுரையாளர், மைலாப்பூர் ஸமஸ்க்ருத கல்லூரி, சென்னை) அவர்கள் சைவாகமத்திலிருந்து மிகவும் பயன் அளிக்கும் வகையில் பார்வையாளர்களுக்கு பயன்படும் வகையில் சிறப்புச் செய்திகளாக வழங்கினார். அதனைத் தொடர்ந்து K. ஜெகந்நாதன் அவர்கள் பொது வாழ்க்கையில் நீதி ஸ்லோகங்கள் என்ற தலைப்பில் இன்றைய வாழ்வில் பயன்தரும் நீதி ஸ்லோகங்களில் உள்ள சாரத்தைக் கொடுத்து மாணவர்களுக்கு நல்லுரை ஆற்றினார்.

7.9.2008 ஞாயிற்றுக்கிழமை அன்று 2-ம் நாள் கருத்தரங்கு Dr. T. கணேசன் தலைமையில் துவங்கியது. முதல் அமர்வு Dr. S. சுதர்ஸன் (நூலகர், சரஸ்வதி மஹால், தஞ்சாவூர்) அவர்கள் "ஸ்ரீவைகானஸ ஆகமத்தில் பிரம்மோற்சவ விதி" என்ற தலைப்பில் வைஷ்ணவ சம்பிரதாயம் மற்றும் ஆகமத்தின் சிறப்புத் தன்மை போன்றவைகளை பார்வையாளர்கள் எளிதில் புரியும்வண்ணம் சிறப்பாக உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து Dr. T. கணேசன் (சைவ சித்தாந்த ஆராய்ச்சியாளர், பிரெஞ்ச் ஆய்வு நிறுவனம், புதுச்சேரி) அவர்கள் "சைவாகமங்கள் கூறும் முக்கிய விஷயங்கள்" என்ற தலைப்பில் ஆகமங்களின் சிறப்பையும் பெருமையையும்

எடுத்துரைத்து உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து Dr. G. கிருஷ்ணாமாச்சாரியார் அவர்கள் "மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் இஷ்டி" என்ற தலைப்பிலும், "சாமவேதம்" ஓர் அறிமுகம் என்ற தலைப்பில் ஸ்ரீ ராமகிருஷ்ணன் (விரிவுரையாளர், மைலாப்பூர் ஸமஸ்கிருத கல்லூரி, சென்னை) அவர்களும் தத்தம் கட்டுரைகளை மிகவும் சிறப்பாக உரையாற்றி 2-ம் நாள் முதல் அமர்வுகளை நிறைவு செய்தார்கள்.

இரண்டாம் அமர்வு மற்றும் நன்றியுரை:-

Dr. T. V. வாசுதேவ (மூத்த ஆராய்ச்சியாளர் மற்றும் Dept. Director KSRI, சென்னை) அவர்கள் தலைமையில் இரண்டாம் அமர்வில் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு, பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வு என்ற தலைப்பில் **Dr. P.** பெருமாள் (ஓலைச்சுவடிப் பாதுகாப்புத்துறைத் தலைவர், ஸரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சாவூர்) அவர்கள் தென்னிந்திய ஓலைச்சுவடிகளின் வரலாறு மற்றும் அவற்றைப் பாதுகாப்பது பற்றிய விழிப்புணர்வு எவ்வாறு உள்ளது முதலான அரிய செய்திகளைக் கொண்ட ஓர் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து "வாஸ்துவும் ஜோதிஷமும்" என்ற தலைப்பில் **Dr. M.** ரகு (நூலகர் மைலாப்பூர் ஸமஸ்கிருதக் கல்லூரி, சென்னை) அவர்களும், "துவைத வேதாந்தம் - ஓர் அறிமுகம்" என்ற தலைப்பில் **S.N.** கிருஷ்ணன் (உதவி ஆராய்ச்சியாளர், **KSRI,** சென்னை) அவர்களும் தத்தம் கருத்துக்களைச் செம்மையாக விளக்கிக் கருத்தரங்கை நிறைவுப் பகுதிக்குக் கொண்டு சென்றனர். இறுதியாக சிறப்பு அழைப்பாளர்களான ப்ரம்மஸ்ரீ **K.** ராஜகோபால தீக்ஷிதர் அவர்களும், ப்ரம்மஸ்ரீ **K.** மீனாட்சிசுந்தரசர்மா (திருநெல்வேலி) அவர்களும் சிறப்புரையாற்றினார்கள். கருத்தரங்கிற்கு வந்த அறிஞர்கள், வல்லுநர்கள் பெரியோர்கள், மாணவர்கள் மற்றும் ஏனையோருக்கும் நன்றியுரையை திரு. **L.** நரேந்திரன் (நிர்வாக இயக்குநர் பொறுப்பு, ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம்) அவர்கள் கூற கருத்தரங்கம் இனிதே நிறைவு பெற்றது.

இரண்டு நாட்கள் நடைபெற்ற 4 அமர்வுகளிலும் மொத்தம் 16 ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பெற்றன. அறிஞர்களும் ஆய்வாளர்களும் சுவடியியல் ஆய்வுகளை மேலும் செழுமைப்படுத்தும் வகையில்

இக்கட்டுரைகளைப் படைத்திருந்தனர். கட்டுரைகள், சுவடிபதிப்பு வரலாறு, புராணம், ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வு வேதாந்தம், வாஸ்துவும் ஜோதிஷமும், சைவ, வைணவாகமம் முதலான பொருண்மைகளில் படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

7.9.2008 மாலை 4.30 மணிக்கு கருத்தரங்கின் நான்காம் அமர்வு நிறைவு பெற்றதும் கருத்தரங்கின் நிறைவு விழாவில் இக்கருத்தரங்கை நடத்துவதற்கு அனுமதி அளித்த அறக்கட்டளைக்கும் அதன் தலைவர், பொதுச் செயலாளர் அவர்களுக்கும் நன்றியையும், ஆய்வு நிறுவனத்தின் ஊழியர்களுக்கு நன்றியும் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

கருத்தரங்கக் கட்டுரைகள் - சுருக்க அறிமுகம்

P.S. கிருஷ்ணய்யர் ஞாபகார்த்த அறக்கட்டளை சார்பாக ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம் நடத்திய 2 - நாள் கருத்தரங்கு கட்டுரைகள், நிகழ்வுகளை இக்கட்டுரை விவரிக்கின்றது. இக்கட்டுரையை பதிப்பாசிரியர் அவர்கள் எழுதியுள்ளார்கள். (குறிப்பு:- இந்தக் கருத்தரங்கக் கட்டுரைகள் இதழில் வெளிவந்துள்ள கட்டுரையின் விஷயங்களுக்கு அவ்வக்கட்டுரையின் ஆசிரியரே பொறுப்பு.)

(1) புராணங்கள் புகழும் ஸ்ரீவைகானஸம்:-

வைகானஸம் குறித்து இவ்வாய்வுக் கட்டுரையாக இது மலர்ந்துள்ளது.

प्रातः काले....उदाहृताः॥ இப்படிப்பட்ட விஷயம் எங்கு சொல்லப்பட்டுள்ளது என ஆராயும்போது வேதத்தில் கூறியபடி தன்னுடைய தர்மங்களைச் செய்து அதன் வழி நடக்கவேண்டும் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் நம்மால் கடைப்பிடிக்கப்படும் இவை அனைத்தும் இதிஹாச புராணங்களிலும் கூறப்பட்டுள்ளதா என இக்கட்டுரை ஆராய்கின்றது. இவ்வாய்வுக் கட்டுரையை **Dr. S.** முத்துபட்டர் அவர்கள் எழுதியுள்ளார்.

(2) பொதுவாழ்க்கையில் நீதிஸ்லோகங்கள்:-

சுபாஷிதங்கள் குறித்த ஆய்வுக் கட்டுரையாக இது மலர்ந்துள்ளது. பல்வேறு மொழிகளில் மிகவும் முக்கியமானது இந்த ஸம்ஸ்கிருத மொழி. அது மிகவும் இனிமையானது; தெய்வீகத்தன்மை வாய்ந்தது. வழக்கு மொழியாகவும் உள்ளது. அப்பேர்ப்பட்ட மொழியில் எண்ணிலடங்கா

காவியங்கள் உள்ளன. அவை மிக இனிமையானவை. மேலும் அதில் சுபாஷிதங்கள் கணக்கில்லாமல் அமைந்துள்ளன. அவை நம் வாழ்வைச் செம்மையாக்குபவை. இவ்வாய்வுக் கட்டுரையை வித்வான் **K.** ஜெகந்நாதன் அவர்கள் எழுதியுள்ளார்.

(3) வைகானஸ ஆகமத்தில் நித்யார்ச்சன விதி:-

ஸ்ரீவைகானஸ ஆகமத்தைப் பற்றிய ஆய்வுக் கட்டுரையாக இது மலர்ந்துள்ளது. இறைவழிபாடு வேதத்தில் துவங்கி காலப்போக்கில் வளர்ந்து இன்று மலர்ந்து சூரியனின் ப்ரகாசத்திற்கு நிகராக அனைத்து இடங்களில் விரவிக்கிடக்கின்றது. இப்படி வேதத்திலிருந்து தோன்றிய வழிபாட்டை வைணவமுறைப்படி அமைத்தவர் " ஸ்ரீமத் விகனோமுனி" என்பவராவர். இவரால் தொற்றுவிக்கப்பெற்ற இந்த பூஜைமுறைக்கு "வைகானஸ பகவத் சாஸ்த்ரம்" அந்த வைகானஸ ஆகமத்தில் நித்யார்ச்சனா விதியை பற்றி இவ்வாய்வுக் கட்டுரை விவரிக்கிறது. இவ்வாய்வுக்கட்டுரையை **Dr. S.** சுதர்ஸன் அவர்கள் எழுதியுள்ளார்.

(4) சைவாகமங்கள் கூறும் சில முக்ய விசேஷம்

சைவாகமம் குறித்த ஆய்வுக்கட்டுரையாக இது மலர்ந்துள்ளது. வேதத்தின் அடிப்படையில் எழுந்த ஸ்ம்ருதி நூல்களும் பொதுமக்களின் ஆசார அனுஷ்டானங்களுக்கும் அரசாட்சிக்கும், பொதுமக்களின் நீதி முதலியவற்றுக்கும் ஆதாரமாகக் கொள்ளப்பத்துள்ளன. என்றும் தத்துவம் கோட்பாடுகளின் ஆதாரத்திலும், சமய அனுஷ்டானங்களின் அடிப்படையிலும் சைவம் பல பிரிவுகளை உடையது. என்றும் இந்த கட்டுரை விவரிக்கிறது இவ்வாய்வுக்கட்டுரை. இவ்வாய்வுக்கட்டுரையை **Dr. T.** கணேசன் அவர்கள் எழுதியுள்ளார்.

(5) மீமாம்ஸா கூறும் இஷ்டிகள்:-

இஷ்டியின் வகைகளைக் குறித்த ஆய்வுக் கட்டுரையாக இது மலர்ந்துள்ளது.

மீமாம்ஸா என்பதற்கு வேதவாக்கியங்களின் விசாரம் என்பது பொருள். யாகம் என்பது தேவதையைக் குறித்து திரவியத்தை அக்னியில் தியாகம் செய்வது. இந்த யாகம் இஷ்டி, பசு, ஸோமம் என மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. இஷ்டி என்பது தான்யத்தைக் கொண்டு செய்யப்படும். யாகம் இந்த இஷ்டி தர்சபூர்ணமாஸ இஷ்டி, பவமானேஷ்டி, தீக்ஷணீயேஷ்டி, அச்வப்ரதிக்ரஹேஷ்டி முதலானவை என்றும் அவற்றின் பலன்களையும் விவரிக்கிறது இந்தக் கட்டுரை. இதை **Dr. G.** கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

(6) ஸாமவேதம் - ஓர் அறிமுகம்:-

ஸாமவேதத்தைக் குறித்த ஆய்வுக் கட்டுரையாக இது மலர்ந்துள்ளது. பல்லாயிரம் வருடங்களுக்கு முன் வ்யாஸ மஹரிஷி வேதத்தை நான்காகப் பிரித்தார். ரிக், யஜுர், ஸாம, அதர்வண என்றும் அவற்றிக்கு உட்பிரிவுகள் (சாகை) எவ்வளவு உள்ளன என்பதையும் ஸாமவேதத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளன என்பது பற்றியும் கூறுகிறார். அதன்படி சாமவேதத்தில் सहस्रवर्त्मा सामवेदः ஸாமவேதத்தில் 1000 சாகைகள் இருந்தன. தற்போது कौथुमशाखा तलवकारशाखा என்னும் இரண்டு மட்டும்தான் உள்ளன என்று விவரிக்கிறார். இவ்வாய்வுக் கட்டுரையை ப்ரம்ம ஸ்ரீ ராமகிருஷ்ணன் அவர்கள் எழுதியுள்ளார்.

(7) சுவடிப்பாதுகாப்பும் பாதுகாப்புணர்வும்:-

ஓலைச்சுவடி பாதுகாப்பு குறித்த ஆய்வுக்கட்டுரையாக இது மலர்ந்துள்ளது. எழுத்தின் வளர்ச்சி, வரிவடிவ எழுத்து கண்டுபிடிப்பு நாகரீகத்தின் முக்ய வளர்ச்சியாகும். கையாளுவதற்குக் கடினமாக உள்ள பொருட்களை விட்டுவிட்டு எழுதுவதற்கும் எடுத்துச் சொல்வதற்கும் எளிதாகக் கிடைக்கக் கூடிய பொருட்கள் எனச் சிலவற்றை இங்கே விரிவாகக் குறிப்பிட்டு அதன் பிறகு ஓலைச்சுவடி எந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் வளர்ந்தது என்ற விதமும், அதனைப் பாதுகாக்கவும்

பராமரிக்கவும் உள்ள விதங்கள் குறித்தும் மிகத் தெளிவான உரையை நிகழ்த்தினார். இவ்வாய்வுக் கட்டுரையை **Dr. P.** பெருமாள் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

(8) த்வைதமதம் - ஓர் அறிமுகம்:-

த்வைத மதத்தைக் குறித்த ஆய்வுக்கட்டுரையாக இது மலர்ந்துள்ளது. வேதத்தின் விசாரமாகவும் ஸாரமாகவும் உபநிஷதங்கள் விளங்குகின்றன. இவையே ஸித்தாந்தங்கள் (வேதாந்தம்) என கூறப்படுகின்றன. அத்வைத மதகோட்பாட்டையும், விசிஷ்டாத்வைத மத கோட்பாட்டையும் விளக்கி, த்வைதமதத்தில் ஹரியே ஸர்வோத்தமன் ஜகத் ஸத்யமானது ஜீவகணத்தில் பேதம் உண்டு பஞ்சபேதம் என்பதை தெரிவிக்கிறார். இவ்வாறு இக்கட்டுரை ஆராய்கின்றது. இவ்வாய்வுக் கட்டுரையை திரு. **S.N.** கிருஷ்ணா அவர்கள் எழுதியுள்ளார்.

(9) புராணங்களில் தேசபக்தி:-

இதிஹாஸ புராணங்கள் குறித்த ஆய்வுக் கட்டுரையாக இது மலர்ந்துள்ளது.

" इतिहास पुराणाभ्यां वेदं समुपबृंहयेत् "।

வேதங்களில் கூறப்பட்ட கருத்துக்களை அறிவதற்கு இதிஹாஸங்களும், புராணங்களும் ஸாதனமாக விளங்குகின்றன. தாயும், பிறந்த மண்ணும் ஸ்வர்கத்தைக் காட்டிலும் சிறந்தவை என்ற ப்ரஸித்தமான வசனத்திற்கேற்ப ஒவ்வொருவருக்கும் தத்தம் மாத்ருபூமி எனப்படும் தாய்நாடு மிகவும் போற்றத்தக்கது. அவ்வாறு நம் தேசத்தைப் போற்றும் குறிப்புகளையும் காணலாம். இவ்வாய்வுக் கட்டுரையை **Dr. T.V.** வாசுதேவா அவர்கள் எழுதியுள்ளார்கள்.

(10) Recent Development in Library

ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவன நூலகத்தைப்பற்றி இவ்வாய்வுக்கட்டுரை மலர்ந்துள்ளது.

நூலகம் தொடங்கப்பெற்ற விபரம், வளர்ச்சி, மற்றும் நூலகத்தின் நிலமை அவற்றில் இடம் பெற்றுள்ள புத்தகங்கள், சுவடிகள், கையெழுத்துப்ரதிகள், அச்சுப்ரதிகள் அவற்றில் உள்ள மொழிவாரியான விபரம், ஆய்வுநிறுவன வெளியீடு போன்ற தகவல்களை இந்த ஆய்வு நிறுவன ஆராய்ச்சியாளர் S. வெங்கடாசலம் அவர்கள் தொகுத்துள்ளார்.

(11) தென்னிந்திய சுவடிகளின் வளர்ச்சியும் விழிப்புணர்வும்:-

சுவடியியல் பற்றிய ஆய்வுக்கட்டுரையாக இது மலர்ந்துள்ளது.

சுவடி பற்றிய விவரம், அதன் காரணப்பெயர், அதன் தோற்றமும் வளர்ச்சியும் எவ்வாறு உள்ளது, அதனை பாதுகாக்க இந்திய சுவடி பாதுகாப்பு இயக்கம் ஒன்றின் பணிகள் பற்றிய விபரம் தென்தமிழகத்தில் விழிப்புணர்வு அவற்றின் எதிர்காலம் போன்றவை பற்றிய கருத்துக்களை மிகவும் தெளிவாக இவ்வாய்வு கட்டுரை தாங்கியது. இவ்வாய்வுக் கட்டுரையை இவ்வாய்வு நிறுவன சுவடி ஆராய்ச்சியாளர் J. வரதராஜன் அவர்கள் எழுதியுள்ளார்.

(12) சிவபூஜை - ஓர் அறிமுகம்:-

சைவசித்தாந்தத்தைப் பற்றி இவ்வாய்வுக் கட்டுரை மலர்ந்துள்ளது.

பரம்பொருள் என்பவர் யார்? அவர் இருக்கிறார் என்பதை எவ்வாறு அறிய முடியும்? அவருடைய அருள் கிடைப்பதற்கு ஆன்மாக்கள் என்ன செய்ய வேண்டும்? என்பதை சிறிது ஆராய்வதன் மூலம் சைவசித்தாந்தத்தின் ஒரு சிறிய அறிமுகத்தையும் சிவபூஜை பற்றியும் விவரிக்கிறது இக்கட்டுரை. இவ்வாய்வுக் கட்டுரையை சத்யே. சு. ஸ்ரீதர் சுவாமிநாதன் அவர்கள் எழுதியுள்ளார்.

ஸ்ரீமத்விகனஸமஹாகுரவே நம :

புராணங்கள் புகழும் ஸ்ரீவைகானஸம்

சங்கேந்தி டாக்டர் எஸ். முத்து
ஸம்ஸ்க்ருத விரிவுரையாளர்,
விவேகானந்தா கல்லூரி,
மைலாபூர், சென்னை - 4.

श्रुतिस्मृति नदी पूर्णं शस्त्रकल्लोलसङ्कुलम् ।
विष्णुभक्त्युदकं शुद्धं वन्दे श्रीविखनार्णवम् ॥
येनान्यक्लृप्तसूत्राणां नेत्रं निस्तिमिरीकृतम् ।
सूत्रं वैखानसं ह्येतत् चतुर्वर्गफलप्रदम् ॥

ஸ்ரீய : பதியான ஸ்ரீமன்நாராயணனுடைய பரமானுக்ரஹத்தால் நாம் இப்பூவுலகில் ஸர்வமங்களத்துடன் இருந்து வருகிறோம். நாம் கர்மபூமியான இந்த பூவுலகில் இருக்கும்போது நித்யகர்மானுஷ்டானங்களைப் கண்டிப்பாகச் செய்யவேண்டும்.

ஸ்ரீவைஷ்ணவத்தில் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய காலத்தை ஐந்து பகுதியாகப் பிரித்துக் கொண்டு அதில் தனது மனதை செலுத்தி பகவானின் விஷயத்தில் மட்டுமே ஈடுபடவேண்டும் என பரிந்துரை செய்துள்ளது.

प्रातः कालेऽभिगमनमुपादानं ततः परम् ।
मध्याह्न इज्यां कुर्वीत स्वाध्यायञ्चापराह्णके ।
योगं सायाह्नकाले तु पञ्चकाल उदाहृताः ॥

இப்படிப்பட்ட விஷயம் எங்கு சொல்லப்பட்டுள்ளது என ஆராயும்போது வேதத்தில் கூறியபடி தன்னுடைய தர்மங்களைச் செய்து அதன்வழி நடக்கவேண்டும் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் நம்மால் கடைபிடிக்கப்படும் இவை அனைத்தும் இதிஹாச புராணங்களிலும் கூறப்பட்டுள்ளதா? என ஆராய்ந்து பார்த்தால் புராணத்தில் கூறப்படும் விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது.

धर्मेचार्थे च कामे च मोक्षे च भरतर्षभ। यदिहस्ति तदन्यत्र यन्नेहास्ति न तत् क्वचित्।
इतिहास पुराणाभ्यां वेदं समुपबृह्मयेत्। बिभेत्यल्पश्रुताद्वेदः मामायं प्रतिरिष्यति।

ஆதலால் வேதத்தை அத்யயனம் செய்தாலும் அதன் வழி நடந்தாலும் வேதவ்யாஸர் அருளிய புராணங்களையும் படித்து அதிலுள்ள விஷயங்களை நாம் அறிந்து கொள்ளவேண்டும். இவ்வாறு படிக்கும்போது தர்மத்தின்மூலம் கடைபிடிக்கப்படும் ஸ்ரீவைஷ்ணவ ஆன்மிக வழிபாட்டில் பாஞ்சராத்ரம், ஸ்ரீவைகானஸம் என இரண்டு பிரிவுகள் உள்ளன. இதில் ஸ்ரீவைகானஸம் என்ற பகுதியைப் பற்றிய செய்திகள் புராணங்களில் எவ்வாறு கூறப்படுகிறது என்பதைக் காண்போம்.

விகந : (ஸ்) என்கிற சப்தத்தின் மூலம் விகனஸர் என்று கூறி அவருடைய வழியைப் பின்பற்றுபவர்கள் வைகானஸர்கள் என்றழைக்கிறோம். புராணங்களிலும் பகவான் ஆழ்ந்த சிந்தனையிலிருந்து தோற்றுவித்தவர் விகநஸர் என்று கூறப்படுகிறது.

यज्ञो देवस्य वितते महतो वरुणस्य च। ब्रह्मणोऽप्सरसं दृष्ट्वा रेतश्चस्कन्द कर्हिचित्॥
तत्प्रतीक्ष्य स पर्णेन संजुहाव विभावसौ। ततोऽर्चिषोऽभूद्व भगवान् भृगुरङ्गारतोऽङ्गिराः॥
अत्रैवान्वेषणादत्रिः खननाद्विखना मुनिः। खननं तत्त्वमीमांसेत्याहुः केचन सूरयः॥
अपरे निगमार्थानां खननादिति नश्श्रुतम्। ततस्तद्वंशजा विप्रा वेदवेदाङ्ग वेदिनः॥

ஸ்ரீமத்விகனஸரால் ஸ்ரீவைகாநஸம் நைமிசாரண்யத்தில் அத்ரி, புலஸ்த்யர், புலகர் போன்ற ரிஷிகளுக்கு உபதேசிக்கப்பட்டது.

काश्यपोऽत्रिर्मरीचिश्च वसिष्ठोंगिरसोह्यहम् भृगुः। पुलस्त्यपुलहश्चैव क्रतुश्च नवसंख्यकाः। एते विखनसः शिष्याः लोकानुग्रहकारिणः॥ ஸ்ரீவைகாஸகல்பசூத்ரம் விகனஸரால் பண்ணப்பட்டது. அதில் 18 ஸம்ஸ்காரங்களையும் 22 யக்ஞங்களையும் விரிவாகச் சொல்லி मात्रः ब्राह्मणः श्रोत्रियः अनूचानः ऋषिकल्पः ऋषिः मुनिः என்ற பெயர்கள் எதற்காக சொல்லப்படுகிறது என்பதை விளக்குகிறார். नारायणपरायणो निर्द्वन्द्वो मुनिः என்று ஒரு ரிஷி "அனைத்தும் நாராயணனே மற்ற பரம்பொருள் என்பது கிடையாது" என தீர்மானித்து நாராயணனை வழிபடுகிறாரோ அவர் முனி என்ற ஸ்தானத்தை அடைகிறார் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே நாராயணனை முழுவதுமாகக் கொண்டு தனது அர்ச்சையையும் கல்பசூத்ரத்தையும் ஸ்ரீவிகனஸர் இயற்றியிருப்பதால் இவரை ஸ்ரீமத்விகனோமுனி என்று அழைக்கிறோம். ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும் முனி என்கிற சப்தத்தை கூறியுள்ளார். तदेतदक्षयं नित्यं जगन्मुनिवराखिलम्। आविर्भावतिरोभावजन्मनाशविकल्पवत्। என்று ஜகத்ச்ருஷ்டியை சொல்லும்போது முநிகணங்களைப் பற்றி குறிப்பிடுகிறார். புராணாந்தரங்களிலும் अत्रैवान्वेषणादत्रिः खननाद्विखना मुनिः। खननम् तत्त्वमीमांसेत्याहुः केचन सूरयः। अपरे निगमार्थानां खननादिति नश्श्रुतम्। ततस्तद्वंशजा विप्रा वेदवेदाङ्गवेदिनः॥ முனி :॥ என்கிற சப்தத்தை ஸ்ரீவிகனஸருக்கு குறிப்பிட்டுள்ளனர்.

ஸ்ரீவைகாநஸர்கள் இந்த உலகத்தின் நன்மையின் பொருட்டும் அதனை காப்பாற்றுவதன் பொருட்டும் வாழ்கின்றர் என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் இரண்டாவது அம்சத்தில் ஒன்பதாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்படுகிறது. ततः प्रयाति भगवान् ब्राह्मणैरभिरक्षितः। वालखिल्यादिभिश्चैव प्रभुर्वैखानसैरपि। महात्माभिर्महात्मा वै जगतां पालनोद्यतः॥

இங்கு குறிப்பாக வாலகில்யர்கள் மற்றும் வைகாநஸர்கள் தனித்தனியான வம்சத்தை உடையவர்கள் என்பதை குறிப்பிடுகிறார்.

ஸ்ரீவைகானஸ கப்லசூத்ரத்தின்படி ஒரு மனிதன் வானப்ரஸ்த தர்மத்தை மேற்கொள்ளமுடியும் ஏனெனில் வானப்ரஸ்ததர்மத்தை கடைபிடிப்பதற்கு ச்ராமணகாக்னி மிகவும் முக்கியமாகும்.

ச்ராமணகாக்னிவிதானத்தை ஸ்ரீவிகனஸர் கூறியிருப்பதால் வானப்ரஸ்தாச்ரமத்தை யார் கடைபிடித்தாலும் அவர்கள் ஸ்ரீவைகானஸர்களாகவே கருதப்படுகிறார்கள்.

यस्मिन्नेव तु सम्प्रोक्तं सूत्रे विखनसा परम् । वनस्थानान्तु सर्वेषां विधिश्श्रामणकाभिधः ॥

वानप्रस्थास्ततस्सर्वे ये द्विजास्त्वन्यसूत्रिणः । तत् सूत्रविध्यनुष्ठानात् स्मृता वैखानसास्तु ते ॥

பத்மபுராணத்தில் ब्राह्मणं वृद्धहारीतं वैखानसमते स्थितः என வைகானஸத்தில் ப்ராம்மணர்கள் செய்ய வேண்டிய தர்மங்கள் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது என்கிறார். போதயனசூத்ரத்திலும் என்று வானப்ரஸ்தாச்ரமத்திற்கு வைகானஸர் கூறியபடி செய்யவேண்டும் என்கிறார். இப்படிப்பட்ட வானப்ரஸ்தாச்ரம விஷயத்தை ஸ்ரீமத்பாகவத புராணத்தில் 11வது ஸ்கந்தத்தில் கூறும்போது வானப்ரஸ்தர்கள் ச்ரௌதவிதியின்படி பகவானை பூஜிக்கலாகாது என்கிறார்.

वन्यैश्चरूपुरोडाशैर्निर्वपेत्कालचोदिताम् । न तु श्रौतेन विधिना मां यजेत वनाश्रमी ॥

கருடபுராணத்தில் ஸ்ரீவிஷ்ணுவின் பூஜையை ஸ்ரீவைகானஸர்கள்தான் செய்யவேண்டும். ஏனெனில் அவர்களுக்குத்தான் அத்வர்யுவாக இருந்துகொண்டு அனைத்து யாகங்களையும் செய்யும்படிக் கூறியுள்ளது. ஆதலால் ஸ்ரீவைகானஸர்களே ஸ்ரீவிஷ்ணுவை அர்ச்சிக்க உகந்தவர்களாவர்.

अध्वर्युभिर्विप्रवरैर्मते विखनसस्स्थितैः । तत्राऽराधनमीहस्व विष्णोरमिततेजसः ॥

மேலும் வேதத்தின்மூலம் ச்ரௌதகர்மானுஷ்டானங்ளையும் நன்றாக செய்வதற்காக மூன்று க்ராமங்களை ஏற்படுத்தினார். அவ்வாறே ஸ்ரீவைகானஸர்களும் ச்ரௌதகர்மாவை செய்வதற்காக மூன்று க்ராமங்களை ஏற்படுத்தினர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

कौषीतकीनां होतृणां ग्रामत्रयमकल्पयत् । अकल्पयश्च त्रीन् ग्रामान् वैखानसमहात्मनाम् ॥

ஆக்னேய புராணத்தில் திருப்புல்லாணி என்ற இடத்தில் அதாவது ஸேதுஸ்தலத்தில் ஒவ்வொரு யுகத்திலும் யக்ஷதேவதைகள் வந்து அங்கு

இருக்கும் எம்பெருமானை பூஜித்து வருவதாக கூறப்பட்டுள்ளது. அந்த ஸமயத்தில் அங்கு ஸ்ரீவைகானஸமுறைப்படி பூஜைகள் நடந்ததாகவும் அவர்களே எம்பெருமானை பூஜிக்க உகந்தவர்கள் என்றும் கூறியுள்ளது.

फुल्लशिष्यास्तु यक्षास्ते पूजयन्ति युगे युगे । वैखानसेन विधिना यथा फुल्लमुखाच्युतम् ॥

मानुषाः पूजयन्तीह वैखानसमते स्थिताः ॥

ப்ரம்மவைவர்த்த புராணத்தில் புஷ்கரதீர்த்த வைபவ வர்ணனையில் புண்யதீர்த்தம் என்பது கங்கையும், உயர்ந்த கடவுள் ஹரியும், வர்ணங்களுக்குள் ப்ராம்மணனும், ஆச்ரமங்களில் யசியும், ச்ருதிகளில் முதலானதாக ஏகாயனீ சாகையும், வ்யூஹ அவதாரங்களில் வாஸீதேவாவதாரமும், மூன்று மூர்த்திகளில் விஷ்ணுவும், சிவபெருமானில் ஸதாசிவனும், தர்மங்களில் வைஷ்ணவ தர்மமும், ஸ்ம்ருதிகளில் மநுஸ்ம்ருதியும், வேதப்ராம்ணர்களில் ஸ்ரீவைகானஸர்களும் அவர்களுடைய ஸூத்ரமும் எவ்வாறு சிறந்ததாக கருதப்படுகிறதோ அவ்வாறே கங்கையைவிட மிகவும் புண்யமாணது புஷ்கரதீர்த்தம் என்று கூறப்பட்டுள்ளது.

निम्नगानां यथा गङ्गा देवानां भगवान् हरिः । वर्णानां ब्राह्मणाश्श्रेष्ठा आश्रमाणां यतिर्यथा ॥

श्रुतीनामादिभूतानामादिरेकायनी यथा । व्यूहानामादिभूतस्तु वासुदेवो यथा वरः ॥

त्रिमूर्तीनां यथा विष्णुः शिवानान्तु सदाशिवः । धर्माणां वैष्णवो धर्मः स्मृतीनां मानवी स्मृतिः ॥

विप्राणां वेदविदुषां यथा वैखानसो वरः । यथा मुनीनां विखना आदिभूत उदाहृतः ॥

सूत्राणां तत्प्रणीतन्तु यथाश्रेष्ठतमं स्मृतम् । तथैव पुष्करो राजंस्तीर्थामुत्तमोत्तमः ॥

முதன்முதலில் பூலோகத்தில் ஸ்ரீமன்நாராயணனுடைய அர்ச்சையை ஆரம்பித்தவர்கள் ஸ்ரீமத்விகனஸரின் ப்ரதான சிஷ்யர்களான மரீசி, அத்ரி, கச்யபர், ப்ருகு என்று கருட புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

पुरा चतुर्मुखादेशाश्चत्वारो मुनयोऽमलाः । प्राणी वैष्णवं शास्त्रं भूमावभ्यर्चयन्नृपः ॥

मरीचिर्मन्दरे विष्णुमर्चयामास केशवम् । आदेशाद्ब्रह्मणो विष्णुं श्रीनिवासेऽत्रिरर्चयेत् ॥

कश्यपो विष्ण्वधिष्ठाने शुभक्षेत्रे भगुर्मुनिः । गङ्गाया दक्षिणे तीरे सीम्नि तस्यान्तिकेऽपि चः ॥

तत्सन्धौ शुचिषण्णामा भृगुणा स्थापितो हरिः ॥

வராஹபுராணத்திலும் கூர்மபுராணத்திலும் புராணாந்தரங்களிலும் பகவானுக்கு மிகவும் பிடித்தமானவர்கள் ஸ்ரீவைகானஸர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

अश्वत्थः कपिला गावस्तुलसी विखनास्तथा । चत्वारो मत्प्रिया राजन् तेषां वैखानसो वरः ॥

मच्चित्ता मद्गतप्राणा मयि सङ्गतमानसाः । अनन्यशरणा राजंस्तस्माद्वैखानसा वराः ।

यत्र वैखानसा विप्रा यत्र सन्ति गवां गणाः । यत्र बिल्वाः पलाशाश्च तत्र सन्निहितो हरिः ॥

ப்ருஹன் நாரதீயபுராணத்தில் ஸ்ரீவிஷ்ணுவை எப்பொழுதும் ஆராதனம் செய்து கொண்டிருக்கும் ஸ்ரீவைகானஸர்கள் சிறந்தவர்கள் என்றும் அவர்கள் நமஸ்கரிக்கத் தகுந்தவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

जगत्पवित्रास्ते नित्यं विष्णुमभ्यर्चयन्ति ये । दुर्वृत्ता वा सुवृत्ता वा पूजनीय विशेषतः ॥

ஸ்ரீவைகானஸத்தில் நித்ய நைமித்திக ச்ரௌத ஹோமங்கள் செய்தாலும் அந்தந்த ஹோமத்தின் முடிவில் கண்டிப்பாக ஸ்ரீவிஷ்ணுவை அர்ச்சிக்க வேண்டும் என்றும் அப்போது தான் அந்த ஹோமம் முழுமையை அடைகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. "अथाग्नौ नित्यहोमान्ते विष्णोः नित्यार्चा सर्वदेवार्चा भवति இவ்விஷயத்தை விஷ்ணுதர்மோத்தர புராணத்தில் எவன் ஒருவன் சிலை, தாரு, பஞ்சலோகம் போன்றவைகளால் ஸ்ரீவிஷ்ணுவை பிம்பமாகச் செய்து ப்ராகாரங்கள் விமானம் போன்றவற்றை அமைத்து வீட்டிலோ ஆலயத்திலோ ப்ரதிஷ்டை செய்கிறானோ அவன் அடிக்கடி அச்மேதயாகத்தைச் செய்த புண்ணியத்தை அடைவதாகக் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீவிஷ்ணுவுக்கு வஸந்தமண்டபம் மஹாமண்டபம் போன்றவற்றை அமைப்பவர்கள் வாழ்கையின் முடிவில் விஷ்ணுலோகத்தை அடைவர் என்றும் ஸ்ரீவிஷ்ணுவின் விக்ரஹத்தை செய்து கொடுப்பவர்கள் 60 ஆயிரம் வருடங்கள் ஸ்வர்கத்தில் இருந்து கொண்டு பகவானை ஸேவித்து இன்பத்தை அடைகின்றன என்றும் கூறப்பட்டுள்ளது.

यस्तु देवगृहस्यार्थं प्राकारं परिकल्पयेत्। स तु स्वर्गं समासाद्य विमानाधिपतिर्भवेत्॥

यस्तु देवालयस्याग्रे शिलादारुभिरेव वा। करोति तोरणं रम्यं स तु स्वर्गाधिपो भवेत्॥

यस्तु देवालयं विष्णोर्दारुशैलमृदा तथा। इष्टकाकल्पितं वापि कुर्यात्तस्य फलं बहु॥

अहन्यहन्यश्वमेधसहस्राणि करोति यः। प्राप्नोति मण्डपं विष्णोःयः कारयति मानवः॥

केशवस्य स तल्लोकमक्षय्यं प्रतिपद्यते। प्रतिमार्थं महाविष्णोस्साधयेदुत्तमां शिलाम्॥

षष्टिर्वर्षसहस्राणि स्वर्गलोके महीयते। इति॥

ஸ்ரீவைகானஸத்தில் பழங்கள், தேங்காய் போன்று அக்னியால் பக்வம் பண்ணப்படாத ப்ரஸாதங்களை பகவானுக்கு நிவேதனம் செய்யும்போது அஷ்டாக்ஷரத்தைச் சொல்லி நிவேதனம் செய்யவேண்டும். என்கிறார். இதை பத்ரபுராணம் குறிப்பிடுகிறது. அஷ்டாக்ஷர மந்த்ரத்தை ஜபம் செய்யும் மனிதனை ப்ரம்மன் பார்த்தால்கூட அவர் பரிசுத்தத்தை அடைகிறார் அவ்வாறு இருக்கையில் வைஷ்ணவர்களாவதில் அவர்களுக்கு கேள்வியில்லை என்கிறார்.

साष्टाक्षरञ्च मन्त्रेशं ये जपन्ति नरोत्तमाः।

तान् दृष्ट्वा ब्रह्महा शुद्ध्येत किं पुनः वैष्णवस्स्वयम्॥

ஸ்கந்தபுராணத்தில் ஸ்ரீவைகானஸ ஸூத்ரம் முதன்முதலில் ஏற்பட்டது என்ற விஷயம் காணக் கிடைக்கிறது. ப்ரம்மாவிற்கும் பெரியவராக விளங்கும் ஸ்ரீவிகனஸர் தனது ஸூத்ரத்தில் நாராயணனை அர்ச்சிக்கும் முறையையும் தர்மத்தையும் தனித்தனியாக எடுத்துரைத்திருக்கிறார்.

वैखानसीं महाशाखां स्वसूत्रे विनियुक्तवान्। पद्मभूः परमो धाता तस्मिन्नाराधनत्रयम्॥

उक्तवान् निगमार्थानामाचारं प्रविभागशः॥

பத்மபுராணத்தில் அஷ்டாக்ஷர ஜபங்களையுடைய ஸ்ரீவைகானஸர்கள் பத்னிபுத்ரர்களுடன் க்ராமம் நகரம், வனம் போன்ற இடங்களில் ஜபம்

செய்யும் தகுதியையுடையவர்கள் என்றும் அவர்கள் இருக்குமிடம் மிகவும் பரிசுத்தமானது என்றும் கூறப்பட்டுள்ளது.

अष्टाक्षरपरो नित्यं पुत्रदारासमन्वितः। वने वा पत्तने वापि जपेद्वैखानसः शुचिः॥

இவ்விஷயத்தை ஸ்ரீவைகானஸ அர்ச்சா சாஸ்த்ரத்தில் குறிப்பிடும்போது ஸ்ரீவைகானஸ பகவத் சாஸ்த்ரம் என்பது ஸௌம்யம் இதைக்கொண்டு க்ராமம் நகரம் பட்டணம் அரண்யம் போன்ற இடங்களில் அர்ச்சிக்கலாம் என ப்ராகீர்ணாதிகாரத்தில் 30வது அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளார்.

वैष्णवं द्विविधं शास्त्रं मुनिभिः परिकीर्तितम्। वैखानसं वैदिकं स्याद्वैदिकैरर्चितं द्विजैः॥

पाञ्चरात्रमथाग्नेयं अवैदिकमतार्त्विकम्। तापादि पञ्चसंस्कार दीक्षावद्भिः समर्चितम्॥

अश्रीकरं प्रोक्तं केवलामुष्मिकफलप्रदम्। सौम्यं सर्वत्र संपूज्यं ग्रामादिषु विशेषतः॥

वैखानसं पाञ्चरात्रं वैदिक तन्त्रिक क्रमात्। ऐहिकामुष्मिक फलप्रदं सौम्यं प्रकीर्तितम्॥

இவ்வாறு அனைத்து விஷயங்களையும் ஆராய்ந்து பார்க்கும்போது எப்பொழுதும் ஸ்ரீமன்நாராயணனுடைய அர்ச்சையையே முக்கியமாகக் கொண்டிருக்கும் ஸ்ரீவைகானஸர்களே अच्छिद्रपञ्चकालपरायणர் ஆவர். இவர்களால் ஆராதிக்கப்படும் ஸ்ரீவிஷ்ணு ஆலயங்கள் மிகவும் சிறந்தவைகளாகும். ஆதலால் அனைவரும் வேதம் இதிஹாசம் புராணங்களால் புகழப்படும் ஸ்ரீவைகானஸ ஸன்னிதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவிஷ்ணுவை விசேஷமாக வழிபட்டு ஸ்ரீமன்நாராயணனுடைய அனுக்ரஹத்திற்கு பாத்திரராகும்படி ப்ரார்த்திக்கிறேன்.

मा गा इत्यपमङ्गलं व्रज पुनस्नेहेन हीनं वचः गच्छेति प्रभुता यथेच्छसि तथा कुर्विन्युदासीनता।
इत्यालोच्य बहुप्रतर्कमवदत् कृष्णं तु धर्मात्मजः स्मर्तव्या वयमादरेण भवता यावत् पुनर्दर्शनम्॥

॥ मङ्गलानि भवन्तु ॥

"பொதுவாழ்க்கையில் நீதிஸ்லோகங்கள்"

வித்வான் K. ஜெகந்நாதன்
ஸம்ஸ்க்ருத பண்டிதர்,
சேலம்.

நீதி ஸ்லோகங்களை நமக்கு அளித்த அந்த முதல்பாஷையின் பெருமை - பின் அதோடு "சுபாஷிதம்" என்றால் என்ன அதற்கு விளக்கம் "நீதிநெறி" - இதைப்பற்றி குறிப்பு - பின் இந்த நீதிபோதனைகளை தோற்றுவித்த பல்வேறு புலவர்கள், மஹான்கள், மஹரிஷிகள் - அவர்களும் அவர்களால் இயற்றப்பட்ட நீதிநூல்களின் பெயர்களும் - அதில் நான் எடுத்துக்கொண்ட நீதிநூல் - அதன் ஆசிரியர் (கர்த்தா) எழுத்தாளர் - அவரைப்பற்றி சிறுகுறிப்பு - பின் அவற்றிலிருந்து ஒவ்வொரு பாகத்திலிருந்தும் ஒவ்வொரு ஸ்லோகங்களும் அவற்றின் விளக்கவுரையும்கூறி - இதற்கு நிகராக நம் தமிழ்மொழியில் சிறந்த படைப்பாளர் வள்ளுவர்பிரானின் சில குறள்களும் பற்றி விளக்கி - எனக்குத் தந்த இந்தச் சீரிய தலைப்பை - முடிவுரை செய்கிறேன்.

மொழிச்சிறப்பு

1. इयं भाषा अति प्राचीमत ए सर्वसां भाषाणां
जननो सर्वथा विशुद्धा नियम बद्धा परम मधुरा
सर्ला सरसा एवं सर्वगुण सम्पन्ना सदृशी
अन्याभाषा नास्ति इह संसारे ।

2. சுபாஷிதம் - सुभाषितम् இப்பேர்ப்பட்ட இம்மொழியில் அமைந்துள்ளது பற்றி -

भाषास्तु मुख्या मधुरा दिव्या गीर्वाण भारतो
तस्यांहि काव्यं मधुरं ततापि च सुभाषितम्

பல்வேறு மொழிகளில் மிகவும் முக்கியமானது இந்த சமஸ்கிருதமொழி. அது மிகவும் இனிமையானது. மேலும் தெய்வீகத்தன்மை வாய்ந்தது. வழக்குமொழியாயும் உள்ளது. அப்பேர்ப்பட்ட மொழியில் எண்ணில் அடங்கா காவ்யங்கள் (காப்பியங்கள்) உள்ளன அவைகள் மிக இனிமையானவைகள் மேலும் அதில் சுபாஷிதங்கள் கணக்கில்லாமல் அமைந்துள்ளது. அவைகளும் நம் வாழ்விற்கு இனிமை தருபவை ஆகும்

சுபாஷிதம் - सुभाषितम्

शोभनानि च तानि भाषतानि च सुभाषितानि

सुभाषितम् என்பது நன்மொழி, நல்லுபதேசங்கள், நன்னெறிகள் நல்வார்த்தைகள் என்றெல்லாம் விளக்கம் கூறிக்கொண்டே போகலாம். பொதுவாக ஒரு மனிதனின் வாழ்க்கைக்கு தேவையான நன்னடத்தைகள் பற்றிய விஷயங்கள் அடங்கிய நீதி ஸ்லோகங்களின் (நீதி குறள்களின்) கோர்வைகள் ஆகும். இக்காலத்திலும் கூட்டுக்குடும்பமாக ஒருங்கிணைந்து வாழ்ந்த முன்காலத்தில் நமது வீடுகளில் வயதான பாட்டி மற்றும் பெரியோர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களின் அறிவுரைகளை வழங்கினர் வாழ்க்கை முறைக்கு தேவையான நீதி போதனைகளை செய்யத்தக்கது, செய்யக்கூடாதது என்ற அளவில் ஆணித்தரமாககூறுவர். அங்கனம் கூறும்பொழுது கூறக்கேட்பவர்களுக்கும் சினம் வந்தாலும் அந்த நீதிபோதனையின் உண்மை சாரம் தன் வாழ்வில் இக்காலத்தில் மட்டுமல்லாது எதிர்காலத்திற்கும் அது நன்மை பயக்கும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்த காரணத்தினால் அந்த நீதி போதனைகளை வாழ்வில் கடைபிடித்து இனிமையான வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். மூத்தோர் சொல்லும் முது நெல்லிக்கனியும், முன்பு துவர்க்கும் பின்பு இனிக்கும் என்பது முதுமொழி. பெரியோர் அறிவுரை இன்றைய இளந்தலைமுறைக்கு

எட்டிக்கசப்பாக தெரிகிறது. பிற்கால வாழ்வில் அதன் அருமை பெருமைகளை துயரங்கள் பல சந்திக்கையில் அனுபவத்தில் உணர்ந்து தெளிகின்றனர். நீதிபோதனைகள் துன்பம் என்ற நோய் நீக்கும் அற்புத மருந்து. நல்வாழ்வைத்தரும் அருமருந்து ஆகும் தற்காலத்தில் போதிக்கும் யாவருக்கும் அவமரியாதை கிடைப்பதால் அப்போதனைகள் இன்று சொல்லும்படியான காலம் இல்லை எனலாம். கலியுகத்தில்தான் நீதி, தர்மம் இவற்றை மேம்பட்டு போதிக்கவேண்டும் என்ற காரணத்தினால் நம் மூதாதையர்கள், மஹான்கள், பெரியோர் முதலியோர்கள் சொல்லிவைத்தது. இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் பொருந்தும். பொது வாழ்வில் நன்னெறி மிகவும் குன்றியிருக்கும் இக்காலகட்டத்தில் மஹாகவி பர்த்ருஹரியின் நீதிநெறிகள் மிகவும் பயனுள்ளவை ஆகும்.

சுபாஷிதத்தின் மூலம் நாம் பெரும் பயன்களும் அதனை ஆண்டு அனுபவித்து நமக்கு நன்னெறியை விளக்கும். எழுத்தாளர்களின் பெருமையும் அவர்களின் படைப்புகளின் பெயர்களும் பற்றி நாம் கீழே காண்போம்.

நமது மிகப்பழமையான இதிகாச ஆசிரியர்கள், முதற்கவி, ஆதிகவி, வால்மீகியும், பின் மகரிஷி வேத வியாசரும் வாழ்வியல் பற்றி பல்வேறு விஷயங்களை அளித்துள்ளனர். வாழ்வியல் - அதாவது நீதி நூல் அதன் படைப்பாளர்கள் பலர் உள்ளனர்.

அவர்களும் அவர்களின் படைப்பும்:-

1. சாணக்கியர் - அர்த்தசாஸ்த்ரம்
2. விதுரர் - விதுர நீதி
3. பஞ்சதந்திரம் - விஷ்ணுசர்மா
4. ஹிதோபதேசம் - நாராயணசாஸ்த்ரி

சாஸ்த்ர நீதி நூல்கள்:-

யாக்ஞவில்க்யர் - யாக்ஞவல்க்யஸ்முருதி
மனு - மனுஸ்முருதி
கௌதமர் - கௌதமர் சூத்ரம்

இவைகள் அனைத்திற்கும் நிகரான சமீபகாலத்திய नीतिबोधक நீதிபோதக நிபுணர் - भर्तृहरि பர்த்ருஹரி இவர் சமஸ்கிருதமொழியில் சீரிய வல்லுநர். அம்மொழியின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக கம்பீர தோற்றத்தில் அம்மொழியின் ஆழ்ந்த நடையில் எளிதே விளக்கம் அறிய இயலாத அளவில் அவரின் அம்மொழித்திறன் ஆர்வமும் சிறப்பும் அமைந்துள்ளது எனது ஒரு மொழிபெயர்ப்பு வல்லுனர் மஹாபண்டிதர் ஸ்ரீமான் கடலங்குடி நடேச சாஸ்த்ரிகள் கூறியுள்ளார்கள்.

இப் பர்த்ருஹரியின் அறிவாழமிக்க படைப்புகள். நமது புராண தர்மம் அதன் கோட்பாடுகள், கலாசார பாரம்பரியம் இவற்றின் அடிப்படையில் அமைந்து மனக்கிளர்ச்சியை ஊட்டுகின்றன. அவர் படைப்புகளுக்கு “சமஸ்கிருத மொழி ஒன்றுதான் கைகொடுக்கமுடியும் ஏனெனில் அவர் காவ்ய கருத்துகளை பிறமொழியில் அதேபோல், அதேசொல்நயம், நுட்பம் ஆகிய இவற்றுடன் மொழிபெயர்ப்பது மிகக்கடினம்” என்று கூறி விளக்கம் அளித்து மொழிபெயர்த்துள்ளார் “இந்த भर्तृहरि நீதி சதகத்திற்கு” இப்புலவர் பற்றி சிறிது பார்ப்போம்:- இவரைப்பற்றி நமது சரித்திர ஏடுகளில் பதிவாகவில்லை அதனால் நிச்சயமாக எதுவும் அறியமுடியவில்லை இருப்பினும் கர்ணபரம்பரையாக சிற்சில துணுக்குகள் நிகழ்ச்சி குறிப்புகள் மட்டுமே உலவி வந்திருக்கின்றன. கி.மு ஒன்றாம் நூற்றாண்டில் உஜ்ஜயினி நகரத்தில் அரசராக இருந்து பின் உலகவாழ்க்கையில் வெறுப்பு வந்து ஆட்சியை விட்டு விலகி ஆன்மீக விஷயங்களில் ஈடுபட்டார். அவர் அவ்வாறு ஆன்மீகத்தில் ஈடுபடவே நமக்கு இந்த படைப்பான “நீதி சதகம்” ஆகிய அறிய நீதிக்களஞ்சியம் அது தன் அனுபவ பூர்வமாக அமைந்திருக்க வேண்டும் என்று அவர் கருத்துகளின் மூலம் நமக்கு புலப்படுகிறது.

இவர் நம் தமிழ்மொழியில் சீரிய நீதிநெறி படைப்பாளரான வள்ளுவர்பிரானுக்கு ஒத்த கருத்துடையவர் ஆவர். ஏனெனில் இவரை சமஸ்கிருத வள்ளுவர் என்றும் கூறலாம். அவர் அறம், பொருள், இன்பம் नीतिशतक நீதிசதகம், अर्थ शतक பொருள், இன்பம் शृङ्गारशतक என மூன்றின் தலைப்பில் ஒவ்வொன்றுக்கும் நூறு, நூறு, நூறு ஆக மொத்தத்தில் - வள்ளுவர் 1330 குறள்களின் மூலம் கூறிய அனைத்தையும் 300 குறள்களிலேயே அடக்கி விவரித்துள்ளார். தற்போது அந்த

नीतिशतक த்திலிருந்து அதில் 10 அதிகாரம் - உன்னது பத்ததி என்பர் அதிலிருந்து ஒவ்வொரு ஸ்லோகமும் அதன் விளக்கமும், பின் முக்கிய நீதி நூல்களிலிருந்து ஒவ்வொரு ஸ்லோகங்களும் அவற்றின் விளக்கங்களும் காண்போம்.

மனுஸ்ம்ருதியிலிருந்தும் சாணக்யநீதியிலிருந்து, பின்பு விதுர நீதியிலிருந்தும், அதற்குபின் ஹிதோபதேசங்களிலிருந்தும் அதைத் தொடர்ந்து ஒவ்வொரு ஸ்லோகங்களை பின்பு தலைப்புக்கு ப்ரதான விஷயமுமான ப்ராதனராஜரிஷி பத்ருஹரியின் கீதசதகத்திலிருந்து ஒவ்வொரு தலைப்பிலிருந்தும் ஒவ்வொரு ஸ்லோகங்களையும் எடுத்து விளக்க உள்ளேன்.

मनुस्मृति மூத்தவர் சட்டங்களை வகுத்தவர்

वैवस्वतो मनुर्नाम माननी योगनीषिषं என்ற தலைப்பின்படி Law Of Manu என்பர் அவர் கூறியவற்றில் முதன்மையான கருத்து - மனு.

अभिवादन शीलस्यनित्यं कृधोपसेविनः।

चत्वारि तस्यवर्धन्त् आयुर्विद्या यशो बलम्॥

எவன் ஒருவன் நமது வயது முதிர்ந்த பெரியோர்களையும் பெற்றோர்களையும் தினமும் வணங்கி அவர்களுக்கு சேவை செய்கிறானோ அவனுக்கு நீண்டஆயுள், நல்லகல்வி, நற்புகழ், உயரிய வலிமை ஆகியநான்கையும் அவர்களின் ஆசிர்வாதத்தின் மூலம் மேலும் மேலும் வளரும் என்கிறார்-மனு அவர்கள்

विदुरनीति விதுரர்

पञ्चैव पूजयंल्लोके यशः प्राप्नोतिकेवलम्।

देवान् पितृन् मनुष्यां च भिक्षुनतिथि पञ्चमान्॥

தேவர்கள், மூதாயர்கள், சாதுக்கள் போன்ற உயர்ந்த மனிதர்கள், பிச்சைக்காரர்கள், (சந்நியாசி போன்ற பெரியோர்கள்) விருந்தாளிகள்

ஆகிய ஐவரையும் எவன் ஒருவன் நன்கு உணர்ந்து உபசரிக்கிறானோ அப்பேர்ப்பட்டவன் பெரும் புகழை அடைகிறான்.

हितोपदेशम् = நாராயணசாஸ்த்ரி

जलमग्निर्विषं शस्त्रं क्षुद्व्याधिः पतनं गिरेः ।
निमित्तं किञ्चिदा साध्य देहि प्राणैर्विमुच्यते ॥

Cause Of Death என்பர் = ஒருமனிதன் நீர், நெருப்பு, விஷம், ஆயுதம், பசி, உடல்நிலை சரியில்லாமை (வியாதி) உயர்ந்த இடத்திலிருந்து கீழே விழுதல் ஆகிய இந்த காரணங்களில் ஒன்றை அடைந்துதான் பெற்றதுதான் அதனை காரணமாக வைத்துக்கொண்டுதான் உயிர் இவ்வுடலை விட்டு பிரிகிறது என்பது நிச்சயம்

चाणक्य नीति சாணக்யர் =

विद्यामित्रं प्रवासे षु भार्यामित्रं गृहेषुच ।
व्याधितस्यौप्यधं मित्रं धर्मोमित्रं मृतस्यच ॥

யார் யார் எந்தவிதத்தில் நட்பு உடையவர் ஆகிறார்கள் என்பதை சாணக்யர் விளக்குகிறார். ஒருவனுக்கு அவன் கற்ற கல்வி பல்வேறு இடங்களில் (வெளிநாடு, மற்ற தேசங்களில்) நண்பனாகும் மனைவி வீட்டில் நட்புடையவளாகிறாள் வியாதி உள்ளவனுக்கு மருந்து நட்பாகிறது. நாம் செய்த தர்மமானது அவரவர்கள் இறந்தபின் மற்றபிறவிக்கு அல்லது மோஷம் செல்ல நட்பாகிறது என்று கூறுகிறார். (அ) மற்ற பிறவிக்கு காரணமான நட்பாகிறது.

पञ्चतन्त्रम् = விஷ்ணுசர்மா

अरक्षितं तिष्ठतिदैव रक्षितम्
सुरक्षितं दैव हुतं विनश्यति ।
जीवत्यनाथोपि वनेविसर्जितः
कृत प्रयत्नोपि गृहेपिनश्यति ॥

நம்மால் காப்பாற்றபட முடியாது என்று ஒன்று இருந்தால் அதை தெய்வத்தால் காப்பாற்றப்படும். நம்மால் நன்கு காப்பாற்றபட்டதையும் தெய்வம் நினைத்தால் அதை அழிக்கப்படும் பிழைக்காது என்று பொறுப்பற்று காட்டில் விட்டுவிட்டாலும் அது பிழைத்துவிடவேண்டும் என்று விதியிருந்தால் அது நன்கு பிழைத்துவிடும். நல்ல முயற்சி எடுத்து வீட்டிலேயே ஜாக்ரதையாக வைத்து காத்தாலும் அது அழிந்துவிடும்.

नीतिशतकम्

இது நூறு ஸ்லோகங்களை கொண்டது. இது பத்து பாகமாக விவரிக்கப்பட்டுள்ளது. அதில் ஒவ்வொரு பாகத்திற்கும் (पद्धति) பத்ததி என்று பெயர்.

அதில் ஒவ்வொன்றிலும் 10 x 10 ஸ்லோகங்கள் அடங்கப்பெற்றது. ஆகமொத்தம் 100 ஸ்லோகங்கள் ஆகும்.

பிரிவுகள் :-

मूर्ख पद्धति	विद्वद् पद्धति	मानशौर्य पद्धति
अर्थ पद्धति	दुर्जन पद्धति	सुजन पद्धति
परोपकार पद्धति	धैर्यपद्धति	दैवपद्धति

कर्मपद्धति - என்றெல்லாம் பிரிவுகளை பெற்றுள்ளது நீதிசதகம் ஆகும்

- मूर्खपद्धति ஒவ்வொன்று ஒவ்வொன்றால் தீர்வுகாண இயலும். ஆனால் முட்டாளுக்கு ஒரு மருந்தும் இல்லை. அதாவது ஒரு தீர்வும் அவனை அடக்க இயலாது என்பதைப்பற்றி:-

शक्योवारयितुं जलेन हुतभुक् शूर्पेण सूर्या आतपो

नागेन्द्रो निशितङ्कुशेन समदो दण्डेन गर्दभः गौः ।

व्याधिः भेषज संग्रहैः च विविधैः एन्त्रै प्रपोगैः विषं

सर्वस्य औषधं अस्ति शास्त्र विहितं मूर्खस्य नास्ति औषधम् ।

கருத்து:- நெருப்பும் ஜலத்தினால் அனைக்கக்கூடும். ஸூர்ய வெப்பத்தினால் ஏற்படும் தாபம் குடையாலோ விசிறியாலோ தனிக்கக்கூடும். மதம் பிடித்தயானையையும் கூரிய அங்குசத்தால் அடக்கமுடியும். சரீரத்தைப் பற்றிய வியாதியை மருந்துகளைக் கொண்டு போக்கலாம். பற்பல மந்திரங்களை உபயோகித்து விஷத்தை (சரீரத்திலிருந்து) போக்கலாம். இவ்வாறு ஒவ்வொரு உபாதைக்கும் சாஸ்த்ர உசிதமான மருந்துகள் உள்ளன. ஆனாலோ மூர்கத்தனத்திற்கு மட்டும் (முட்டாள்) மட்டும் மருந்து (மரந்து) என்பதே கிடையாது.

- विद्वत् पद्धति = வித்வத்பத்ததி - வித்வான்களின் இயல்பு இயற்கையான பண்புள்ளவர்கள் - மற்றும் அனைத்து குணங்களும் பொருந்தியவர்கள் ஆவர் - பர்த்ருஹரி அவர்கள் கூறுவதைப் பார்ப்போம்.

केयूरानि नभूषयन्ति पुरुषं हारा न चन्द्र उज्वला

न स्नानं न विलेपनं न कुसुमं न अलंकृता मूर्धजाः ।

वाणी एका समलङ्करोति पुरुषं या सेस्कृता धायते

क्षीयन्ते अखिलभूषणानि सततं वाग्भूषणम् भूषणम् ॥

கைகளில் அணியும் கங்கணங்களோ, கழுத்தில் மாலைகளோ சந்திரனின் ம்ருதுவான ஒளிக்கிரணங்களோ, பளபளக்கும் தங்கமோ அடிக்கடி செய்து கொள்ளப்படும் சரீரசுத்தியோ, வாஸனை த்ரவ்யபூச்சோ, சிகையில் அணியும் புஷ்பங்களோ, ஆபரணங்களோ, ஒரு புருஷனை அலங்கரிப்பதில்லை அவன் நாவில் குடிகொண்ட வித்யாரூபிணி ஸரஸ்வதியே ஆபரணம். மற்ற அலங்கரணங்கள் அழிவுறுபவை.

- मानशौर्य पद्धति = மானமுள்ளோர் (அ) சூரர் இயல்பு.

सिंहः शिशुरपि नियतति मदमलिन कपोल मित्तिषु गज़ेषु ।

प्रकृतिः इयं सत्रवतां न खलु इयः तेजसं हेतुः ॥

ஒரு சிங்கக்குட்டி கூட பயமின்றி மதம் பிடித்த யானையின் மதநீர் உறைந்த வெடிப்புகளுடன் கூடிய மஸ்தகத்தில் பாய்ந்து தாவுகிறது.

மனோபலம் (சௌர்யம்) உள்ளோர்க்கு இது ஸாதாரண இயல்புதான் அவர்களின் வீரச் செயலுக்கு வயது ஒரு பொருட்டாவதில்லை. (உ.ம்).கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது. आहारो गुरुस्वः कीर्तिक्षमदति என்பர் சமஸ்கிருதத்தில்.

- अर्थ पद्धति = செல்வத்தின் தன்மை

धनमार्जय काकुस्थ धनमूलं इदं जगत् என்பர் - அதுபோல் நண்பா பணத்தை சேகரித்துக்கொள் இவ்வுலகம் பணத்தால் ஆனது என்று. அதுபோல் -

यस्य अस्ति वित्तं सनरः कुलीनः सर्याण्डतः स क्षुतवान् गुणज्ञः ।

स एव वक्ता सच दर्शनीयः सर्वेगुणाः काञ्चनं आश्रयन्ति ॥

செல்வச்செழிப்புள்ளவன் இவ்வுலகில் உயர்ந்தவன், கல்வி அறிவுள்ளவன், உயர்குலத்தில் பிறந்தவன், புகழத்தகுந்தவன், குணசீலன், பார்க்கத்தகுந்தவன் அவனே பேச்சாளி இவை அனைத்தும் செல்வத்தின் அடிப்படையிலேயே சீர்தூக்கி பார்க்கப்படுகின்றன (இது என்ன விந்தை)

- दुर्जन पद्धति = தீயோர் இயல்பு

अकरुणत्वं अकारण विग्रहः परधने परयोषिति चस्पृहा ।

सुजन बन्धुजनेषु असहिष्णुता प्रकृतिसिद्धं इदं हिदुरामृनाम् ॥

நெஞ்சிரக்கம் இல்லாமை காரணமின்றி சச்சரவு செய்தல் பிறர் உடமைகளிடத்தும், ஸ்த்ரீகளிடத்தும் ஆசை நல்லோர் (நண்பர்) உறவினரிடம் ஸஹிப்புத்தன்மையில்லாத போக்கு இந்த குணங்கள் துஷ்டர்களின் இயற்கையான ஸ்வபாவம் ஆகும்.

- सुजन पद्धति = சான்றோர் இயல்பு

वाञ्चा सज्जनसंगतौ परगुणे प्रीतिः गुरौ नम्रता

विद्यायां व्यसनं स्वयोषितिरतिः लोक अपवादात् भयम् ।

भक्ति शूलिनो शक्तिः आत्मदमने संसर्गमुक्तिः खलैः

एते येषुवसन्ति निर्मलगुणाः तेभ्यो महद्भ्यो नमः ॥

ஸாதுக்களின் சேர்க்கையில் இச்சை (விரும்புவது) பிறர் நற்குணங்களில் ப்ரியம், (விருப்பம்) குருவிடம் பணிவு, கல்விகற்பதில் விடாமுயற்சி, மனைவியிடம் சிற்றின்பம். ஜனங்களின்பழிச் சொல்லுக்கு பயம், பரமேஸ்வரனிடத்தில் பக்தி, தன்னடக்கத்தில் முனைப்பு, துஷ்டர்கள் தொடர்பு இல்லாமை-இவ்வாறான நற்குணங்கள் உடைய சிறந்தமகான்களுக்கு நமஸ்காரம்

- परोपकार पद्धति = பரோபகார இயல்பு

पापात् निवारयति योजयति हि ताय गुह्यं निगूहति गुणान् प्रकटीकरोति ।
आपद्गतं च न जहाति ददाति काले सन्मित्र लक्षणं इदं प्रवदन्ति सन्तः ॥

ஒரு உற்ற நண்பன் என்பவன் தீயசெயல்களிலிருந்து மீட்பவன், நன்மை பயக்கும் கார்யங்களில் ஈடுபடுத்துபவன், நல்லகுணங்களை பரைசாற்றுபவன் ஆபத்தில் சிக்கியவனைக் கைவிடாதவன். உரித்த காலத்தில் பொருளுதவி செய்பவன். இவை உற்ற நண்பனின் உத்தம குணங்கள்(லக்ஷணங்கள்) என்று ஸத்புருஷர்கள் கூறுவார்கள்.

- धैर्य पद्धति

निन्दन्तु नीति निपुणाः यदि वास्तुवन्तु लक्ष्मीः स एविंशति गच्छतु वा यथेष्टं ।
अद्यैवा मरणं अस्तु युगान्तरे वा न्यायात् पथः प्रविचलन्ति पदं न धीराः ॥

நீதி சாஸ்த்ர வித்பன்னர்கள் தூஷிக்கட்டும் அல்லது புகழட்டும். ஐஸ்வர்யலக்ஷ்மி தன்னிஷ்டபடி வரட்டும் வராமலேயே போகட்டும். இன்றைக்கோ அல்லது யுகம் முடிவுறும்போதோ மரணம் நேரட்டும் புத்திமான்கள் எப்பொழுதும் ந்யாயமான வழிகளில் சென்று நேர்மையைக் கடைப்பிடித்தே செயல்படுகிறார்கள்.

- अथ दैव पद्धति = தெய்வச்செயலின் இலக்கணம்

भग्नाशस्य करण्डपिण्डित तनोः म्लानेन्द्रियस्य क्षुधा
कृत्वारकुः विवरं स्वयं निपतितो नक्तं मुखे मोगिनः ।
तृप्तः तत् पिशितेन सत्वरं असौ तेनैव यातः यथा
स्वस्थाः तिष्ठत दैवं एव हिपरं वृद्धौक्षये च कारणम् ॥

இரை விருப்பம் நிறைவேறாது பசியினால் வருந்தி புலன்கள் சோர்வுற்ற ஒரு எலி இரவில் ஒரு கூடையில் (பெட்டியில்) துளைசெய்து உள்ளே நுழைந்து அங்கு ஏற்கனவே தங்கிய பாம்புக்கு இரையாகிறது. பாம்போ எலியை விழங்கி பசியைத் தீர்த்துக்கொண்டதோடல்லாமல் எலி செய்த துவாரம் வழியே ஸ்வந்தமாக வெளிச்செல்கிறது இவ்வுலகில் முன்னேற்றத்துக்கும் (வளர்ச்சிக்கும்} அழிவுற்கும் தெய்வம் அல்லவோ ஒரே காரணம்.

- कर्मपद्धति = கர்ம, சுர்பலன் இலக்கணம்

भीमं वनं भवति यस्य पुरं प्रधानं सर्वोजनः स्व जनतां उपायाति तस्य ।
कृत्स्ना च भूः भवति सन्निधि रत्नपूर्णा यस्य अस्ति पूर्व सुकृतं विपुलं नरस्य ॥

எவனுக்கு அடர்ந்த பெரியகாடும் நகரமாகிறதோ அவனுக்கு முக்யமாக எல்லா ஜனங்களும் பந்துக்களாகிறார்கள் எவனுக்கு முன்பிறவிகளில் செய்த புண்யங்கள் பலிக்கின்றனவோ, அவனுக்கு பூமி முழுவதும் விலையுர்ந்த ரத்னம் முதலிய தாதுபொருள்கள் நிறைந்ததாகவும் வசமாகிறது.

பொது வாழ்க்கையில் வள்ளுவரின் குறள்களும் = அதற்குச்சமமாக சம்ஸ்கிருதஸ்லோகங்களும்

सान्त्व वचनम् = இனியவை கூறல்:-

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

महाफले प्रसात्वने स्थिते कटूक्ति भाषणम् ।
सुपक्तिमेकले स्थिते शलाटुकादिच्चर्वणम् ॥

परोपकार = செய்நன்றியறிதல்:-

நன்றி மறப்பது நன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

परोपकार विस्मृतिर्नि युज्यते मनागपि ।
अपक्रियातु तत्कृता तदैव विस्मृतावरा ॥

कीर्ति = புகழ்:-

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்.

यशः प्रसाधनाक्षमः स्वयं स्वनिन्दतं विना ।
स्वदोष भाषिणं परं प्रदूषयेकृथं तराम् ॥

ஸ்ரீ வைகானஸ ஆகமத்தில் நித்யார்ச்சனா விதி

Dr.S.சுதர்சன்

நூலகர், சரஸ்வதி மஹால் நூலகம்,

தஞ்சாவூர்.

श्रेष्टे श्रीगुरुवर्याय प्रस्तुत ग्राम वासिने ।

केशवार्चित सन्तुष्टे तस्मै प्रज्ञाय वन्दनम् ॥

नित्यार्चन निरताय दयापूर्ण स्वरूपिणे ।

आगमप्राज्ञरूपाय परस्मै गुरवे नमः ॥

अखण्ड मण्डलाकारं व्याप्तं येन चराचरम् ।

तत्पदं दर्शितं येन तस्मै श्री गुरवे नमः ॥

இப்பூவுலகில் வாழ்க்கையை அமைதியாக நடத்த மிகவும் இன்றியமையாததாக விளங்குவது மதங்கள். அவை அனைத்தும் இறை வழிபாட்டுடன் தொடர்புடையதாக விளங்குகின்றது. இது மதத்திற்கு மதம் சிற்சில வேறுபாடுகளுடன் காணப்படுகிறது. பல மதங்களுள் இந்து மதமும் ஒன்றாகும். இம்மதத்தின் வழிபாடுகள் அனைத்தும் இரண்டு பெரும் பிரிவுகளுள் அடங்கும். அவற்றில் ஒன்று வைணவம்.

இறைவழிபாடு வேதத்தில் துவங்கி காலப்போக்கில் வளர்ந்து இன்று மலர்ந்து சூரியனின் ப்ரகாசத்திற்கு நிகராக அனைத்து இடங்களில் விரவிக்கிடக்கின்றது என்பர். சான்றோர் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பெற்ற ஒரு கருத்தாகும். இப்படி வேதத்திலிருந்து தோன்றிய இறை வழிபாட்டை வைணவ முறைப்படி அமைத்துத்தந்தவர்

“ஸ்ரீமத் விகனோமுனி” என்பவராவர். இவரால் தோற்றுவிக்கப்பெற்ற இந்த பூஜை முறைக்கு “ஸ்ரீ வைகானஸ பகவத் சாஸ்திரம்” என்று பெயர். ஸ்ரீமத் விகனோமுனியை அடியொற்றி தொடர்ந்து இன்றளவும் பரம்பரையாய் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனுக்கு ஆராதனம் செய்து வருபவர்கள் ஸ்ரீ வைகானஸர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

ஸ்ரீமத் விகனோமுனியின் தோற்றம்:-

இந்த உலகத்திலுள்ள சராசரங்கள் அனைத்திற்கும் புருஷார்த்தமான “தர்ம அர்த்தகாம மோக்ஷம்” என்ற நான்கையும் அளிப்பதற்காக எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தனது பரம் என்ற உயர்வான நிலையிலிருந்து வ்யூஹ, விபவ, அந்தர்யாமி, என்ற மூன்று நிலைகளில் இறங்கி வந்தும் ஒரு சிலரால் மட்டுமே அவரை அறிந்து கொள்ள முடிந்ததே தவிர அனைவராலும் இயலவில்லை. அனைவரையும் உய்விக்க எண்ணிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீதேவி பூமிதேவியுடன் திவ்ய மங்கள விக்ரஹ ஸ்வரூபமாக (அர்ச்சாவதாரம்) அவதாரம் செய்ய எண்ணுகிறான். அவ்வாறு எண்ணிய அளவில், தன்னிடம் நித்யஸூரிகளாய் கைங்கர்யம் செய்து கொண்டிருக்கும் வ்யாஸர்முதலான ரிஷிகளைக் கேட்கிறார். பதில் கூறாத காரணத்தால், தானே மானஸிகமாக ஒருவரை ஸ்ருஷ்டித்து அவருக்கு வேத- வேதாந்தங்கள்- தர்மசாஸ்த்ரங்கள் ஆகிய அனைத்தையும் உபதேச ரூபமக அனுக்கிரஹித்து “விகனஸ்” என பெயரும் சூட்டினார். ஸ்ரீமந்நாராயணனால் ஸ்ருஷ்டிக்கப்பெற்று அனைத்து விஷயங்களையும் உபதேசரூபமாகப் பெற்ற விகனஸர் ஆவணிமாதம் திருவோண நக்ஷத்திரத்தில் நைமிசாரண்யத்தில் அவதாரம் செய்தார். தான் உபதேசமாகப் பெற்ற அனைத்தையும் 1.5 கோடி கிரந்த பரிமாணமுடையதாக ப்ருகு, அத்ரி, காச்யபர், மரீசி ஆகிய நான்கு சிஷ்யர்களுக்கு (தைவிக மானுஷீக விஷயங்களை) உபதேசித்து அனுக்கிரஹித்தார். அந்த நான்கு சிஷ்யர்களும் தாங்கள் பெற்ற ஸ்ரீ சாஸ்திரத்தை சுருக்கி நான்கு லக்ஷம் க்ரந்தமாகக் கூறினார்கள். அந்த நான்கு லக்ஷம் க்ரந்தமும் முழுமையாக கிடைக்கப் பெறவில்லை.

ஸ்ரீவைகானஸ ஆகமத்தின் / ஸ்ரீ சாஸ்திரத்தின் உயர்வு:-

"நாராயண பராயணோ நிர்த்வந்த்வோமுனி:" என்ற வாக்கியத்திற்கிணங்க ஸ்ரீமத் விகனஸாசார்யனானவர் திகழ்ந்ததால் ஸ்ரீமத்விகனோமுனியாக விளங்கினார். அவரால் ஏற்படுத்தப்பெற்ற இந்த வைகானஸ பகவத் சாஸ்த்ரமானது / ஸூத்ரமானது ஸ்வதந்த்ரமானதாகும். மற்ற ஸூத்ரங்கள் ஸ்வதந்த்ரமானதாக இல்லை. உதாரனமாக... ஒரு ஸூத்ரத்தில் சொல்லப்பட்டுள்ள ஸம்ஸ்காரமானது சொல்லப்பெற்றுள்ள காலத்தில் செய்ய இயலாமல் போய்விட்டால்; அதற்கு ப்ராயச்சித்தம் சொல்லப்பட்டிருக்கவேண்டும். அப்படி ப்ராயச்சித்தம் சொல்லப்படாத நிலையில் " அவச்யம் அன்யதோ க்ராஹ்யம்" என்ற வாக்கியத்திற்கிணங்க மேற்படி ப்ராயச்சித்தம் வேறுஸூத்திரத்தின் படி செய்து - பிறகு அந்த ஸூத்ரத்தில் சொல்லப்பெற்றுள்ள ஸம்ஸ்காரத்தைச் செய்ய வேண்டிய நிலை உள்ளது. அந்த நிலை ஸ்ரீவைகானஸ ஸூத்ரத்திற்குக் கிடையாது. ஸ்ரீவைகானஸ பகவத் சாஸ்த்ரத்தில் சொல்லப்பெற்றுள்ள ப்ரயோகங்களில் நான்கு வேதங்களிலிருந்தும் மந்த்ரங்கள் கையாளப் பெற்றுள்ளது. என்பது இதன் உயர்விற்கு மேலும் சான்று பகர்வது போல் உள்ளது.

ஸ்ரீ வைகானஸ நித்யார்ச்சனா விதி

பொதுவாக கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம் தேவதாகார்யம் எனவும்-நிஷேகாதி ஸ்மசானாந்தம் மானுஷீகம் என்றும் கூறுவார்கள். இவற்றில் முதலில் சொல்லப்பெற்ற "கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம்" என்ற அடிப்படையில் ஒரு ஆலயத்தை எங்கு (ஊரின் எந்த இடத்தில்) கட்டவேண்டும் - அந்த இடம் ஸ்ரீவைகானஸ பகவத் சாஸ்திரத்தில் சொல்லியுள்ளபடி தோஷமற்றதாக இருக்கின்றதா? என்பதை கவனித்து அந்த தகுதி வாய்ந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்தை பூஜை செய்து முறைப்படி உழுது தான்யங்களை விதைத்து, தான்யங்கள் லிளைந்த பிறகு பசுக்களை மேயவிட்டு, பிறகு கோயில் கட்டுவதற்காக தீர்மானித்துள்ள இடத்தை அளந்து அஸ்திவாரம் எடுத்து எம்பெருமானுடைய அர்ச்சா ஸ்வரூபத்திற்கு ஏற்றார்போல் திருக்கோயிலை எழுப்பி, கோயிலின் யஜமானனுக்குத் தகுந்தார்போல் உரிய இடத்தில்

பேளாஸ்தாபனம் செய்து விமானத்தையும் அமைத்து; எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அத்திருக்கோயிலுக்குள் முறைப்படி ப்ரதிஷ்டை செய்யவேண்டும்.

இவ்வாறு ப்ரதிஷ்டை செய்யப்பெற்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுக்கு ஸ்ரீவைகானஸ ஸூத்ரத்தின்படி நிஷேகம் முதல் விவாஹம் வரை சொல்லப்பெற்றுள்ள அனைத்து ஸம்ஸ்காரங்களும் செய்யப்பெற்றவரும் தனது வேதத்தை அத்யயனம் செய்துவருபவரும், வேத தத்துவத்தை அறிந்தவரும், அழகானவரும், இந்த்ரியத்தை ஜெயித்தவரும், சுத்தமானவரும், விஷ்ணுவையே அர்ச்சிப்பவரும், பத்னியோடு இருப்பவரும், சாந்தமானவரும், நல்ல ஒழுக்கமுடையவரும், தர்மம் செய்பவருமான ஒரு அர்ச்சகரை அழைத்து நித்ய ஆராதனத்தைச் செய்யுமாறு ப்ராத்திக்க வேண்டும்.

அந்த அர்ச்சகர் நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொன்டு தாமரை மணிமாலை துளஸி மணிமாலை போன்ற மாலைகளை தரித்துக்கொண்டு, த்வாதசோர்த்வ புன்ட்த்துடன் தலைப்பாகை மற்றும் மோதிரங்களை அணிந்துகொண்டு ஆலயத்திற்குச் செல்லவேண்டும். "ப்ரதத்விஷ்ணு:" எனத்தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி ஆலயத்தை வலம் வரவேண்டும். அப்பொழுது ஸந்நிதியின் ஈசானபாகத்தை அடைந்த உடன் விமானத்தைப்பார்த்து / கலசத்தைப்பார்த்து (விமானத்தில் கலசம் இருக்கிறதா? என்று பார்த்து, கலசம் இருந்தால் மேற்கொண்டு தொடரலாம். இல்லையேல் ஆலயத்தினுல் செல்லவேன்டியதில்லை என்பதை அறியவேண்டும்) "விமானம்ப்ரபத்யே" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி கைகூப்பி நமஸ்கரிக்க வேண்டும். வாயிலுக்கு முன்பு வந்து "மணிகம் ப்ரபத்யே" எனத்தொடங்கும் மந்திரத்தைச்சொல்லி த்வாரபாலகரை நமஸ்கரித்து "நிரஸ்தகும் ரக்ஷோ" எனத் தொடங்கும் மந்திரத்தைச்சொல்லி அவரிடம் முதல் நாள் வைத்த சாவியை எடுக்கவேண்டும். "ஹிரண்யபாணி" எனத் தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி சாவியை கதவில் சேர்க்கவேண்டும். "திவம் விவ்ருணோது" எனத்தொடங்கும் மந்திரத்தைச்சொல்லி பூட்டைத்திறந்து கதவைத்திறக்க வேண்டும். உள்ளே சென்று "அதோதேவா" எனத் தொடங்கும்

மந்திரத்தைச் சொல்லி எம்பெருமானை நன்கு தரிசிக்கவேண்டும். "சாம்யந்துகோரானி" எனத்தொடங்கும் மந்திரத்தைச்சொல்லி (சாதாரணமாக ஒலி எழுப்புமாறு) நிதானமாக கைகளைத் தட்டவேண்டும். "பகவதோபலேன" எனத் தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி எம்பெருமானை பிராத்திக்கவேண்டும். "உத்தீப்யஸ்வ" எனத்தொடங்கும் மந்திரத்தைச்சொல்லி சிஷ்யன் மூலம் தீபத்தைத் தூண்டச்செய்யவேண்டும். வாயிலுக்கு முன்பு கன்றுடன் கூடிய பசுவின் வால்பக்கம் பெருமாளைப் பார்த்திருக்குமாறி நிறுத்தி "ஆகோதானாத்" எனத்தொடங்கும் கோதான ஸூக்தத்தை ஜபித்து பசும்பால் கறக்கச்சொல்லி பெற்று, கறந்த சூட்டோடு பாலை எம்பெருமானுக்கு நிவேதனம் செய்து, சயனத்தில் இருக்கும் பெருமாளை நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளச்செய்து, திரையைத்திறந்துவிட்டு கற்பூரநீராஜனம் செய்யவேண்டும். "பூரஸிபூ:" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி பெருமாள் எப்பொழுதும் எங்கு எழுந்தருளி இருப்பாரோ அந்த இடத்தில் எழுந்தருளப்பண்ண வேண்டும். "துஹதாம்திவம்" எனத்தொடங்கும் மந்திரத்தைச்சொல்லி குடத்தை எடுக்கவேண்டும். ஆறு, குளம், கிணறு இவற்றில் எது உள்ளதோ (கொடுத்துள்ள க்ரமப்படி மூன்றும் இருந்தால் முதலில் உள்ள ஆற்றுக்குச்சென்று) அது இருக்கும் இடத்திற்குச் சென்று "ஆத்யமபிக்ருஹ்ணாமி" எனத்தொடங்கும் மந்திரத்தைச்சொல்லி குடத்தில் நீரை நிரப்பவேண்டும். குடத்தின்வாயில் துணியைக்கொன்டு மூடிகட்டவேண்டும். [அல்லது நிறைய மாவிலைகொத்து கொண்டு நன்கு மூடவேண்டும்] "அர்வாஞ்சமிந்த்ரம்" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி தோள்பகுதியிலோ, சிரசிலோ, வைத்துக்கொண்டு அனைத்து வாத்யங்களுடனும் ஆலயத்திர்குச்சென்று வலம் வந்து "ஸோமகும் ராஜானம்" எனத்தொடங்கும் மந்திரத்தைச்சொல்லி குடத்தை ஆலயத்தில் உரிய இடத்தில் இறக்கிவைக்க வேண்டும். "அவதூதகும்" எனத் தொடங்கும் மந்திரத்தைச்சொல்லி விளக்குமாறு கொண்டு கருவறை முதல்ப்ரகாரம் வரை அனைத்து இடங்களையும் சுத்தம் செய்யவேண்டும். "ஆசாஸீ ஸப்த" எனத்தொடங்கும் மந்திரத்தைச்சொல்லி பசுஞ்சானம் கொண்டு மெழுகவேண்டும். "ஆமாவாஜஸ்ய" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி அனைத்து உபகரணங்களையும் சுத்தம் செய்யவேண்டும்.

எம்பெருமானுக்கு முறைப்படி தளிகை தயார் பண்னவேன்டும். அர்ச்சகர் புண்யாஹவாசனம் செய்து "சுசீவோஹவ்யா" எனத்தொடங்கும் மந்திரத்தைச்சொல்லி ஆலயத்திலுள்ள அனைத்து உபகரணங்களையும் ப்ரோக்ஷிக்க வேண்டும். "அஹமேவேதம்" எனத்தொடங்கும் மந்திரத்தைச்சொல்லி, எம்பெருமான் திருமேனியிலுள்ள பழைய புஷ்பங்களைக் களைவதற்கு அனுமதிபெற்று; "நச்யந்தி ஜகதாம்" எனத்தொடங்கும் மந்திரத்தைச்சொல்லி சுத்தம்செய்து, திரும்பவும் "அஹமேவேதம்" எனத்தொடங்கும் மந்திரத்தைச்சொல்லி அவற்றை [பழையபுஷ்பங்களை] ஒரு பாத்திரத்தில் சேகரித்து வைக்கவேண்டும். "பூதஸ்தஸ்யபாரே" எனத்தொடங்கும் மந்திரத்தைச்சொல்லி பெருமாள் எழுந்தருளியுள்ள வேதிகையை சுத்தம் செய்ய வேண்டும். " நாராயணாய வித்மஹே" எனத்தொடங்கும் மந்த்ரத்தை சொல்லி த்ருவபேரத்திலிருந்து களைந்த மாலைகளை உத்ஸவ பேரர்களுக்கு ஸமர்ப்பிக்க வேண்டும். "விஷ்வக்ஸேனம்" எனத்தொடங்கும் மந்த்ரத்தை சொல்லி பெருமாளுக்கு சாற்றியுள்ள பழைய புஷ்பங்களால் விஷ்வக்ஸேனரை அர்ச்சிக்க வேண்டும்.

பிறகு ஆராதனத்திற்குத் தேவையான புஷ்பம், சந்தனம், தூபம், அகருகட்டை, வெட்டிவேர் முதலானவைகளையும்;நெய், எண்ணை, குடை, சாமரம், விசிறி, கண்ணாடி, நீராஜனகும்பம், ஸந்திகாலத்தில் பண்ணவேண்டியரக்ஷாலங்கார தீப பாத்திரங்கள்; சங்கம், பேரீ, காஹளம் போன்றவைகளையும், மங்கள வாத்யம் வாசிப்பவர்கள், நடனம் ஆடுபவர்கள், பாடுபவர்கள், ஆகியோரையும் தயாராக இருக்கச் செய்து கொள்ள வேண்டும். பெருமாளுக்கு பூஜை நடைபெறும்பொழுது பெண்கள், நெறிமுறையில் வழுவியவர்கள், பாஷண்டர்கள், வேதத்தை நிந்திப்பவர்கள், கெட்டநடத்தை உள்ளவர்கள், ஊமை, மொட்டை அடித்துக் கொண்டுள்ளவர்கள், எண்ணெய் தேய்த்துக்கொண்டு குளித்தவர்கள், குஷ்டரோகிகள், அன்யதேவதா(வேறு) பக்தர்கள் போன்ற இவர்கள் பார்த்தால் பூஜைக்கு பலன் இல்லாமல்போய்விடும் என்பதாக வேதங்கள் கூறுகின்றன. எனவே பெருமாளுக்கு பூஜைசெய்யும்பொழுது வாயிலை மறைக்குமாறு திரை போடப்படுகிறது. " அக்னிஸ்ஸீசி:" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி, ஸ்நானம் ஸமர்பிக்கும் வட்டிலை பாத்ரவேதியின் அக்னி மூலையிலும், அர்க்யம் ஸமர்பிக்கும் வட்டிலை நிர்ருதி மூலையிலும்,

பாத்யம் ஸமர்பிக்கும் வட்டிலை வாயுமூலையிலும், ஆசமனம் சமர்பிக்கும் வட்டிலை ஈசான மூலையிலும், நடுவில் சுத்ததோயத்திற்கான வட்டிலையும் வைக்கவேண்டும். சோஷணாதிகளைச் செய்து ஒரு உத்தரணியில் ஜலத்தை எடுத்துக் கொண்டு துளஸியுடன் கூட அதனை ஹ்ருதயத்திற்கு நேராக வைத்துக்கொண்டு த்யானித்க்கு (வட்டிலை வைத்த முறைப்படி ஐந்து வட்டில்களிலும்) வஸிஷ்டம், ஸோமம், யக்ஞாங்கம், இந்தும், சந்த்ரம், என்பதாக ஆவாஹனம் செய்யவேண்டும். பிறகு ஆலயத்தில் பயன்படக்கூடிய அனைத்திற்கும் ஆவாஹனம் செய்யவேண்டும். (உதாரணமாக- பரிசாரகருக்கு கருடனையும், தளிகை பண்ணுபவருக்கு ஹவிரக்ஷகனையும், விளக்குமாறில் ஜ்யேஷ்டாவையும், அர்ச்சனா பாத்திரத்தில் ஆதித்யனையும் ஆவாஹனம் செய்யவேண்டும்).

பச்சைகற்பூரம், வெட்டிவேர், ஏலக்காய், கிராம்பு, தக்கோலம், ஆகியவைகளை பொடி செய்து ஸ்நான பாத்ரத்தில் சேர்க்கவேண்டும்.

தர்பைநுனி, அக்ஷதை, எள், நெய், யவதான்யம், உளுந்து, வால்மிளகு, வெண்கடுகு, ஆகியவைகளை அர்க்ய பாத்ரத்தில் சேர்க்கவேண்டும்.

உலர்ந்த தாமரை இதழ், தர்பை ஆகியவற்றை பாத்ய பாத்ரத்தில் சேர்க்க வேண்டும்.

பச்சை கற்பூரம், வெட்டிவேர் ஆகியவற்றை ஆசமன பாத்ரத்தில் சேர்க்க வேண்டும்.

புஷ்பம், சந்தனம், அக்ஷதை ஆகியவைகளை நடுவிலுள்ள சுத்ததோய பாத்ரத்தில் சேர்க்கவேண்டும். இவைகள் இல்லையெனில் ஒவ்வொறு பாத்ரத்திலும் அதற்குரிய த்ரவ்யங்களைச் சொல்லி துளஸீதளமாவது சேர்க்க வேண்டும்.

மேற்சொல்லப்பட்டுள்ள த்ரவ்யங்களில் ஒரு சிலவற்றின் குணத்தைப் பற்றி சற்று அறிந்துகொள்வோம்.

பச்சைக்கற்பூரம் - பச்சைக்கற்பூரத்தினால் அவித குன்மநோய்கள், கீல்களில் குத்தல், வாதநோய், சீழ், பிரமேகம், சிலேத்துமகோபம் இவைபோம். [1] (பதார்த்த குணவிளக்கம். P. 402)

வெட்டிவேர் - வெட்டிவேருக்கு பித்தத்தால் அகாலத்தில் உண்டாகின்ற தாகம், சோமரோகம், காமாலை, ரத்தபித்தம், சுரம், பரவுகின்றகுட்டம், தலைநோய், கழுத்துநோய், சுக்கிலநஷ்டம், உன்மத்தம், தீயால் வந்தபுண், முலைச்சிலந்தி, திரிதோஷம், மூர்ச்சை, நேத்திரரோகம், வித்திரிக்கட்டி, மேகக்கட்டி ஆகியவை நீங்கும் என்க. [2] (பதார்த்த குணவிளக்கம்.P. 664)

ஏலக்காய் - மலாவர்த்தவாதம், வயிற்றுக்கொதிப்பு, அக்னி மந்தம், பொருமல்வலி, வாயில் நீரூறல், வாயினிப்பு, தாகம், சலபேதி, வேர்வையுடன் கூடிய தலைவலி, மிகுந்த வறட்சி, கபம் இவைகளைப்போக்கும். [3] (மூலிகை குணபாடம். P. 115)

கிராம்பு - பித்தமயக்கம், பேதி, வாந்தி, இரத்தக்கடுப்பு, இராமணி, ஆசனப்பிடுங்கல், சுக்கிலநட்டம், செவிநோய், சிவப்புமச்சம், கறுத்தமச்சம், விவுர்தம் என்கிற வாதங்கள், கண்ணில் பூ, படை இவைகளை நீக்கும், மலத்தைக்கட்டும். [4] (மூலிகை குணபாடம். P. 76)

தக்கோலம் - தக்கோலத்தினால் பாண்டுநோய்ச்சுரமும், இருவித ஆசிய வாதங்களும்போம், பலமும் வீர்யமும், மலக்கட்டும் உண்டாம் என்க. [5] (பதார்த்த குணவிளக்கம் . P . 398)

தர்பைநுனி - இதனால் சகலவித தோஷங்கள், சிறிய விஷங்கள். மிஞ்சினகபம், சகலவித சுரங்கள், தாகம், நமைச்சல் இவைபோம். [6] (மூலிகை குணபாடம். P. 359)

அக்ஷதை(புச்சரிசி) - பத்தியத்திற்கு விலக்கான பச்சரிசியினால் தனிவாதமும், எரிச்சலை உண்டாக்கக்கூடிய பித்தமும், மிகுந்தபலமும் உண்டாகும். [7] (பதார்த்த குணவிளக்கம். P. 328)

எள் - மருந்தை முறிக்கும், வெண்மை, காசம், கபம், பித்தத்தை அதிகரிக்கப்பண்ணும், கண்ணுக்கு ஒளிவையும், தேகபலத்தையும் கொடுக்கும். கீதம் பாடக்கூடிய தொனியைக்கொடுக்கும். இதை ஊரவைத்த ஜலத்தை உதிரச்சிக்களுக்குக் கொடுக்கலாம். எள்ளை சேர்த்து பக்குவப்பட்ட அன்னத்தை உட்கொண்டால் வாத பித்த த்வந்த்வம் விலகும். கபவிருத்தியும் தேகவலுவும் உண்டாகும். [8] (மூலிகை குணபாடம். P.112)

நெய் - பசுவின் நெய் புத்தி, ஞாபக சக்தி, தாரணசக்தி, பசித்தீ, ஆயுள், விந்து இவைகளை வளர்க்கிறது. கண்களுக்கு நலம் செய்யும். சிறுவர்களுக்கும், வயதானவர்களுக்கும், ஸந்தான விருத்தியை விரும்புகிறவர்களுக்கும், உடம்புக்கு ஒளியையும், அழகையும் விரும்புபவர்களுக்கும், நல்ல குரலை விரும்புபவர்களுக்கும், ரத்தத்துடன் கூடிய இருமலால் இளைத்தவர்களுக்கும், விஸர்ப்பம் (ரத்த தோஷத்தினால் அக்கியைப்போல் தோலில் பரவும் இயல்புடைய நோய்) உள்ளவர்களுக்கும், கத்திபோன்ற ஆயுதம், நெருப்பு இவைகளால் உடல் வாட்டமடைந்தவர்களுக்கும் இதமானது. வாயு, பித்தம், கபம், விஷம், பைத்தியம், க்ஷயரோகம், அலக்ஷ்மி ஜ்வரம் இவைகளைப் போக்குகிறது. ஸ்நேகத்திரவியங்களுக்குள் சிறந்தது, குளுமையானது. நோயற்ற நடுவயதை நிலை நிறுத்துகிறது. [9] (ஆயுர்வேத உபதேசா: (முதல்பாகம்) P. 59)

யவ தான்யம் - யவதான்யமானது (வாற்கோதுமை) வறட்சி குளிர்ச்சி இவைகளை உண்டாக்குகிறது. மெதுவாக ஜீரணமாகக்கூடியது. இனிப்புச்சுவை உடையது. மலக்கட்டை நீக்குகிறது. மலத்தையும், வாயுவையும் வளர்க்கிறது. ஆண்மையை வளர்க்கிறது. உடம்புக்கு வலுவை உண்டாக்குகிறது. மூத்திரம், கொழுப்பு, பித்தம், கபம், இவைகள் சம்பந்தமான நோய்களைப் போக்குகிறது. நீடித்த ஜலதோஷம், சுவாசம், (ஆஸ்துமா) இருமல், ஊருஸ்தம்பம், (தொடையில் உண்டாகும் வீக்கமும் வலியும் அதிகமாய் உள்ள ஒரு நோய்) தொண்டையில் உண்டாகும் நோய்கள், சருமத்திற்குச் சம்பந்தமான நோய்கள் இவைகளையும் போக்குகிறது. [10]

உளுந்து - வயிற்றுவலி, பேதி, சீதபேதி, அஜீரணபேதி, மூத்திரஸம்பந்தமான வியாதிகல், மூலவியாதி, ஈரல் நோய்கள் முதலியவைகளைக் கண்டித்து தாதுவை புஷ்டியாக்கும். பெண்களுக்குண்டாகும் கருப்பாசய உறுப்புகளின் நோய்களைக் குணமாக்கும். ஆனால் கபத்தை விருத்தி பண்ணும், பித்தத்தைக் குறைக்கும். மந்தத்தை ஏற்படுத்தும். வாயுவை, அதிகரிக்கும். உளுந்தை ஜலத்தில் ஊறவைத்து எடுத்த ஜலத்தை மறுநாள் அதிகாலையில் அருந்த மூத்திர சம்பந்தமான வ்யாதிகளோ போகும். [11] (மூலிகை குணபாடம் . P.96)

உளுந்து - நல்ல உளுந்திற்கு கபவாதமிஸ்ரம், அலஸம் இடுப்பிற்குறுதி, மிகுவீரியம் இவையுண்டாம். பயித்தியமும், எலும்புருக்கியும் நீங்கும். [12] (பதார்த்த குண விளக்கம். P.111)

வால்மிளகு - வால்மிளகினால் திரிதோஷகபம், குன்மம், விதாகம், வெட்டை முதலிய சிற்சில ரோகங்கள் விலகும். பசி தீபனமுண்டாக்கும் என்க. * உற்சாககாரி, ஜடராக்னிவர்த்தினீ [13] (பதார்த்த குணவிளக்கம் . P. 643)

வெண்கடுகு - கந்தகிரகம் முதலிய பாலகிரகங்கள் தேவபூத முதலிய கஅ வாத பூதங்கள், மஹா சர்ப்பவிடம், வண்டு முதலிய விடக்கட்டிகள், பங்கு வாதம் இவைகளைப்போக்கும். [14] (பதார்த்த குணபாடம். P. 393)

உலர்ந்த தாமரை இதழ் - இது பலவிதமான வமனரோகம், வெப்பத்தாற்பிறந்த விழி எரிச்சல், சுரம், விதாகம் ஆகியவைகளைப் போக்கும் என்க. [15] (பதார்த்த குணவிளக்கம். P. 406)

சந்தனம் - நல்ல சந்தன மரக்கட்டையை முறப்படி அனுபவிப்பவர்களுக்கு அறிவும், மன மகிழ்ச்சியும், உடல் அழகும், ஒளியும், பெண்களிடத்தில் இச்சையும் உண்டாகும். வெள்ளை வெட்டை ஆகிய நோய்களும் நீங்கும். [16] (பதார்த்த குணவிளக்கம். P. 110)

துளசி - இதனால் கபம், வயிற்றுளைச்சல், அஸ்தி தாதுகத சுரம், தாகம், சுரமாந்தம், அருசி, இவைபோம். வெப்பத்தைத் தரும். [17] (பதார்த்த குணவிளக்கம். P. 424)

"ஆகமார்த்தந்து தேவானாம்" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி மணி (அடிக்க) ஸேவிக்கத் துவங்கிய உடன் முன்னமே தயாராக உள்ள அனைத்து வாத்யங்களும் முழங்க (வாஸிக்கப்பட) வேண்டும்.

அர்ச்சகர் பூஸூத்தி முதல் துவங்கி ரேசக பூரக கும்பகத்துடனான ப்ராணாயாமத்தைச் செய்து; ஸங்கல்பம் செய்துகொண்டு பூத ஸீத்தி செய்துகொண்டு எம்பெருமானை த்யானித்து ஏகாக்ஷர, அந்தர், பஹிர்மாத்ருகாந்யாஸம், அக்ஷர, அசோந்தந்யாஸ, அங்கந்யாஸ, கரந்யாஸங்களைச் செய்ய வேண்டும். எம்பெருமானுக்கு மந்த்ராஸனம் ஸமர்பித்து, ஸ்நானாஸனம் ஸங்கல்பித்து; "பூதஸ்தஸ்ய" எனத்தொடங்கும்

மந்த்ரத்தைச்சொல்லி எம்பெருமானுக்கு பல்தேய்த்து விடவேண்டும். "இதம்ப்ரம்ம புணீமஹே" என்று "நா" வழித்துவிட வேண்டும். "பூதஸ்தஸ்ய" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி வாய் கொப்பளிக்கச் செய்ய வேண்டும். "யன்மேகர்பே" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி எம்பெருமானுக்கு முகத்தை அலம்பி விடவேண்டும். "சன்னோதேவி" எனத்தொடங்கும் மந்த்ஜ்ரத்தைச் சொல்லி ஆசமனம் ஸமர்ப்பிக்க வேண்டும். "அதோதேவா" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி எண்ணை தேய்த்துவிட வேண்டும். "பரிலிகிதகும்" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி பெருமாளின் திருமேனியை சுத்தம் செய்ய வேண்டும். "வாரீஸ்சதஸ்ர" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி சுத்தஜலத்தினால் அவ்வப்போது நீராட்டுவிக்கவேண்டும். இதுபோன்று ஒவ்வொரு த்ரவ்யத்திற்கும் ஒவ்வொரு மந்த்ரமானது படிக்கப்பட்டுள்ளது.. அதன்படி திருமஞ்சனம் செய்வித்து " மித்ரஸ்ஸ்வர்ண" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி உலர்ந்த வஸ்திரத்தினால் எம்பெருமானை துடைத்துவிட வேண்டும், (திருவொத்து வாடை ஸமர்ப்பிக்க). "பூரஸிபூ" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி வஸ்த்ரம், உத்தரீயம், ஆபரணம், உபவீதம், புஷ்பம், கந்தம், தூபம், தீபம் ஆகிய அனைத்தும் ஸமர்ப்பிக்க வேண்டும். "தேவஸ்யத்வா" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி பெருமாளுக்குகண்ணாடி(ஆதர்ஸம்) காண்பிக்க வேண்டும்.

பிறகு த்ருவ பேரத்தின் (மூலவர்) பீடத்திலும், கௌதுக பேரத்தின் பீடத்திலும் சுற்றிமூன்று ஆவரண தேவதைகளை ந்யாஸம் செய்து புஷ்பம் சேர்க்கவேண்டும். தூப தீபம், ஸமர்ப்பித்து ஸ்வாமிக்கு முன்பு முக்காலியில் கடதீபத்தை வைத்து " ஸ்சீவோ ஹவ்யா" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி ப்ரோக்ஷிக்கவேண்டும். கடதீப கும்பத்தில் வருணனையும், மூடியில் சந்த்ரனையும், கும்பத்திற்கு கிழக்கில் வராஹனையும் தெற்கில் நாரஸிம்மனையும்; மேற்கில் வாமனனையும், வடக்கில் த்ரிவிக்ரமனையும் ஆவாஹனம் பண்ண வேண்டும்.

கந்தம், தூபம், தீபம், நிவேதனம் என்பதான எட்டு உபசாரங்களையும் ஸமர்ப்பித்து; திரியில் ஸ்ரீயமாவாஹயாமி, புகையில் பவமாவாஹயாமி, தீஜ்வாலையில் (ஜ்வலனே) ஸ்ரீயமாவாஹயாமி என்பதாக ஆவாஹனம்

செய்து ஆராதித்து கடதீபத்தின் மூடியைத் திறந்து கொஞ்சம் ஜலம் சேர்த்து திரும்பவும் மூடிய பிறகு மறுபடியும் புஷ்ப, கந்த, தூப, தீபங்களால் அர்ச்சித்து ஸீரபி முத்திரை காட்டி "விஷ்ணுஸ்த்வாம்ரக்ஷது" எனத்தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி கடதீபத்தை கையில் எடுக்கவேண்டும்.

"ச்ரியை ஜாத:" ஸீப்ராஜ்யோதிஸ்ச" எனத் தொடங்கும் மந்திரங்களைச் சொல்லி அனைத்து உலகங்களின் நன்மைக்காக பெருமாளின் சிரஸ்முதல் பாதம்வரை ஒரு சுற்றும்; கிராமத்தின் நன்மையின் பொருட்டு நெற்றிமுதல் பாதம் வரை ஒரு சுற்றும்; அந்த இடத்தின் யஜமானன், ப்ரபுக்கள், ராஜா ஆகியோரின் வெற்றிக்காக பெருமாளின் கண்கள் முதல் பாதம்வரை ஒரு சுற்றும் ஆக மூன்று சுற்று கடதீபம் காண்பிக்கவேண்டும். இவ்வாறு ஸ்வாமிக்கு பக்தியுடன் யார் ஸேவிக்கிறார்களோ அவர்களுக்கு நீண்ட ஆயுளும், குழந்தைச்செல்வமும், தனமும், எம்பெருமான் அனுக்ரஹிப்பார். பிறகு அந்த கடதீபத்தை பரிசாரகரிடம் கொடுக்கவேண்டும். அவர் அதனை அனைத்து வாத்யங்களுடன் கூட ஆலயத்தை வலம் வந்து ப்ரதான பலிபீடத்திடம் வைத்துவிடவேண்டும். பெருமாளுக்கு ஆசமனம் ஸமர்பித்து; அஷ்டாக்ஷரம், த்வாதசாக்ஷரம், விஷ்ணுகாயத்ரீ ஆகியவற்றைச் சொல்லி புஷ்பத்தை எம்பெருமானுடைய திருவடிகளில் சேர்க்கவேண்டும். அதைத் தொடர்ந்து குடை, சாமரம், வி கிலோ சிறி, கண்ணாடி, ஆகியவைகளை அவற்றிற்குரிய மந்த்ரங்களைச் சொல்லி காண்பித்து 8 கிலோ 960 கிராம் அரிசியை (த்ரோணம் என்பதன் இன்றைய அளவு அரிசியை) ஒரு வெண்கலப் பாத்திரத்தில் சேர்த்து, மேற்சொன்ன அளவில் பாதியோ அல்லது கால்பாகமோ அதனுடன் எள் சேர்த்து அதன்மேல் வெற்றிலை, பாக்கு, பழம் ஆகியவற்றையும் ஸ்வர்ணத்தையும் வைத்து நாராச முத்திரை காட்டி அர்ச்சகரை அழைத்து சந்தனம் கொடுத்து மாலை போட்டு நன்கு பூஜிக்கவேண்டும். "க்ருதாத்பரிமண்ட" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி எம்பெருமானுடைய கையில் தொட்டு அதனை அந்த அர்ச்சகருக்குத் தர வேண்டும். அர்ச்சகர் "தேவஸ்யத்வா" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி பெற்றுக் கொண்டு எம்பெருமானை

"நித்யஸ்வர்யோ பவ" என்று ஆசீர்வதித்து அக்ஷதையை எம்பெருமானுடைய சிரஸ்ஸிலும் பாதத்திலும் சேர்க்கவேண்டும்.

இதனைத்தொடர்ந்து எம்பெருமானுக்கு மந்த்ரபுஷ்பம் ஸமர்ப்பித்து போஜ்யாஸனம் ஸங்கல்பிக்க வேண்டும். முறைப்படி பக்குவம் செய்யப்பெற்ற தளிகையை எம்பெருமானுக்கு ஹவிர்நிவேதனம் செய்யவேண்டும். பக்குவப்படுத்தப்படாத ஹவிர் நிவேதனப்பொருட்களை அஷ்டாக்ஷரத்தைச் சொல்லி நிவேதனம் செய்யவேண்டும். பிறகு மிளகு பச்சைக்கற்பூரத்துடன் சேர்ந்த வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்புடன் எம்பெருமானுக்கு ஸமர்பிக்கவேண்டும். "நாராயணாய வித்மஹே" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி புஷ்பாஞ்சலி செய்து "உபசாராபதேஸேன" எனத்தொடங்கும் ஸ்லோகத்தைச் சொல்லி ப்ராத்தித்து " மருத: பரமாத்மா" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி எம்பெருமான்மீது காற்று உபசாரமாகப்படுமாறு விசிறி வீசவேண்டும். பிறகு அபராத க்ஷமாபன ஸ்லோகங்களையும் சொல்லி நிறைவாக "ஸ்வஸ்திப்ரஜாப்ய:" எனத்தொடங்கும் ஸ்லோகங்களையும் சொல்லி பெருமானுடைய திருவடிகளில் புஷ்பம், துளசி ஆகியவற்றை சேர்த்து அர்ச்சகன் தனது சிரஸ்ஸை எம்பெருமானுடைய திருவடிகளில் படுமாறு பாவனையாக ஸேவிக்க வேண்டும். பிறகு யாகசாலைக்குச் சென்று நித்யாக்னி குண்டத்தில் ப்ரணிதி பாத்திரங்களில் ஜலத்தை நிரப்பி ப்ராணாயாமம் செய்து ஸங்கல்பித்து அக்னி ஆராதனம் செய்து திரும்பவும் ப்ராணாயாமம் செய்து "நித்ய ஹோமம்கரிஷ்யே" என்பதாக ஸங்கல்பித்துக் கொண்டு அக்னியை பரிஷேசனம் செய்து "அதோ தேவா" எனத் தொடங்கும் வைஷ்ணவ மந்த்ரங்கள் மற்றும் அந்த ஆலயத்திலுள்ள அனைத்து மூர்த்திகளுக்கும் ஏகமூர்த்தி விதமாகவோ, சதுர்மூர்த்தி விதமாகவோ, பூத தைவத்யம் வரையிலும் ஆஜ்யத்தினால் ஹோமம் பண்ணவேண்டும். அக்னியை பரிஷேசனம் செய்வித்து நிறைவாக அக்னி உபஸ்தானம் பண்ணவேண்டும். பிறகு யாத்ராதானம் ஸங்கல்பிக்க வேண்டும், "ரதந்தரமஸி" எனத்தொடங்கும் மந்திரத்தைச் சொல்லி தோளுக்கினியானில் (படிச்சட்டத்தில்) எழுந்தருளச்செய்து வஸ்த்ரம், மாலை ஆகியவற்றால் அலங்காரம் செய்து தாளவ்ருத்த வாத்யம் முழங்க

த்வாரதேவதைகள் அனைத்திற்கும் பலிசாதித்துவிட்டு; ப்ரதான பலிபீடத்திடம் வந்து பலிபீடத்தை சுற்றி கிழக்குமுதல் நான்கு திசைகளிலும் ஆவாஹனம் செய்து அர்ச்சித்து பலி சாதிக்கவேண்டும். மீதமுள்ள த்வாரதேவதைகளுக்கு " தோயம், அன்னம், புஷ்பம், பலிம் ததாமி" என்ற வாக்கியத்திற்கிணங்க ஆஹீதிப்ரமாணம் பலி சாதிக்க வேண்டும்.

அர்ச்சகர் கால்களை அலம்பிக் கொண்டு ஆசமனம் செய்துவிட்டு, கர்ப்பக்ருஹத்திற்குச் சென்று கற்பூர ஹாரத்தி செய்து எம்பெருமானை திரும்பவும் ஸேவித்துக் கொண்டு, தான் முதலில் தீர்த்த ப்ரஸாதம் ஸ்வீகரித்து (எடுத்து)க் கொண்டு, ஸேவார்த்திகள் அனைவருக்கும் கொடுத்து நித்ய ஆராதனத்தை நிறைவு செய்ய வேண்டும்.

மங்களானி பவந்து.

சைவாகமங்கள் கூறும் சில முக்கியச் செய்திகள்

Dr. T. கணேசன்
சைவசித்தாந்த ஆராய்ச்சியாளர்
FRENCH INSTITUTE,
புதுச்சேரி.

நமது பாரத நாட்டுக் கலாசாரத்தின் எல்லாப் பிரிவுகளுக்கும் அதிலும் குறிப்பாக ஆன்மீகத்திற்கு வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள் ஆகியன அடிப்படையாகத் திகழ்கின்றன. வேதங்கள் நியாயவைசேஷிகம், ஸாங்கியம், மீமாம்ஸை முதலிய சாத்திரங்களைப் பின்பற்றுவோருக்கும் சைவம், வைணவம் முதலிய எல்லா மதங்களுக்கும் பொதுவான நூலாகக் கொள்ளப்படுகின்றன. வேதத்தின் அடிப்படையில் எழுந்த ஸ்மிருதி நூல்களும் பொதுமக்களின் ஆசார அனுஷ்டானங்களுக்கும் அரசாட்சிக்கும், பொதுமக்களின் நீதி முதலியவற்றுக்கும் ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறே, ஆகமங்கள் சிறப்பு நூல்களாகவும், வேதத்திற்கு இணையானதாகவும் அமைந்துள்ளன. சிவபெருமானை முழுமுதற்கடவுளாகக் கொண்டு, ஆழ்ந்த பக்தியுடன் சிவபெரு:மானை வழிபட்டு சிவப்பேறடைவதே பொதுவாக சைவசம்பிரதாயத்தின் கொள்கை. தத்துவக்கோட்பாடுகளின் ஆதாரத்திலும், சமய அனுஷ்டானங்களின் அடிப்படையிலும் சைவம் பல பிரிவுகளை உடையது. பாசுபதம், காலாமுகம், காபாலிகம், சைவசித்தாந்தம், ஸோமசித்தாந்தம் ஆகியன அவற்றின் முக்கியப் பிரிவுகள். இவ்வெல்லாப் பிரிவினர்களும் தங்களுக்கு அடிப்படையாக சிவபெருமானால் அருளப்பட்ட ஆகமங்களைத் தனித்தனியே கொண்டுள்ளனர். காலப்போக்கில் அவற்றுள் பல அழிந்து போயின; சில ஆகமங்களே இன்று நமக்குக் கிடைத்துள்ளன.

இன்றைய கருத்தரங்கில் நாம் சைவசித்தாந்த ஆகமங்களுள் சிலவற்றைச் சற்று ஆய்வோம்.

- ஆகமநூற்கருத்துக்கள்

இன்று நமக்குக் கிடைத்துள்ள சைவாகமங்களின் அடிப்படையில் நோக்குங்கால், அவை நான்கு பெரும் பகுதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளன; மிக விரிவானதும், நுணுக்கமானதும், தீக்ஷை முதலான பல்வகைப்பட்ட சடங்குகளை விளக்கிக் கூறுவதுமாக அமைந்தது கிரியாபாதம் எனப்படும், அனைத்து உலகங்களுக்கும் உயிர்களுக்கும் ஒப்பற்ற ஒரே இறைவனும், பதி என வழங்கப்படுபவனுமான சிவபெருமானின் உண்மை நிலை, உலகில் பிறந்து இறந்து உழலும் கணக்கற்ற உயிர்களான பசுக்களின் உண்மை இயல்பு, இவ்வுயிர்கள் இன்பதுன்பங்களை நுகர்வதற்கு ஒரே நிலைக்களனாகத் திகழ்வதும், ஜடமானதுமான இவ்வுலகத்தின் தோற்றம், முடிவில் அதன் ஒடுக்கம், தத்துவங்களின் விரிவு ஆகியவற்றைப் பற்றி விரிவாக விளக்குவது ஞானபாதம் அல்லது வித்தியாபாதம். சைவர்கள் அனைவரும் அடிப்படையில் பின்பற்றவேண்டிய நியமங்களை விளக்குவது சரியாபாதமாகும். சைவத்திற்கே உரிய சிறப்பான யோகத்தை விரிவாகக் கூறுவது யோகபாதம். சில ஆகமங்களில் இந்நான்கு பாதங்களும் தனித்து விரிவாகவும், சில ஆகமங்களில் சுருக்கமாவும் காணப்படுகின்றன. வித்தியாபாதம் விளக்கும் தத்துவங்களின் வெளிப்படையான விளக்கமே கிரியாபாதம் எனவும் கொள்ளலாம்.

ஆகமங்கள் ஸம்ஹிதை என்றும், ஆலய அமைப்பு, பிரதிஷ்டை முதலியவற்றை விரிவாக விளக்கும் பிரதிஷ்டாதந்திரம் எனவும் குறிக்கப்படுகின்றன.

சைவசித்தாந்தத்தில் 28 ஆகமங்கள் மூல ஆகமங்கள் எனவும், அதன் அடிப்படையில் எழுந்த 207 ஆகமங்கள் உபாகமங்கள் எனவும் வழங்கப்படுகின்றன. 28 மூலாகமங்களில் 10 சிவபேதம் எனவும், 18 ருத்திரபேதமெனவும் கொள்ளப்படுகின்றன.

- **ஆகமங்களின் பதிப்புகள்**

அவற்றுள், சிவபேதத்தைச் சேர்ந்த 5 ஆகமங்கள் கடந்த நூறாண்டுகாலத்தில் பதிப்பிக்கப்பட்டு அச்சில் வெளிவந்துள்ளன. காமிகாகமம் (பூர்வபாகம், உத்தரபாகம் இரண்டும் தனித்தனியே) 1890 ஆம் ஆண்டு கிரந்தலிபியில் சென்னைச் சிவஞானபோதயந்திரசாலையில் மயிலை அழகப்பமுதலியாரால் அச்சிடப்பட்டு வெளியானது; பின்னர்த் தமிழில் பதவுரையுடனும், மொழிபெயர்ப்புடனும் வெளியிடப்பட்டது. அதற்குப் பின்னர் சில வருடங்களில் காரணாகமமும், ஸுப்ரபேதாகமமும் அவ்வாறே கிரந்தலிபியில் அச்சிடப்பட்டன. புதுச்சேரி பிரெஞ்ச் இந்திய ஆராய்ச்சி நிலையத்தின் (French Institute) வாயிலாகப் பல சுவடிகளை ஒப்புநோக்கி நன்கு திருந்திய பதிப்பாக பல அடிக்குறிப்புகளுடன் முதன்முதலில் அஜிதாகமமும், தீப்தாகமமும் சில வருடங்களுக்கு முன் வெளியிடப்பட்டன. சைவசித்தாந்தசமயத்தின் கிரியைகளைப் பற்றி இவ்வைந்து ஆகமங்கள் மூலம் நமக்கு ஓரளவு முக்கியச் செய்திகள் கிடைக்கின்றன. ஆயினும், சிவபேதத்தைச் சேர்ந்த மற்ற ஐந்து ஆகமங்களான யோகஜம், சிந்தியம், ஸூக்ஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான் ஆகியன இதுநாள் வரை பதிப்பிக்கப்படவே இல்லை; ஏனைய ஆகமங்களைப் போல் சில பொதுவான செய்திகளை அவை கொண்டிருப்பினும், பல முக்கிய அரிய செய்திகளையும், இதுவரை கண்டிராத சில கிரியைகளையும், தத்துவக்கோட்பாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளன. தற்காலத்தில் யாரேனும், இவ்வாகமகங்களைச் சற்றேனும் படித்திருக்கிறார்களா என்பது ஐயம், பெரும்பாலானோர் அவை உள்ளனவா என்றே ஐயப்படுவர். சிவபெருமான் அருட்டுணையால் இவ்வாகமங்களின் சுவடிகளும், காகிதக் கையெழுத்துப் பிரதிகளும் புதுச்சேரி பிரெஞ்ச் இந்திய ஆராய்ச்சி நிலையத்தில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றன. அவற்றின் அடிப்படையில் என்னுடைய இந்த சிறிய கட்டுரையை அறிஞர்கள் முன்னர் வாசிக்கிறேன்.

- **யோகஜாகமம்**

பொதுவாக நோக்கின், யோகஜாகமம் மற்ற ஆகமங்களில் காணப்படாததும், மிகப் பழமையானதாக இருக்குமோ எனத்

தோன்றுவதுமான சில கிரியைகளை விளக்குகின்றது. Colophon என ஆங்கிலத்தில் கூறப்படும் படலபுஷ்பிகாக்கள் சிலவற்றில் இவ்வாகமம் பிரதிஷ்டாதந்திரம் எனக் குறிக்கப்படுகிறது. அதற்கேற்ப, சிவலிங்கப் பிரதிஷ்டை, சிவாலயத்தில் காணப்படும் ஏனைய தெய்வமூர்த்திகளின் பிரதிஷ்டை ஆகியன விரிவாகவே விளக்கப்படுகின்றன. சௌசம், தந்ததாவனம், முதலான நித்யகர்மானுஷ்டானங்களைச் செய்யும் முறையை விரிவாகக் கூறுகிறது நித்தியானுஷ்டானவிதி படலம். பின்னர், ஸந்தியாவந்தனத்திற்கு அங்கமான ப்ராசனம், மார்ஜனம் ஆகியனவற்றின் செய்முறை விளக்கப்படுகிறது. இக்கிரியைகளில் வேதமந்திரங்களையே கூறவேண்டும் என்பது இங்கு விதிக்கப்படுகிறது:

सूर्यश्चेति मन्त्रेण उदकं प्राश्य यत्नतः ।

.......दधिक्राव्णोति प्रोक्षयेत् ।

அவ்வாறே, ஸந்தியாவந்தனமுடிவில், வ்யோமவ்யாபீ மந்திரம், புருஷஸூக்தம், விஷ்ணுஸூக்தம் ஆகியமந்திரங்களையும் ஜபிக்கவேண்டும் என்னும் விதியையும் நாம் காண்கிறோம்.

ஸ்நானவிதியில், வாருணம், பஸ்மஸ்நானம், மாஹேந்திரம், மாருதம், மந்திரஸ்நானம் ஆகிய ஐவகை ஸ்நானங்கள் விதிக்கப்படுகின்றன. ஆபோஹிஷ்டா எனத் தொடங்கும் மந்திரமும், பாவமான மந்திரமும் மந்திரஸ்நானத்திற்குரியனவாகக் கூறப்படுகின்றன. ஆனால், 12 ஆம் நூற்றாண்டில் மத்தியப்பிரதேசத்தில் இயற்றப்பட்ட ஸோமசம்புபத்ததியில்,

सद्योजातादिभिर्मन्त्रैरम्भोभिरभिषेचयेत् ।

मन्त्रस्नानं भवेदेवं..........

என்று நாம் காண்கிறோம்.

ஆலயத்தில் விருஷபம் முதல் பலிபீடம் ஈறான பரிவாரதேவதைகளை வழிபடும்போது பல வேதமந்திரங்களை ஜபிக்கவேண்டுமென்னும் விதியை யோகஜாகமத்தில் காண்கிறோம். அவை :-

वृषादिबलिपीठान्तं परिवारं प्रपूजयेत्।

पूर्वे तु वृषभं पूज्य तीक्ष्णशृङ्गायमन्त्रतः।

आग्नेय्यां दुर्गां..... कात्यायनीति मन्त्रतः।

नैर्ऋत्यां गणेशं सम्पूज्य गणानां त्वेति मन्त्रतः।

सौम्ये विष्णुम् इदं विष्णिवति मन्त्रतः।

கருவறையில் பூஜை செய்யுங்கால் கீழ்கண்ட மந்திரங்களைக் கூறவேண்டும்.

पञ्चब्रह्मशिवाङ्गैश्च त्र्यम्बकं विष्णुसूक्तकम्।

ब्रह्मसूक्तं गौरीसूक्तं श्रीरुद्रं पवमानकम्।

षड्सूक्तारुणं चैव त्वरितरुद्रमतः परम्।

மஹோத்ஸவம் 16 தினங்களுக்குக் கொண்டாடப்படவேண்டும்; துவஜாரோஹணத்திற்கு முன் செய்யப்படும் விருஷயாகத்தில் பல வேதமந்திரங்கள் கூறப்படவேண்டும் முதலியன மஹோத்ஸவவிதிபடலம் கூறும் சில முக்கியமான செய்திகள். பலபாகவிதி என்னும் படலம் சில அரிய செய்திகளை உடையது: சிவாலயத்தையும், அதன் பிராகாரங்களையும் செங்கற்களால் இழைத்தல், பல திரவியங்களைக் கொண்டு சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தல், செய்வித்தல் முதலான பல புண்ணியச் செயல்களைச் செய்வோர் அடையும் பயன்கள் இங்கு விளக்கிக் கூறப்படுகின்றன. இதுவரை அச்சில்வராததும், மிகப் பழமையானதும், சோழ மன்னர்கள் நிறைய நிவந்தங்களைத் தந்து பல சிவாலயங்களில் வக்காணிப்பதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்ட பெருமை கொண்டதுமான சிவதர்மம் என்னும் பழமையான நூலிலும் மேற்கண்ட பல சிவதருமங்கள் மிக விரிவாகக் கூறப்படுகின்றன. குறிப்பாக, ஐந்து, எட்டு ஆகிய அத்தியாயங்கள் இச்செய்திகளை மிக விரிவாகக் கொண்டவை. உதாரணமாக,

घृतधाराफलं तस्य माघे पौर्णिमपर्वणि ॥ १९ ॥

जागरं गीतनृत्ताद्यैः सकृत् कृत्वा तु पर्वणि।

मन्वन्तरशतं साग्रं शिवलोके महीयते ॥ २० ॥

छत्राभिरामनाट्याद्यं शिवस्यायतनाग्रतः।
सम्यक् प्रेक्षणकं दत्वा रुद्रलोके महीयते ॥ २१ ॥
स्वरूपः सुभगः श्रीमान् परिहृष्टोऽत्र जायते।
सप्तद्वीपसमुद्रायाः क्षितेरट्टिपतिर्भवेत् ॥ २२ ॥
शिवस्योपरि यः कुर्यात् सुवृत्तं पुष्पमण्डपम्।
शोभितं पुष्पमालाद्यैः आपीठान्तं प्रलम्बिभिः।
अत्याश्चर्यैर्महायानैः दिव्यपुष्पोपशोभितैः।
सर्वैः परिवृतः श्रीमान् गच्छेच्छिवपुरं सुखी।

மேற்கண்ட .சுலோகங்களுடன் ஒத்த கருத்தைக் கொண்டவை திருஞானசம்பந்தப்பெருமானின் பெரும்பான்மையான தேவாரப் பதிகங்களின் திருக்கடைக்காப்புப் பாடல்கள். உதாரணமாக, முதல் திருமுறை, ஒன்பதாம் பதிகம், பத்தாம் பாடலும், பதினைந்தாம் பதிகத்தின் பதினோராவது பாடலுமாகும்

ஏதத்தினை இல்லா இவைபத்தும் மிசை வல்லார்
கேதத்தினை இல்லார் சிவகெதியைப் பெறுவாரே.
பலம் மல்கிய பாடல்லிவை பத்தும் மிக வல்லார்
சிலமல்கிய செல்வனடி சேர்வர் சிவகதியே..

அசிந்தியவிசுவஸாதாக்கியமென்னும் அச்சில் வராத மற்றோர் ஆகமத்தின் 52 மற்றும் 53 ம் படலங்கள் பல சிவபுண்ணியங்களையும், அதைச் செய்வோர் அடையும் பல நற்பேறுகளையும் பட்டியலிட்டுக் கூறுவதும் இங்கு நினைவு கூரத்தக்கது. இவ்விரு படலங்களையும் பதினாறாம் நூற்றாண்டில் தில்லையில் வாழ்ந்த மிகப் புகழ்பெற்ற சைவசமய ஆசாரியரான மறைஞானதேசிகர் "சிவபுண்ணியத்தெளிவு" என்னும் தமது மிக அருமையான நூலில் மொழிபெயர்த்துள்ளார். அந்நூல் திருவாவடுதுறை ஆதீனப்பதிப்பாக ஒருமுறை வெளிவந்துள்ளது.[1]

---

1 இவ்வாண்டு அசிந்தியவிசுவஸாதாக்கியாகமத்தின் இவ்விரு படலங்களும் சிவபுண்ணியத்தெளிவும் சேர்ந்து அச்சாகி வெளியிடப்பட்டுள்ளன.

அடுத்து யோகஜாகமத்தில் நாம் காண்பது சிவபெருமானுக்கு ஆடல் பாடல்களால் வழிபாடாற்றும் தேவதாசிகளுக்கும், மற்றும் இசை வாணர்களுக்கும் செய்யவேண்டிய தீக்ஷையை விளக்கும் ருத்திரகணிகாதீக்ஷாவிதி என்னும் படலம். இதில், தினமும் புஷ்பாஞ்ஜலி செய்யும் போது இசைக்கவேண்டிய பலவித ராகங்கள், ஆடவேண்டிய நாட்டியவகைகள் ஆகியனவும் விளக்கிக் கூறப்படுகின்றன. சிவபெருமான் மீது துதியாகப் பல உரைநடை வாக்கியங்களும் இங்கு காணப்படுவது ஒரு சிறப்பு.

அடுத்து, அக்னிகார்யவிதியில் அக்னியை கார்ஹபத்யம், தக்ஷிணாக்னி, ஆஹவனீயம் என மூன்றாகப் பிரித்தல், கீழ்க்கண்டவாறு பல வேதமந்திரங்களை ஜபித்தல் ஆகிய ன இங்குள்ள சிறப்பு.

अदितेऽन्वादिमन्त्रेण परिषेचनमाचरेत् ।

युक्तोवाहादिमन्त्रेण...... अग्निमुखं प्रकल्पयेत् ।

कर्मान्ते चित्ताहुतिं कुर्यात्...... राष्ट्रभृत् तदा ।

மாறாக, ஸோமசம்புபத்ததியில் இதைப் போன்று எந்த வாக்கியத்தையும் நாம் காணவில்லை.

ஆசாரியரின் தகுதிகளைப் பற்றிக் கூறுமிடத்து, ஆதிசைவ ஆசாரியனானவர் வேதம், வேதாந்தம் ஆகிய சாத்திரங்களில் நிபுணராகவும், சிவபெருமான், அக்னி, தன்னுடைய குரு ஆகிய மூவரையும் நன் கு வழிபடுபவராகவும், சைவ ஆகமங்களில் நல்ல தேர்ச்சியும் உடையவராயிருக்க வேண்டும் என இவ்வாகமம் கூறுவது மற்றுமோர் அரிய செய்தி. மறைஞானசம்பந்தரும் த ன்னுடைய சைவசமயநெறியில் ஆசாரியரி ன் கல்வித்தகுதியைக் கூறுமிடத்து,

ஆரியன்பா லன்பாகி யாய்ந்தா கமமனைத்து
நேரியவே தாந்த நிலையும். (குறள், 21)

எனக் கூறுவது இங்கு நோக்கத்தக்கது. இக்குறளுக்கு உரை வரைந்த ஆறுமுகநாவலரவர்கள் இங்கு வேதாந்தமென்றது வேதத்தின்

ஞானகாண்டமான உபநிடதங்களும், பிரம்மசூத்திரமும், வேதசிவாகமமிரண்டையும் நன்குணர்ந்து

वयं वेदशिवागमयोर्भेदं न पश्यामः। वेदोऽपि शिवागमः

என்ற அடிப்படையில் பிரம்மசூத்திற்கு உரை வகுத்த ஸ்ரீகண்டபாஷியமும் கொள்ளப்படவேண்டும் எனக் கூறுவதும் நோக்கத்தக்கது. எனினும், காரணாகமத்தில் அவ்வாறு காணப்படவில்லை.

சிவலிங்கபிரதிஷ்டாவிதி படலத்தில்

ब्रह्मजज्ञानं, इदं विष्णिवति, मधुवाता, ङ्कतं मिमिक्ष्वेति

முதலிய வேதமந்திரங்களை யாகசாலையில் ஜபம் செய்யவேண்டுமென்னும் விதி காணப்படுகிறது. ரத்னலிங்கபிரதிஷ்டாவிதி ரத்னங்களாலான லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்யும் முறையை விளக்குகிறது. விபவநிச்சயம் என்னும் படலம் சிவாலயத்தில் அர்ச்சனை செய்யும் அர்ச்சகர்கள், பரிசாரகர்கள், மாலைகட்டுவோர், குயவர், தேவதாசிகள், வண்ணார் முதலியோரின் எண்ணிக்கைகளையும், பிற செய்திகளையும் கூறுகிறது.

- சிந்தியாகமம்

அச்சிலேறாத இவ்வாகமம் நிறைய படலங்களைக் கொண்டது; மந்திரோத்தரப்படலத்தில் ஆகமமந்திரங்களை சிவம், மஹேசம், ஸதாசிவம் என்னும் மூன்று வகையாகப் பிரித்தல், அகாராதிக்ஷகாராந்தமான 16 ஸ்வரங்களையும் ஜீவவர்ணம் எனப் பிரித்தல் முதலியன கூறப்படுகின்றன.

अकारादिक्षकारान्तं जीववर्णं षोडशस्वरम्।

தமிழ் மொழி இலக்கணத்திலும் அவ்வாறே ஸ்வராக்ஷரங்கள் உயிர் எழுத்துக்கள் எனப் பிரிக்கப்படுவது நாம் எல்லோருமறிந்த ஒன்று.

நித்தியானுஷ்டானவிதியில் வாருணம், ஆக்னேயம், மானஸம் (அதாவது மந்திரம்) ஆகிய மூவகை ஸ்நானங்களே விதிக்கப்படுகின்றன. ஸந்தியாவந்தனத்தை போதாயன ஸூத்ரமுறைப்படியே செய்யவேண்டும் என்னும் விதியும் காணப்படுகிறது.

तस्माद्बोधायनेनैव सन्ध्यामन्त्रक्रमं शृणु।

சிவார்ச்சனவிதிபடலம் மிக விரிவானதொன்று; ஆத்மசுத்தி முதலான ஐவகைச் சுத்திகள் மிகவும் விரிவாக விளக்கப்படுகின்றன. ஆத்மசுத்தி ஒன்பது பகுதிகளை உடையது:

उपस्थानं भस्मसु स्नानं पञ्चग्रन्थिहरं तथा ।
शिवाङ्गोपकरन्यासमङ्गन्यासस्थितिर्भवेत् ।
अष्टत्रिंशत्कलान्यासम् अक्षरन्यासमेव च ।

உபஸ்தானமெனப்படும் காயத்ரீஜபம் ஆலயத்தில் ஸூரியப் பெருமான் சந்நிதியில் செய்யப்படவேண்டியது, உறுதியான ஆசனமும், மூன்று முறை பிராணாயாமம் செய்தலும் பஞ்சகிரந்திஹரம் எனப்படுவது முதலியன இங்கு கூறப்படும் முக்கியச் செய்திகள். ஸதாசிவன் தொடங்கி அனைத்திலும் சிவபெருமான் ஒருவரே அந்தர்யாமியாகவும், அவை யாவற்றுக்கும் ஆன்மாவாகவும் விளங்குகிறார் என்பதைப் பின்வரும் சுலோகம் மிக அழகாக எடுத்துரைப்பதைக் காணலாம்:

पुष्पेषु मधुवज्ज्ञेयः तिलेषु तैलवत्तथा ।
देहेषु प्राणवत् प्राणः शिवः सदाशिवस्य तु ।

"பூக்களில் மதுவைப் போன்றும், எள்ளில் எண்ணெயைப் போலும், உடலில் பிராணசக்தியைப் போன்றும் சிவபெருமான் ஸதாசிவருக்குப் பிராணசக்தியாக விளங்குகிறார்"

அடுத்து, ஈசானம் முதலான பஞ்சபிரஹ்மங்கள், ஹ்ருதயம் முதலான ஆறு அங்கங்கள் ஆகியவற்றிற்குத் தனித்தனியே அவற்றின், நிறம், உருவம், சக்திகள் ஆகியனவும் எடுத்துரைக்கப்படுவது ஓர் அரிய செய்தி. ஈசானன் முதலியவற்றுக்கு முறையே அம்பிகா, குணாபீ,[2] கங்கா, கௌரீ, உமாதேவீ ஆகியோர் சக்திகள். மேற்கண்ட செய்திகள் மற்ற ஆகமங்களில் பெரும்பாலும் காணப்படவில்லை.[3] அதைப்போன்றே அஷ்டவித்தியேசுவரர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய சக்திகள் கூறப்பட்டுள்ளன.

---

2 கணாம்பான்று ஸூக்ஷ்மாகமத்தில் காணப்படுகிறது.

3 ஸூக்ஷ்மாகமத்தில் சிவார்ச்சனையை விரிவாக விளக்கும் ஐந்தாவது படலத்திலும் இச்செய்திகளைக் காணலாம்.

மற்றொரு படலம் சிவபூஜையினைச் சுருக்கமாக விளக்குகிறது. அதில் ஸதாசிவனுடைய தியானம் சற்று வேறுவிதமாகவும், சைவாகமநூலில் காண அரிதானதாகவும் உள்ளது.

त्वं शब्दनिलयं योगी असिशब्दे व्यवस्थितम्।

तत्त्वमस्यादिवाक्यार्थं ....

स ब्रह्मा स शिवः सेन्द्रः सोऽक्षरः परमः स्वराट्।

ऋतं सत्यमिति ख्यातं परं ब्रह्मा परात्परम्।

ऊर्ध्वरेतो विरूपाक्षं विश्वरूपमुमापतिम्।

एवं सदाशिवं ध्यायेत्.....

விஷுவாயனபூஜாவிதி என்னும் படலத்தில் விஷு, அயனம் முதலிய புண்ணியகாலங்களில் செய்யவேண்டிய விசேஷ பூஜை விரித்துக் கூறப்படுகிறது. புஷ்பாஞ்ஜலி செய்யும் போது இசைக்கவேண்டிய கீழ்க்காணும் தோத்திரம் மிக அருமையானது.

उत्पलैः पङ्कजैर्दूर्वैः क्रमेणार्चयेच्छिवम्।

विघ्नराजाच्यते तुभ्यं सदाशिवाय नमो नमः।

गणपाभ्यच्यते तुभ्यं व्योमव्यापि नमो नमः।

सुब्रह्मण्याच्यते तुभ्यं सर्वव्यापिन् नमो नमः।

सूर्यसोमाच्यते तुभ्यं ज्योतीरूपाय ते नमः।

गिरिकन्याच्यते तुभ्यं हौं शिवाय नमो नमः।

தீக்ஷைகளை மிக விரிவாக விளக்கும் தீக்ஷாவிதிபடலத்தில் மனிதர்கள் எல்லோருக்கும் அவர்களுடைய ஜாதிபேதங்களை நோக்காது தீக்ஷை செய்விக்கப்படவேண்டும் என்னும் வாக்கியம் காணப்படுகிறது.

जातिभेदा न विद्यन्ते सर्वमानुषं दीक्षयेत्।

தத்துவநிர்ணயவிதி என்னும் படலம் தத்துவங்களின் தோற்றம், உலகின் உற்பத்தி, தீக்ஷைகளின் முக்கியத்துவம் ஆகியவற்றை விளக்குகிறது. மனித உடலிலமைந்துள்ள நாடிகளைப் பற்றிய விளக்கக்கள் ஸமாதிவிதி என்னும் படலத்திலும், ஆத்மதத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம், நிவிருத்தி முதலான ஐந்து கலைகள், ஸரஸ்வதீ முதலிய சக்திகள் ஆகிய ஒவ்வொன்றின் மீதும் பாவனை எனப்படும் ஆழ்ந்த தியானத்தை மேற்கொள்ளுதல் ஆகியன ஸமாதிராஜவிதி என்னும் படலம் கூறும் அரிய செய்திகள். பாசத்தளையில் கட்டுண்டு உழலும் ஆன்மாவான பசுவின் தன்மை கீழ்க்காணுமாறு விளக்கப்படுகிறது:

किञ्चिज्ज्ञो मलिनः शुद्धः चैतन्यो माययावृतः ।

कर्ता भोक्ता शरीराद्यैः कृती व्यापी तु मूर्तिमान् ।

निर्गुणो निष्क्रियश्चैव शिवत्वप्राप्तिमान् भवेत् ।

शिवत्वप्राप्तिमान् भवेत् என்னும் வாக்கியம் இங்கு ஆழ்ந்து கவனிக்கத்தக்கது.

பசுவின் பரியாய நாமங்களாக

अणुरात्मा च जीवश्च पशुः पुद्गल एव च ।

क्षेत्रज्ञः पुरुषश्चैव पञ्चविंशक इत्यपि ।

पशुरित्यादिनामानि .... கூறப்படுகின்றன.

இவ்வாறாக, யோகஜம், சிந்தியம் என்னும் இதுவரை பதிப்பிக்கப்படாத இரு மூல ஆகமங்களின் முக்கிய விஷயங்களைச் சுருக்கமாக நாம் கண்டோம். ஏனைய ஆகமங்களைப் பற்றிப் பிரிதொரு சந்தர்ப்பத்தில் காண்போம்.

மீமாம்ஸா கூறும் இஷ்டிகள்

Dr. G. கிருஷ்ணமாச்சார்யார்
ஸம்ஸ்க்ருத பண்டிதர்,
சென்னை.

மீமாம்ஸா என்பதற்கு பூஜிதமான வேதாந்த்த விசாரம் என்பது பொருள். யாகம் என்பது தேவதையை குறித்து த்வ்யத்தை த்யாகம் செய்வது. இந்த யாகம் இஷ்டி, பசு, ஸோமம் என மூன்று வகைகளாக பிரிக்கப்படுகிறது. இஷ்டி என்பது தான்யத்தை கொண்டு செய்யப்படும் யாகம். இந்த இஷ்டி தர்சபூர்ணமாஸ இஷ்டி, பவமானேஷ்டி, தீக்ஷணீயேஷ்டி, அச்வப்ரதிக்ரஹேஷ்டி முதலானவை.

தர்சபூர்ணமாஸேஷ்டி

அமாவாசையில் மூன்று யாகங்கள், பூர்ணமாசையில் மூன்று யாகங்கள் என இவ்வாறு யாகங்களின் சேர்க்கையே தர்சபூர்ண மாஸேஷ்டியாகும்

பவமானேஷ்டி

ஆதானாத்தால் பெற்ற அக்னியின் ஸம்ஸ்காரத்திற்காக செய்யப்படும் இஷ்டியாகும்.

தீக்ஷணீயேஷ்டி

இந்த இஷ்டியும் ப்ரதான யாகமும் ஒரேகாலத்தில் சொல்லப்பட்டாலும் ப்ரதானத்திற்கு அனுகுணமாக அங்கம் இருக்க வேண்டும் என்பதைக் கொண்டு இவ்விஷ்டி முன்பே செய்யப்படுகிறது. முன்பு இந்திரன் தேவர்களின் கண்ணில் படில் மறைந்துவிட்டான்.

தேவர்கள் இவ்விஷ்டியை செய்து இந்திரனை பெற்றார்கள். எனவே நாமும் தேவர்கள்போல் இவ்விஷ்டியை செய்கிறோம்.

அச்வப்ரதிக்ரஹேஷ்டி

எவ்வளவு குதிரைகள் பெறப்படுகின்றனவோ அவ்வளவு வருணனுக்கு 4 கபால புரோவிச இஷ்டி செய்யப்பட வேண்டும். இதனை கொடுத்தவரா (அ) பெறுபவரா என்று விசாரித்து ப்ரஜாபதி வருணனுக்கு ஒரு குதிரையை கொடுத்தான் பிறகு ப்ரஜாபதிக்கு மஹோதரம் என்ற வியாதி வந்தது. உடன் ப்ரஜாபதி இவ்விஷ்டியை செய்து வியாதியிலிருந்து விடுபட்டான். எனவே கொடுப்பவரே செய்யவேண்டியது என தீர்மானித்தார்கள். இவ்வாறாக திகஅறிஷத்ததற்காக அதிதிக்கு ப்ராணீய உதயனீய இஷ்டி செய்யப்படுகிறது. ஸோமக்ரயத்திற்கு பிறகு ஸோமனுக்கு ஆதித்யேஷ்டி முதலான இஷ்டிகள் செய்யப்படுகின்றன.

॥ सामवेदस्य परिचयः ॥

ஸாமவேதம் - ஓர் அறிமுகம்

V. ராமக்ருஷ்ணன்,
ஸம்ஸ்க்ருத விரிவுரையாளர்,
ஸம்ஸ்க்ருத கல்லூரி, சென்னை

நமது ஸநாதனமான (இந்து) மதத்திற்கு ஆதாரமாய் உள்ளது வேதம். அப்படிப்பட்ட வேதத்தை ब्राह्मणेन निष्कारेणो धर्मः षडङ्गो वेदोऽध्येयो ज्ञेयश्च பிராம்மணன் காரணம் தெரிந்து கொள்ளாமலே வேதங்களையும் சாஸ்திரங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

துவாபரயுக முடிவில், கலியுக ஆரம்பத்தில் சற்றேறக்குறைய 5000 வருஷங்களுக்குமுன் வியாஸ மஹரிஷி வேதத்தை நான்காக பிரித்தார். உத்தரமீமாம்ஸை, பதினெட்டுப் புராணங்கள், பாரதம் முதலியவைகளைச் செய்தவர் அவரே. வேதம் முழுவதையும் அத்தியயனம் செய்வது என்பது முடியாத காரியம். ஒரு மனிதன் எவ்வளவு பாகத்தை அத்தியயனம் செய்து சிரேயஸை உண்டாக்கிக் கொள்ள முடியுமோ அவ்வளவை ஒரு பிரிவாகப் பிரித்துவைத்தார். அது சாகை என்று சொல்லப்படும். வியாஸருடைய சிஷ்யர் ஸுமந்து, பைலர், ஜைமினி, சைவம்பாயனர் என்னும் நால்வரும், ருக் யஜுர் ஸாம அதர்வவேதங்களை அவர் மூலம் தெரிந்துகொண்டார்கள்.

ருக்வேதத்தில் அநேக சாகைகள் உண்டு. அதில் ஒரு சாகைதான் இப்பொழுது உள்ளது. அதற்கு ऎतरेय சாகை என்று பெயர். யஜுர்வேதத்திற்கு 101 சாகைகள் உண்டு. தற்போது உள்ளது மூன்று சாகைகள்தான். அவை कान्वशाखा तैत्तिरीयशाखा माध्यन्तिन शाखा என்பவை.

सहस्रवर्त्मासामवेदः சாமவேதத்தில் 1000 சாகைகள் இருந்தன. தற்போது உள்ளது कौथुमशाखा तलवकारशाखा என்னும் இரண்டுதான்.

அதர்வவேதத்தில் ஒரு சாகைகூட இப்பொழுது இருப்பதாக தெரியவில்லை. வடக்கே உத்கல (ஒரிஸ்ஸா) தேசத்து பிராம்மணர்களில் 18 ஜாதிகள் இருக்கின்றன. அவர்களுக்குள் ஆதர்வணிகர் என்று ஒரு ஜாதி உள்ளது. அந்த ஜாதியின் பெயரால் அவர்கள் அதர்வணசாகை அத்தியயனம் பண்ணிக்கொண்டு இருந்தார்கள் எனத் தெரிகிறது.

வியாஸர் வேதத்தை பிரித்தபோது 1180 சாகைகளாக விபாகம் பண்ணினார். இப்பொழுது 8 தான் பாக்கி (அதற்குமுன் வேதங்கள் அநேகங்களாக இருந்தாலும், கலியுகத்திற்கு இவை போதும் என்று சுருக்கினார்). அதுவே இக்காலத்தில் குறைந்து விட்டது.

ஒரு சாகை என்பது ஒரு பிராம்மணன் பிறந்தது முதற்கொண்டு இறக்கும்வரையில் உள்ள கர்மாக்களுக்கு உபயோகமான விஷயங்கள் அடங்கி இருப்பது.

ஒவ்வொரு சாகையும் மூன்று பிரிவாக பிரிந்து இருக்கிறது. 1. மந்திரம், 2.பிராம்மணம், 3.உபநிஷத்.

மந்திரம் என்பது உச்சாரணம் பண்ணினால் புண்ணியத்தை தருவது அந்த மந்திரம் எந்த தேவதையின் ஸ்வரூபத்தை அறிவிக்கிறதோ அந்தத்தெய்வத்தை உத்தேசித்து அந்த மந்திரத்தைச் சொல்லி அக்னியில் ஒரு திரவியத்தை ஆஹுதி பண்ணவேண்டும். ஆஹுதி பண்ணும் பொழுது "நமஹ" என்று சொல்லவேண்டும். என்னுடையது இல்லை என்று அதன் அர்த்தம். எல்லாப் பொருள்களையும் ஈசுவரார்ப்பணம் பண்ணுவதற்கு அடையாளம் அது. இன்ன கர்மா இதை உத்தேசித்து இப்படிப் பண்ணவேண்டும் என்று சொல்லுவது பிராம்மணம். மந்திரமும் பிராம்மணமும் கர்மகாண்டம் ஒவ்வொரு சாகையிலும் முடிவில் இருப்பது உபநிஷத். பிராம்மணப்படி கர்மாக்களைப் நாம் எதற்காக பண்ணுகின்றோம்? நல்ல பலன் உண்டாவதற்காக நல்ல கர்மாக்களைப் பண்ணி அவற்றின் பலனை பரமேசுவரனுக்கு அர்பணம் பண்ணினால் ஈசுவரப்பிரஸாதம் கிடைக்கும். ஸத்தியம் வெளிப்படும்.

जन्माद्यस्य यतोऽन्वयादितरतश्चार्थेष्वभिज्ञः स्वराट्

तेने ब्रह्म हृदा य आदिकवये मुह्यन्ति यत्सूरयः।

तेजो वारिमृदां यथा विनिमयो यत्र त्रिसर्गोऽमृषा

धाम्ना स्वेन सदा निरस्तकुहकं सत्यं परं धीमहि ॥ श्री भागवतम्

என்று பாகவதம் சொல்கிறது. நாம் உண்மையில் இருந்து விலகியிருக்கிறோம். சில சமயங்களில் நாம் இப்படி இருந்தால் நல்லது என்று தோன்றுகிறது. ஆனால் அப்படி இருக்க முடிவதில்லை. நாம் செய்கின்ற கர்மாக்களை எல்லாம் ஈசுவரார்ப்பணம் பண்ணிப் பரமாத்மாவை அடையும் வழியைச் சொல்லுவதுதான் உபநிஷத்.

(இனி சாமவேதத்தை பற்றி சற்று விரிவாக பார்ப்போம்.)

சாமவேதத்தில் கிடைக்கப்பெற்ற कौथुम राणायनी जैमिनी சாகைகளுள் कौथुम சாகைதான் திராவிட தேசத்தில் அதிகமாக காணப்படுகின்றன. இந்த சாகைகளுக்கு அத்யாபகர்களான ஆசார்யர்கள் பதிமூன்று.

அவர்கள் - राणायनी सात्यमुग्री। दुर्वासः। भागुरि। गौरुण्डिः। गौल्गुलवी। औपमन्यवः। दारालः। गार्गिसावर्णी। वार्षगण्यः। कुथुमीः। शालिहोत्रः। जैमिनिः॥ என்பவர்கள் இவ்விதம் चरणव्यूहपरिशिष्ट த்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

कौथुम சாகை. மந்திரபாகம். ப்ராஹ்மணபாகம் என்று இரு பாகத்துடன் கூடியது. அதில் மந்திரபாகமானது ஆர்ச்சிரூபமாகவும், கானரூபமாகவும் உள்ளது. ஆர்ச்சிகம்,

पूर्वाचिकं। अन्तरार्चिकम् என்று இரு வகைப்படும். ப்ரக்ருதிஸாமாக்களுக்கு ஆதாராமாயுள்ள ஆர்ச்சிகங்களை பூர்வார்சிகம் என்றும், ஊஹகாணத்திற்கு ஆதாரமாயுள்ள ஆர்சிகங்களை உத்தரார்ச்சிகமென்றும் கூறப்படுகிறது. இந்த பூர்வார்ச்சிகம் 7 प्रपाठक ங்கள் கொண்டது. ஒவ்வொரு ப்ரபாடகங்களிலும் 10 கண்டங்கள் உள்ளன. உத்தரார்ச்சிகம் 9 (ஒன்பது) ப்ரபாடகங்கள் அதாவது இருபத்திரெண்டு அத்யாயங்கள் கொண்டது. ஒவ்வொன்றிலும்

பலகண்டங்கள் உள்ளன. पूर्वार्चिक एतक् सेख्या 650 उत्तरार्चिक த்தில் 1225 மொத்தம் ஸாமவேதத்தின் ऋक् संख्या 1875 ஆகும்.

இவைகளுக்கு सायणर् பரதஸ்வாமி, மாதவ பாஷ்யம் இருக்கின்றது. இதுவரையில் மந்திரபாகத்தில் உள்ள ஆர்ச்சிகங்களை பற்றி பார்த்தோம், இனிமேல் காணபாகத்தை பற்றி பார்ப்போம். காணபாகமானது ப்ரக்ருதி, ஊஹம் என்று இருவகைப்படும். ப்ரக்ருதி आरण्यकं ஊஹம் ரஹஸ்யம் என்றும் பெயர் மூலக்ரந்தங்களில் வழங்கப்படுகின்றது.

गानं त्रिविधम्। सामान्यतः ऋच्यध्यूढं साम गीयते इति ऋक्ष्वेव सामगानं भवति। कूचित् ऋग्व्यतिरिक्तेष्वपि वर्णसमूहेषु साम गीयते। तादृशा ऋग्व्यतिरिक्ताः अशिकाः वर्णाः स्तोभाः इत्युच्यते। लोके स्तोभ इत्यस्य आनर्थकः इत्यर्थः दृश्यते। न तथा अत्र मन्तव्यम्। इमेच स्तोभाः अर्थवन्तः। स्तोभः च त्रिविधः- अक्षरस्तोभः पदस्तोभः वाक्यस्तोभश्चेति। तत्र गानं च केवलं ऋक्षु अर्थात् स्तोभं विनैव गानमिति ऋग्विहीन केवलस्तोभेषु स्तोभसहितर्क्षु चेति त्रेधा गीयते। तत्र आद्यस्य अविर्गानम् इति द्वितीयस्य छन्नगानमिति तृतीयस्य लेशगानमिति च प्रातिशाख्येषु व्यवहारः। तथा च अत्र श्लोकः-

ऋग्विहीनं छन्नगानं लेशं स्तोभमृचा सह
आविर्गानं स्तोभहीनं एवं गानत्रयं विदुः॥

ஸாம காணம் என்பது ஏழுஸ்வரங்களை ப்ரதாணமாககொண்ட ஸ்வரங்களின் சமுதாயம்.

ப்ரக்ருதி ஸாமாக்கள் ஆர்ச்சிகத்தை யனுசரித்தே வருகின்றன பூர்வார்ச்சிகத்தில் உள்ள ருக்குகளையே காணமாய்ச்செய்வது ப்ரக்ருதி ஸாமாக்கள். ஒரு ருக்கில் ஒருஸாமமும் காணம் செய்யப்படுகிறது. ஒரே ருக்கில் பல ஸாமாக்களும் காணம் செய்யப்படுகின்றன. இதை ஏழுகாணமாக பிரிக்கின்றனர்.

गायत्रम् प्रथमगानमाग्नेयन्तुद्वितीयकम्
तृतीयमैन्द्रगानंस्यात् पावमानं चतुर्थकम्।

अर्कद्वन्द्व व्रतंचेति पञ्चमम् गानमुच्यते

षष्ठं च शुक्रियं गानं महानाम्नी सप्तमम् ।

एतानिसप्तगानानि प्रकृतेः कृथितनि च

என்று ஸாமவேத ஸர்வானக்ரமணீ என்ற க்ரந்தத்தில் சொல்லப்படுகின்றது.

गायत्रं आग्नेयम् जन्त्रम् पाव्मानम् अर्कद्वनूव्रत पर्वपि शुक्रियं महानाम्नी இவ்விதம் ஏழுகாணங்களாக பிரிக்கப்பட்டு உள்ளன.

அதேபோல் ऊह காணத்திலும் दशरात्रम् । संवत्सरम् । राकाहम् । अहीनम् । सत्रम् । प्रायश्चित्तम् । क्षुद्रम् என்றும் 7 பிரிவுகள் உள்ளன. இவை அனைத்தும் யாகங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்து உள்ளது.

சாமவேதத்திற்கு அஷ்ட பிராம்ஹணங்கள் அதாவது எட்டு ப்ராம்ஹணங்கள் உள்ளன. மற்ற வேதங்களைக்காட்டிலும் ஸாமவேதத்தில் ப்ராம்ஹணங்கள் அதிகமாக உள்ளது.

மேலும் ரிஷிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற இந்த வேதங்களை காப்பாற்றும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உள்ளது. அதை படித்தோ, படித்தவர்களை பேணிக்காப்பதன் மூலமாக வேதங்களை காப்பாற்ற வேண்டும் என்று கூறி வேதமாதாவின் அருள் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் கிடைக்கப்பெற்று எல்லோரும் க்ஷேமத்தை அடையவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வணங்கி எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

॥ शुभमस्तु ॥

சுவடிபாதுகாப்பும் பாதுகாப்புணர்வும்

முனைவர் ப. பெருமாள்
பாதுகாப்பாளர் மற்றும் நூலகர்,
சரஸ்வதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

மனிதன் தன் முன்னால் இருப்பவர்களுக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் தனது சந்ததியினருக்கும் பயன்படும் வகையில் தம் எண்ணங்களையும், கருத்துக்களையும் பதிவு செய்தான். அதற்காக கோடுகள், குறியீடுகள், வரைவுகளைப் பயன்படுத்தியுள்ளான். அதன் வளர்ச்சியே எழுத்தானது. வரிவடிவ எழுத்துக்கண்டுபிடிப்பு நாகரீகத்தின் முக்கிய வளர்ச்சியாகும். முதன்முதலில் கல்லில் (பாறைகளிலும், குகைச் சுவர்களிலும்) எழுதப்பட்டது. பாறைகள் ஒரு இடத்திலிருந்து மற்ற இடங்களுக்கு எடுத்துச்செல்ல இயலாது என்பதனால் செங்கள், ஒட்டுசில், உலோகத்தகடுக்கு எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. இப்பொருள்களை கையாளுவதும் தயாரிப்பதும் கடினமாக இருந்ததால் எழுதுவதற்கு எளிதாகக் கிடைக்கக்கூடிய தாவரப் பொருள்களான மரப்பட்டை, மரப்பலகை, பனைஓலைகள், மிருகங்களிடமிருந்து கிடைக்கும் தோல், எலும்புகள் பயன்படுத்தப்பட்டன. எகிப்தி பேப்பரைஸ் என்னும் நீர்த்தாவரத்தை சீவி குறுக்கும் நெடுக்குமாக வைத்து அழுத்துவதால் கிடைக்கும் தட்டு போன்ற பொருட்களைப் பயன்படுத்தியுள்ளார்கள், சீனாவில் துணிகளும், கொரியா மற்றும் ஜப்பான் நாடுகளில் மூங்கில் தர்ப்பைகளும் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டன.

இந்தியாவில் எழுதுவதற்கு கல், உலோகத் தகடுகளுடன் வட இந்தியாவில் மரப்பட்டைகளும், தென்னிந்தியாவில் பனை ஓலைகளும்

அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன. பனை ஓலைகளில் எழுதும் பழக்கம் தென்னிந்தியாவிலிருந்து மற்ற பகுதிகளுக்குப் பரவியதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றர். கி.மு ஐந்தாம் நூற்றாண்டிற்கு முன்பே ஓலைச்சுவடிகள் பயன்படுத்தியதற்கான குறிப்புகள் கிடைப்பினும், இந்தியாவில் கி.பி. 12-ம் நூற்றாண்டிற்குப் பின் எழுதப்பட்ட சுவடிகள் சிலவும் 16-ம் நூற்றாண்டிற்குப் பின் எழுதப்பட்ட சுவடிகள் அதிகமாகவும் காணப்படுகின்றன. இந்தியாவின் தட்பவெப்பநிலை, சமய, சமுதாய மாற்றங்கள், மன்னர்களுக்கிடையேயான போர்கள், மக்கள் இடம்விட்டு இடம் பெயருதல், கல்வி கலைகளில் ஆர்வமற்ற மன்னர்களின் செயல்பாடுகளினால் பல்லாயிரக்கணக்கான சுவடிகள் அழிவுற்றது. அவ்வாறு அழிவுற்றது போக எஞ்சியுள்ள சுவடிகள் இன்று பல நூலகங்ளிலும், சமயம் சார்ந்த மடங்களிலும் தனியார் இல்லங்களிலும் பாதுகாக்கப்படுகின்றன.

ஓலைச்சுவடி:-

பனை மரங்களில் பல வகைகள் இருப்பினும் அவற்றுள் ஒரு சிலவகை மரங்களின் ஓலைகள் மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. இந்தியாவில் அதிகமாக உள்ள சுவடிகள் சீதாளப் பனை என்னும் கூந்தல் பனை மற்றும் நாட்டுப் பனை மரங்களின் ஓலைகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பனை ஓலைகளை நிழலில் உலர்த்தி ஒரே அளவாக வெட்டி பின் பதப்படுத்தி தென்னிந்தியாவில் எழுத்தாணி கொண்டு கீறியும் வடஇந்தியாவில் மை கொண்டும் எழுதப்பட்டன.

கீறி எழுதப்பட்ட ஓலைகளில் எழுத்துகள் தெளிவாகத் தெரியவும், ஓலைகளைப் பாதுகாக்கும் எண்ணத்தோடும் மணத்தக்காளிசாறு, மாவிலைக்கரி, தர்ப்பைப்புல் கரி விளக்கெண்ணெயில் கொண்டு ஏற்றப்பட்ட விளக்குக் கரி ஆகியவற்றில் ஒன்றைச் சேர்த்து தடவப்பட்டது, இவ்வாறு எழுத்தாணி கொண்டு எழுதப்பட்ட ஓலைகளில் பூசும் பொழுது எழுத்துகள் மிக நன்றாய் தெரிவதுடன் பூச்சி மற்றும் பூஞ்சைக் காளான் ஆகியவற்றின் பாதிப்பிலிருந்து தடுக்கப்பட்டன. இவ்வாறு சுவடிகளும் இலைச்சாறுகளுடன் கரி கொண்டு பூசுவதை மையாடல் என்று குறிப்பிடுவர்.

பண்டைக் காலங்களில் வருடத்திற்கு ஒருமுறை மையாடல் செய்யப்பட்டது. இதற்கு மையாடல் விழா என உ.வே.சா அவர்களின் என் சரித்திரம் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு ஆண்டுதோறும் மையாடல் செய்தமையால் சுவடிகள் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டன. சமய மடங்களில் ஆனி மாதம் முதல் புரட்டாசி மாதம் வரையிலான சதுர் மாதங்களில் மடாதிபதிகள் வெளியே செல்லாமல் சுவடிகளைச் சுத்தம் செய்தல், புதிய துணிகளைக் கொண்டு கட்டி வைத்தல் மற்று மாணாக்கர்களைக்கொண்டு பிரதிகள் தயாரித்து எடுத்து பிறர்க்கு வழங்கினார்கள். இவ்வாறு சுவடிகளைத் தானமாக கொடுத்தலை கிரந்த தானம் எனக் குறிப்பிடுகின்றனர்.

தென்னிந்தியாவில் பனைஓலைகள் இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் எழுதுவதற்கு மட்டுமின்றி வரலாற்றுத் தகவல்களைக் கொண்ட ஆவணங்கள், குறிப்புகள், செலவுகணக்குகள், கடிதங்கள் எழுதுவதற்கும் பயன்படுத்தப்பட்டன. அன்றாட வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகள் ஓலைகளில் பதிவு செய்யப்பட்டமையால் முகூர்த்தவோலை, திருமணவோலை என்ற வார்த்தைகள் இன்றும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் சோழர்கள் காலத்தில் தேர்தல் முறையில் ஓலைகள் பயன்படுத்தியதை குடவோலை முறை என்றும் ஓலை எழுதுபவரை ஓலை நாயகம் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். பெரியபுராணத்தின் ஒருபகுதியான தடுத்தாட்கொண்டபுராணத்தில் சுந்தரரின் திருமண நிகழ்வை இறைவன் முதியவர் வேடமிட்டு ஒரு ஓலையைக் காட்டி நிறுத்துகிறார். அந்த ஓலையை பார்க்கும் நோக்கில் வாங்கிய சுந்தரர் அதனை கிழித்து எரிந்தார். அப்பொழுது முதியவர் வடிவில் வந்த இறைவன் நீ கிழித்தது படி ஓலையே, அதுபோன்ற படிவோலைகள் என்னிடம் பல உள்ளன. அதற்கான மூலவோலை கோவில் ஆவணக்களரியில் உள்ளது என்று கூறிய நிகழ்வும், திருமுறை கண்ட புராணத்தின் வழியாக தேவாரச் சுவடிகள் சிதம்பரம் கோவிலில் இருந்ததை அறியும் பொழுதும், பல கல்வெட்டுக் குறிப்புகளிலிருந்தும் சுவடிகள் கோவில்களில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன என அறியமுடிகிறது.

ஓலைச்சுவடிகள் போன்று மொகலாய மன்னர்கள் காலத்தில் காகிதத்தின் பயன்பாடு ஏற்பட்டது. காகிதத்தில் எழுதுவதும் கையாளுவதும்

எளிதாக இருப்பதால் 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து காகிதம் அதிகமாக எழுதுவதற்கு பயன்படுத்தப்பட்டது. காகிதச்சுவடிகள் கைவினைக் காகிதங்களில் பின்பு இயந்திரக் காகிதங்களிலும் இந்தியன் மை கொண்டு எழுதப்பட்டது. அவ்வாறு எழுதப்பட்ட காகிதச்சுவடிகள் பல நூலகங்களிலும், தனியார் தொகுப்பிலும் பாதுகாக்கப்படுகின்றன.

சுவடிப்பாதுகாப்பு:-

சுவடிப் பாதுகாப்பு என்பது நமது முன்னோர்கள் சுவடிகள் எழுதுவதற்கு ஆரம்பித்த காலம் தொடங்கி நடைபெறும் செயலாகும். சுவடிகள் அதிக நாட்களுக்கு இருக்க வேண்டும் என்று எண்ணி எழுது பொருட்களின் தன்மை மற்றும் இதர பொருட்களை தேர்வு செய்து சுவடிகள் எழுதப்பட்டன. அவ்வாறு எழுதப்பட்ட சுவடிகளைப் பாதுகாக்க மரபுவழிப் பாதுகாப்பு முறைகள் மற்றும் அறிவியல் வழிபாதுகாப்பு முறைகள் பின்பற்றப்படுகின்றன. இம்முறைகளினால் சுவடிகளைப் பாதிக்கும் காரணிகளிடமிருந்து காக்கவும், பாதிப்படைந்த சுவடிகளைச் செப்பனிடவும் செய்யப்படுகின்றன.

மரவழிப் பாதுகாப்பு முறையானது ஒவ்வொரு நாட்டிலும் எழுதப்பட்ட பொருட்களின் தன்மையைக் கொண்டு காலமாறுபாடுகளைக் கொண்டும் எளிமையான முறையில் பயன்பாட்டில் உள்ள பொருட்களைக் கொண்டும் இயற்கையில் கிடைக்கும் மூலிகைப் பொருட்களைக் கொண்டும் செய்யப்படுவன. அறிவியல் வழிப் பாதுகாப்பானது அறிவியல் வளர்ச்சியினால் ஆய்வு செய்து வேதிப் பொருட்களைக் கொண்டு சீராக்கி பாதுகாப்பு முறைகளைச் செய்வது ஆகும்.

சுவடிகளைப் பாதுகாப்பதற்காகப் பலவழிமுறைகளைப் பின்பற்றினாலும், பலவிதமான இயற்கைச் சீற்றங்களாலும், அரசியல் சமுதாய வேறுபாட்டினாலும் பல சுவடிகள் அழிவிற்குள்ளாயின. பொதுவாக ஓலைச்சுவடிகளை சுமார் 500 ஆண்டுகளுக்கும், காகிதச்சுவடிகளை 300ஆண்டுகளுக்கும் சாதாரண நிலையில் பாதுகாக்கலாம். ஆனால் சுவடிகளை முறையான வழிகளில் பேணிப் பராமரித்தால் ஆயிரமாண்டுகளுக்கு மேல் பாதுகாக்கமுடியும். ஆகையால் சுவடிகளைக்

கையாளுபவர்கள் சுவடிகளின் தன்மையையும், அழிவிற்கான காரணிகளைப் பற்றியும் அறிந்திருத்தல் அவசியம். அழிவிற்கான காரணங்களை அறிந்திருப்பின் அழிவைத் தடுக்கவும், பாதுகாக்கவும் இயலும். பொதுவாக சுவடிகள் அழிவதை இயற்கை அழிவு, செயற்கை அழிவு மற்றும் அறியாமை அழிவு என மூன்று வகைகளாகக் கொள்ளலாம். சுவடிகளுக்கு இயற்கை அழிவு என்பது தூசு, ஒளி, தட்பவெட்பம், நீர், தீ, பூஞ்சைக்காளான், பூச்சிகள் மற்றும் சுற்றுப்புற மாசுவினால் ஏற்படுவதாகும். செயற்கை அழிவு என்பது மக்களின் விருப்பு, வெறுப்பு, சமயக்காழ்ப்புணர்ச்சி, மன்னர்களுகிடையேயான போர் போன்ற செயல்பாடுகளினாலும், அறியாமை அழிவு என்பது சமயச் சடங்குகளினால் சுவடிகளைத் தீயிடல், ஆற்றில்விடல், வெளிநாட்டவருக்கு விற்றல், கவனிப்பின்மை போன்ற செயல்பாடுகளினால் ஏற்படுவது ஆகும். சுவடிகள் அழியாமல் பாதுகாக்க பலவழிமுறைகளைச் செய்துள்ளார்கள். சுவடிகள் வைப்பறை, கையாளும்முறை, காலமுறை கண்காணிப்பு மற்றும் பூச்சி எதிர்ப்பு பொருட்கள் பயன்படுத்துதலை மரபுவழி பாதுகாப்புமுறை எனலாம். பொதுவாக தூசி, வெப்பம் ஒளி, காற்றில் உள்ள ஈரப்பதம் போன்ற நான்கு காரணிகளைக் கட்டுப்படுத்தினால் பூஞ்சைக்காளான் வளராது. பூஞ்சை இல்லையெனில் பூச்சிகளின் பாதிப்பு இருக்காது. ஆகையால் சுவடிகளைப் பாதுகாக்க மண்ஜாடி, மூங்கில்பந்தை, சிவப்புவண்ண துணியில் சுற்றி வைத்தல், மர அலமாரி அல்லது மரப்பெட்டியில் வைத்தல் மேலும் சுவடிகளை கோவில் கர்ப்பகிரகத்தில் பரண் அமைந்து வைத்து, கோபுர அறைகளில் வைத்திருத்தல், இல்லங்களின் சமையலறையில் தூக்கு அமைத்து வைத்தல் போன்ற பாதுகாப்பு முறைகள் செய்யபட்டன. சிவப்பு நிறம் பூச்சிகளின் கண்களுக்கு ஒவ்வாது என்பதால் சுவடிகளை சிவப்பு நிற துணிகளில் சுற்றி வைத்தனர். அதுபோன்று பூச்சிகள் விரும்பாத மணம் கொண்ட சீடர்மர எண்ணெய், நிழலில் உலர்த்திய வேப்பமர இலை, வேப்பம்பூ, வேப்பம்பருப்பு, நொச்சி இலை, யூகலிப்டஸ் இலை, புங்க இலை, வசம்பு, கற்பூரம், மஞ்சள், பண்ரிபுல், சந்தன மரக்கட்டை போன்ற பூச்சி எதிர்ப்பு பொருளில் ஒன்றை சுவடி வைப்பறைகளில் வைத்துச் சுவடிகளில் பூச்சிகளின் பாதிப்பைத் தடுத்தனர். ஒரே பொருளை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதால் பூச்சிகள் அதனைத் தாங்கும் திறன் பெற்றிடும்

என்பதால் குறிப்பிட்ட காலத்திற்குப் பின் பொருட்களை மாற்றி பயன்படுத்தினர். நவீன விஞ்ஞான வளர்ச்சியினால் சுவடிகளைப் பாதுகாக்க படியெடுத்தல், நுண்படம் எடுத்தல், மின்னனுப் பதிவு செய்தல், சுற்றுறையிடுதல் போன்ற முறைகள் பின்பற்றப்படுகின்றன.

சுவடிப் பாதுகாப்புணர்வு:-

சுவடிகளைப் பாதுகாக்க சமண, பௌத்த, சைவ, வைணவ சமயத்தவர்களும், மன்னர்களும், சங்கங்கள், மடங்களை ஏற்படுத்தினர். இச்சங்கங்களும், மடங்களும் சிறந்த கல்விநிலையங்களாக திகழ்ந்துள்ளன. ஆகையால் சுவடிகளைப் பல்வேறு இடங்களிலிருந்தும் தொகுத்து மாணவர்களைக் கொண்டு பிரதிகள் செய்தனர். பல மன்னர்களும், சமயமடங்களும் சுவடிகளை தொகுத்தலை முக்கியப் பணியாகக் கொண்டிருந்தனர். குறிப்பாக தஞ்சையை ஆண்ட மாமன்னர் இரண்டாம் சரபோஜி தனது ஆட்சிக் காலத்தில் பல புலவர்களை ஆதரித்து நூல்கள் இயற்றச் செய்துள்ளார். அவர் காசி யாத்திரை சென்றபொழுது பல நூலகங்களிலிருந்து சுவடிகளைத் தமது அரண்மனை எழுத்தாளர்களைக் கொண்டு பிரதி செய்துள்ளார். நம் நாட்டு மன்னர்கள் மட்டுமின்றி கலையார்வமிக்க வெளிநாட்டுப் பயணிகள் மற்றும் அலுவலர்கள், கிருத்துவ மதபோதகர்கள், வரலாற்றாசிரியர்கள் சுவடிகளைத் தொகுத்து எடுத்துச் சென்றுள்ளனர்.

நமது நாட்டில் எழுதப்பட்ட சமஸ்கிருதச்சுவடிகளை மேலைநாட்டுக்கு அறிமுகம் செய்தவர் ராபர்ட் சேம்பஸ் என்ற வரலாற்றறிஞர் ஆவார். இவர் 1774ல் தொகுத்த சுவடிகள் செர்மான் அரசால் விலைக்கு வாங்கப்பட்டு பெர்லினில் உள்ள இம்பீரியல் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவருக்குப்பின் பல வெளிநாட்டறிஞர்கள் வடமொழியைப் பயின்று அதில் உள்ள முக்கிய நூல்களை ஆங்கிலமொழிபெயர்ப்பு செய்துள்ளார்கள். அவ்வகையில் வடமொழி பயின்று அம்மொழி வளர்ச்சிக்கு முதலில் உதவியவர் சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவராவார். இவர் 1789இல் சாகுந்தலத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். ஆங்கில ஆட்சியின்பொழுது தென்னிந்தியாவில் பணிபுரிந்த காலின் மெக்கன்ஸி, வில்லியம்டெய்லர், சி.பி. பிரௌன் மற்றும்

லெய்டன் போன்றோர்கள் சுவடிகளையும், அறிய நூல்களையும் தொகுத்தனர். அதில் ஒருபகுதி இன்று சென்னையில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகமாகத் திகழ்கிறது.சுவடிகள் வழிபாடு

எழுதப்பட்ட சுவடிகளை அனைவரும் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் கல்விக் கடவுளான சரஸ்வதி, ஹயகிரிவர், தட்சிணாமூர்த்தி, பிரம்மா மற்றும் கல்வியிற் சிறந்த புலவர்களின் சிற்பங்கள் மற்றும் ஓவியங்களில் சுவடிகளை கையில் வைத்திருப்பது போன்று வடிக்கப்பட்டுள்ளது. மக்கள் அனைவரும் சுவடிகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் நவராத்திரி விழாவின்பொழுது ஒருநாள் சரஸ்வதி பூஜை (புத்தக பூஜை) கொண்டாடப்படுகிறது. அன்று சுவடிகளைச் சுத்தம் செய்தல், புதுக்கயிறு மாற்றுதல், எழுத்துகள் தெளிவாகத் தெரிய மையிடுதல், புதுத்துணிகளில் கட்டிவைத்தல் போன்ற செயல்கள் செய்யப்படுகின்றன. இதுபோன்ற பல செயல்பாடுகளினால் சுவடிகள் பாதுகாக்கப்படுகின்றன. .

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் உள்ள சுவடிகளைத் பாதுகாக்கும் நோக்கில், தேசிய அளவில் தேசிய சுவடிகள் பாதுகாப்பு சேவையகத்தினை மத்திய அரசு தொடங்கியது. இதன் மூலம் சுவடிகள் கணக்கெடுப்பு, சுவடிகள் பாதுகாப்பிற்குத் தேவையான பயிற்சி அளித்தல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சுவடி பயில பயிற்சி அளித்தல் மற்றும் பாதுகாப்பு வசதியை மேம்படச் செய்தல் போன்ற செயல்பாடுகளைத் செய்ய உதவியது. ஆகையால் நமது நாட்டின் வரலாற்றுக் கருவூலமாகத் திகழும் சுவடிகளைப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

த்வைதமதம் - ஓர் அறிமுகம்

S.N. க்ருஷ்ணா,
உதவி ஆராய்ச்சியாளர்,
KSRI - சென்னை.

वेदोखिलो धर्ममूलं வேதம் என்பது நான்காக பிரிக்கப்பட்டுள்ளது. அந்த வேதத்தின் விசாரமாகவும் ஸாரபூதமாகவும் உபநிஷதங்கள் விளங்குகின்றது. இவையே ஸித்தாந்தங்கள் (வேதாந்தம்) என கூறப்படுகிறது. மீமாம்ஸா என்பது இரண்டு விதமாக இருக்கிறது. பூர்வமீமாம்ஸா - உத்தரமீமாம்ஸா என்பதாக உள்ளது. மீமாம்ஸா என்றால் "मातुं इच्छा मीमांसा அதாவது ஒரு விஷயத்தைப் பற்றி நன்றாக (விசாரம்) தெரிந்துகொள்வது. பூர்வ மீமாம்ஸை என்றால் கர்மகண்டத்தை மையமாக வைத்து விசாரம் செய்வதை குறிக்கிறது. உத்தரமீமாம்ஸை என்றால் ஞானகாண்டத்தை மையமாக விசாரம் செய்து தெரிந்து கொள்வது. உத்தரமீமாம்ஸைக்கு - (ब्रह्ममीमांसा சாஸ்த்ரம்) வேதாந்தம் என்று பெயருள்ளது. இந்த வேதாந்த சாஸ்த்ரம் அத்வைத விசிஷ்டாத்வைத, துவைதம் என்பதாக ப்ரஸித்தமாக உள்ளது. அத்வைதம் என்பது "ब्रह्म सत्यं जगन्मिथ्या जीवो ब्रह्मैव नापरः என்பதாக அத்வைத மதக்கோட்பாட்டில் ப்ரஹம்ம என்பது ஸத்யம், ஜகத்தானதது.அஸத்யம், ஜீவனும் ப்ரஹம்மனும் ஒன்று (ஐக்யம்) என்பதான தத்வத்தை விளக்குகிறது. விசிஷ்டாத்வைத மதக் கோட்பாட்டின்படி ப்ரஹம்ம ஸத்யம் ஜீவனும் ப்ரம்மனும் இந்த லோகத்தில் வேறு முக்தியில் ஐக்யம் என்பது அவர் ஸித்தாந்தம். த்வைதமதத்தின் கோட்பாடு அவ்விரு மதத்திற்கு மாறாக விளங்குகிறது. துவைதமதத்தை ஸ்ரீமன் மத்வாசாரியார் - ஆனந்ததீர்த்தர் (பூர்ணப்ரஞர்) ஸ்தாபனம் செய்தார்.

श्रीमन्मध्वमते हरिः परतरः सत्यं जगत्तत्वतो भ्रदो जीवगणाः हरेरनुचराः नीचोच्च भावं गताः।
मुक्तिर्नैज सुखानुभूतिरमला भक्तिश्च तत्साधनम् अक्षादित्रितयं प्रमाणमखिलैराम्नाय वेद्यो हरिः ॥

இந்த துவைதமதத்தில் ஹரியே ஸர்வோத்தமன், ஜகத் ஸத்யமானது, ஜீவகணத்தில் பேதம் உண்டு பஞ்சபேதம் என்பதை தெரிவிக்கிறார். ஜீவ - ஈஷ, ஜீவ - ஜீவ, ஜீவ - ஜட, ஜட - ஜட, ஈஷ - ஜட மற்றும் ஸாத்வீக, ராஜஸ், தாமஸ் என்ற மூன்று குணங்களால் தாரதம்யமாக ஜீவர்கள் உள்ளார்கள். முக்திக்கு ஸுகானுபூதியே முக்கியம் அதற்கு ஸாதனமாக பக்தி, ச என்ற சப்தத்தினால் ப்ரஸாதம் என்பதையும் கூறப்படுகிறது.

ஸ்ரீமதானந்ததீர்த்தர் 37 க்ரந்தங்களை இயற்றியுள்ளார் :-

भाष्याणां यशकं च पञ्चकयुतं तिस्रश्च निर्णीतयो
विष्णोः स्तोत्रयुगं दशप्रकरणं कल्पद्वयं च स्मृतिः।
श्री कृष्णामृत तन्त्रसार यमकन्यायावलीदीपनं
येनाकारि सदैव मध्वमुनिराट् दद्यात् सुविद्यां मम ॥

ஸ்ரீப்ரஹம்மசூத்ரத்திற்கு பாஷ்யத்தை செய்து மற்றும் சுருக்கமாக தெரிந்துகொள்ள அணுபாஷ்யம் என்பதை எழுதியுள்ளார். ப்ரஹம்மசூத்ரத்தின் தத்வத்தை சங்கரவரமாக ந்யாயவிவரணம், அனுவ்யாக்யானம் என்ற இரு க்ரந்தங்கள் மூலமாக விளக்கியுள்ளார். ஸ்ரீமத்பகவத்கீதைக்கு கீதாபாஷ்யம், கீதாதாத்பர்யம் என்பதாக இரு வ்யாக்யானங்களும், ஸர்வ ஸாஸ்த்ரத்திற்கு ஸங்க்ரமாக ஸ்ரீமன் மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம், ஸ்ரீமத்பாகவதத்திற்கு - பாகவததாத்பர்யம் எனவும், தர்காதி அன்யமத கண்டனம் செய்து தஷ ப்ரகரணம் இயற்றினார். தஷோபநிஷ்த்பாஷயம் எழுதி, ருக்வேத மந்திரத்திற்கு முதல் 40 சூக்தத்திற்கு பாஷ்யம் எழுதியுள்ளார். பகவானை ஸ்தோத்ரம் செய்வதற்காக ஸர்வ அவதாரத்தின் ஸ்தோத்ரமாக துவாதஸ ஸ்தோத்ரம் என்றும், தர்மாசாரத்திற்கு அனுகுணமாக ஸதாசார ஸ்ம்ருதி எனவும், கோவில்களின் நிர்மாணம். சிலா ப்ரதிஷ்டை கும்பாபிஷேக நித்ய பூஜாக்ரமம், தைனத்தின

ஜபக்கரமம் இதையெல்லாம் செய்வதற்க்காக "ஸதாசாரஸங்க்ரஹம்" என்ற பாஞ்சராத்ர ஆகமத்தின் சுருக்கத்தையும் செய்துள்ளார். மற்றும் க்ருஷ்ணாம்ருத மஹார்ணவம், யதிப்ரணவகல்பம், ஜயந்திகல்ப நிர்ணயம், யமகபாரதம் என்பதாக அன்ய க்ரந்தங்களை எழுதி துவைத ஸித்தாந்த ப்ரசாரத்திற்காக நாடு முழுவதும் தத்வவோபதேஷத்தை செய்துள்ளார். த்வைதமதத்தில் ஸர்வவேஷத்வ ஸ்வதந்த்ரத்வ க்யானானந்தாத்யனந்த அப்ராக்ருதகுணஷ்களுடன் கூடியதும், பராக்ருதமான ஸத்வாதி குணரஹிதமுமான ப்ரஹ்மமே நிஜமானது. இவ்விஷயத்தை "यः सर्वज्ञः" "सर्ववित् आकाशस्तल्लिङ्गात् " "परं ब्रह्म परंदाम" முதலிய ஸ்ருதிஸுூத்ரகீதாருப பரமாணங்கள் உறுதிப்படுத்துகின்றன.

ஜகத் ஸத்யமானது என்கிற விஷயம் "विश्वं सत्यं" "तर्द्त्त सत्यम् " "नित्योनित्यानां" "जन्माद्यस्य यतः " "असत्यमप्रतिष्ठं ते" முதலிய ஸ்ருதிஸீத்ரகீதா வாக்யங்களினால் ஸித்தமாகிறது. ஜீவன் ப்ரம்மத்தைவிட வேறானவன் மற்றும் ப்ரம்மத்தின் அதீனன் என்னும் விஷயத்தை द्वासुपर्णा என்ற ஸ்ருதியும் भेदः यपर्दशाश्चान्यः என்ற ப்ரம்ம ஸீத்ரங்களும் ஜீவேஷ்வர பேதத்தையே கூறுகிறது. மேற்சொன்ன விஷயங்கள் அனைத்தும் த்வைதஸித்தாந்தத்தின் கோட்பாடுகளை தெரிவிக்கின்றது. அனாதிகாலங்களால் நம் இந்து தர்மத்தை ப்ரசாரத்திற்காக அந்தந்த மதாசாரியார்கள் தம் தம் ஸித்தாந்தத்தை பரவசெய்து ஸித்தாந்தத்தை ஸ்தாபனம் செய்தார்கள், இந்துக்களிடத்தில் பக்தியையும் ஸித்தாந்த தீக்ஷையையும் ஏற்பட முக்யகாரணமாக இருந்தது. இதன் மூலமாக இந்து தர்மம் நன்றாக வளர்ந்தது. லோகத்திற்கும் க்ஷேமம் ஏற்படட்டும் என்பதாக எல்லாம் வல்ல இறைவனை ப்ரார்திக்கிறேன்.

புராணங்களில் தேசபக்தி

Dr. T.V. VASUDEVA
Deputy Director,
K.S.R.I., Chennai.

ஸம்ஸ்க்ருத இலக்கியத்தில் வேதங்களுக்கு அடுத்தபடியாகப் போற்றப்படும் புராணங்கள் நமது ப்ராசீன பாரதத்தின் மேன்மையான பண்பாட்டையும் அதற்குச் சிறந்த வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் விளங்கிய சான்றோர், மாமுனிவர்கள் மற்றும் பேரரசர் ஆகியவர்களின் வாழ்க்கை வரலாறுகளை உரைப்பதுடன் உலகின் தோற்றம், அழிவு போன்றவற்றையும் வர்ணிக்கின்றன. 'புரா' என்றால் 'பூர்வத்தில் - அதாவது முன்னொரு காலத்தில் என்று பொருள். பூர்வத்தில் நிகழ்ந்தவைகளை உரைப்பவை புராணங்கள் அது மட்டுமின்றி 'புராணம்' என்பதே பூர்வ காலத்தில் எழுதப்பட்டது என்றும் பொருள் கூறலாம்.

सर्गश्च प्रतिसर्गश्च वंशो मन्वन्तराणि च ।

वंशानुचरितञ्चैव पुराणं पञ्चलक्षणम् ॥ என்பதற்கேற்ப, புராணம் என்பது ஐந்து விஷயங்களை வர்ணிப்பதாக இருக்கவேண்டும்

அந்த ஐந்து விஷயங்களாவன:- ஸர்கம் - இது ஆதியில் நடந்த ஸ்ருஷ்டி, ப்ரதிஸர்கம் - யுகங்கள் தோறும் தொடரும் ஸ்ருஷ்டி, வம்சம் - ப்ரம்மாவின் புத்திரர்களிடமிருந்து தொடங்கி ஜீவகுலம் எவ்வாறு தலைமுறை தலைமுறையாக வளர்ந்தது என்பதைப் பற்றியது. மன்வந்தரம் - ஆயிரம் 'க்ருத' முதலான சதுர்யுகங்களில் உலகம் முழுவதும் மனுஷ்ய குலத்தின் முன்னோடிகளாக விளங்கிய பதினான்கு

மனுக்களின் காலத்தைப்பற்றிய விஷயங்கள், இறுதியில் வம்சானுசரிதம் - இது தேசத்தை பரிபாலித்த அரசர்களின் பரம்பரை, சூரிய சந்திர வம்சங்களின் விவரம் ஆகும். மேலும் பூகோள வர்ணனை வானவியல் போன்றவையும் வர்ணிக்கப்படவேண்டும் இவ்விதம் விளக்குகையில் புராணத்தை ஒரு வரலாறாக மட்டுமின்றி, புவியியலாகவும் கருதலாம்.

इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत्

வேதங்களில் கூறப்பட்ட கருத்துக்களை அறிவதற்கு இதிஹாஸங்களும் புராணங்களும் ஸாதனமாக விளங்குகின்றன. புராணங்கள் ப்ரதானமாக பதினெட்டு என கருதப்படுகின்றன. ஸ்தலபுராணம், மாஹாத்ம்யம் என்ற வெவ்வேறு பெயர்களில் குறிப்பிடப்படும் நூல்கள், புராணவகையைச் சார்ந்திருப்பினும் புராணலக்ஷணத்திற்குரிய ஐந்து குணங்கள் முறையாக காணப்படாததால் அவைகள் உபபுராணங்களாகவே வழங்கப்படுகின்றன. .

பொதுவாக, பதினெட்டு ப்ரதான புராணங்களிலும் பலசுவையான குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றில் நமது பாரததேசத்தின் மேன்மையை விளக்கும் புராண குறிப்புகள் சிலவற்றை இங்கு காண்போம். இக்குறிப்புகளில் சில, ஒரே கருத்தை ஒலிப்பனவாகவும் உள்ளன.

जननी जन्म भूमिश्च स्वर्गादपि गरीयसी

தாயும், பிறந்த மண்ணும் ஸ்வர்கத்தைக் காட்டிலும் சிறந்தவை என்ற ப்ரஸித்தமான வசனத்திற்கேற்ப ஒவ்வொருவருக்கும் தத்தம் மாத்ருபூமி எனப்படும் தாய்நாடு மிகவும் போற்றத்தக்கதாயுள்ளது தாயையும் தாய்நாட்டையும் ஒன்றாகக் கருதி போற்றும் மனப்பான்மை வேதகாலந்தொட்டு நிலவி வருவதை அறியலாம். நம் முன்னோர்கள் விண்ணைத் தந்தையாகவும் மண்ணைத் தாயாகவும் போற்றி வழிபட்ட குறிப்புகள் வேதங்களில் பல இடங்களில் காணலாம். அவ்வாறே நம் தேசத்தைப் போற்றும் குறிப்புகளையும் காணலாம். .

இதைத்தொடர்ந்து புராணங்களும் பாரததேசத்தின் சிறப்பையுணர்த்தி போற்றியுள்ளன. பாரததேசத்தின் அமைப்பு, அதன்

எல்லைகள் மற்றும் அங்கு வசிப்போர் போன்றவை அனைத்து புராணங்களிலும் வர்ணிக்கப்பட்டுள்ளன.

उत्तरं यत्समुद्रस्य हिमाद्रेश्चैव दक्षिणम् ।
वर्षं तद्भारतं नाम भारती यत्र सन्ततिः ॥

ஸமுத்ரத்திற்கு வடக்கிலும், இமயமலைக்குத் தெற்கிலுமுள்ள தேசம் பாரததேசமென்றும் அங்குள்ளோர் பாரதீ என்று அழைக்கப்படுவதாகவும் விஷ்ணுபுராணம் குறிப்பிடுகிறது. மேலும் பல மலைகளின் பெயர்கள் போன்றவற்றை விவரித்து மேன்மையான ஸ்வர்கம் அல்லது மோக்ஷம் பெற விரும்புவோர்க்கு உகந்த 'கர்மபூமி' இது என்றும் வர்ணிக்கிறது. ஸ்வர்கமோ, முக்தியோ அவரவர்களின் வினைகளைப் பொருத்து அமைவது இங்குதானன்றி வேறெங்குமில்லை.

इतः स्वर्गश्च मोक्षश्च मध्यं चान्तश्च गम्यते ।
न खल्वन्यत्र मर्त्यानां कर्मभूमौ विधीयते ॥

ஜம்புத் வீபத்தில் இருக்கும் இந்த பாரததேசம் மிகவும் உன்னதமானது, இப்புவியில் பிறவியெடுப்பது என்பது பல்லாயிரம் பிறவிகளுக்குப் பின் என்றாவது ஒருநாள் அதுவும் முற்பிறவிகளில் ஈட்டிய நற்பலன்களால் மட்டுமே இயலும். ஆகவேதான் தேவர்களும் பாரததேசத்தில் பிறந்தவர்களைப் போற்றுகின்றனர்.

गायन्ति देवाः किल गीतकानि धन्यास्तु ते भारत भूमिभागे ।
स्वर्गापवर्गास्पदमार्गभूत भवन्ति भूयः पुरुषाः सुरत्वात् ॥

ஸ்வர்கத்துக்கும், அபவர்கத்துக்கும் ஏதுவாய் அமைந்த பாரததேசத்தில் பிறப்பெய்துபவர்கள் பெரும் பாக்யசாலிகள் என்று அவர்கள் பாரததேசத்தின் மேன்மையை துதிக்கின்றனர். தமது ஸ்வர்கலோக வாழ்வு நிறைவுற்று மீண்டும் எங்கு தோன்றுவோம்! எவர் பாரததேசத்தில் தோன்றுவாரோ அவர் மிகவும் புண்யசாலியாவார் என்றும் விஷ்ணுபுராணம் பாரததேசத்தின் சிறப்பு உரைக்கப்படுகிறது.

ப்ரஹ்மபுராணமோ, இப்புவியில் பாரதத்தைப் போன்ற சிறந்த தேசம் எதுவுமில்லை. இங்கு பிறந்தவர்கள் அனைவரும் பெரும் பேறு பெற்றவர்கள் தேவர்களும் பிறவியெடுக்க விழையும் இப்பாரததேசத்தின் சிறப்பை யாரால் உரைக்க இயலும் என்று வியக்கிறது.

न भारतसमं वर्षं पृथिव्यामस्ति भो द्विजाः।

यत्र विप्रादयो वर्णाः प्राप्नुवन्त्यभिवाञ्छितम्।

धन्यास्ते भारते वर्षे जायन्ते ये नरोत्तमाः।

धर्मार्थ काममोक्षाणां प्राप्नुवन्ति महाफलम्।

यत्र देवाः सदा हृष्टाः जन्म वाञ्छन्ति शोभनम्

प्राप्यते भारते वर्षे न चान्यत्र द्विजोत्तमाः।

कः शक्नोति गुणान्वक्तुं भारतस्याखिलान्द्विजा॥

பத்ம புராணத்தில் ப்ரஹ்மாண்டத்தை விவரிக்கும் பொழுது பாரததேசமும் வர்ணிக்கப்படுகிறது. மனு, ப்ருது, இக்ஷ்வாகு, யயாதி, அம்பரீஷன், நஹூஷன், தீலீபன் போன்ற சிறந்த அரசர்கள் இந்த தேசத்தை நன்கு பரிபாலித்ததாகப் போற்றப்பட்டது.

यदेतत् भारतं वर्षं पुण्यं पुण्यविधायकम्। सर्वेषामेवभूतानां प्रियं भारतमुत्तमम्॥

ப்ருஹன்னா தீய புராணத்தில் விரும்பியது அனைத்தையும் நல்கும் தேசமாகவும், வினைகளுக்கேற்ப பலன்களை அனுபவிக்கக்கூடிய தேசமாகவும் பாரதத்தை வர்ணித்து தேவர்களும் இம் மண்ணில் பிறப்பெடுக்க விரும்புவதாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

भारतेतु कृतं कर्म शुभं वाऽशुभमेव वा।

आफलक्षपणं कर्म भुज्यतेऽन्यत्र जन्तुभिः॥

अद्यापि देवा इच्छन्ति जन्म भारत भूतले।

कदा पुण्येन महता प्राप्स्याम परमं पदम्॥

एवं भारत भूभागं प्रशंसन्ति दिवौकसः।

तस्मान्पुण्यतमो ज्ञेयः सर्वकर्मफलप्रदः।

भारताख्यो महाभाग देवानामपि दुर्लभः॥

பாரததேசத்தை 'புண்யதம:' என்றும் 'தேவானாபமி துந்லப:' என்றும் குறிப்பிடுவதிலிருந்து அதன் சிறப்பு பன்மடங்காக உயர்வதை அறியலாம்.

மார்கண்டேய புராணத்தில் பாரதத்தின் சிறப்பை வர்ணித்து, தேவர்கள் தம் நிலையிலிருந்து பூமியில் எப்பொழுது மனிதப்பிறவி அடைந்து பாரதத்தில் தோன்றுவோம் என்றுரைப்பதாகக் காணப்படுகிறது.

तदेवद्भारतं वर्ष सर्वबीजं द्विजोत्तम।

अपि मानुष्यमाप्स्यामो देवत्वात्प्रच्युताः क्षितौ॥

அக்னி, வாமன, கூர்ம, மத்ஸ்ய புராணங்களில் பாரததேசம், அதன் எல்லைகள், மலைகள், நதிகள் சில தேசங்கள் மற்றும் அங்கு வாழ்வோர் ஆகியவை விளக்கமாக உரைக்கப்பட்டுள்ளன.

பாகவத புராணத்தில் ஐந்தாவது ஸ்கந்தத்தில் ஜம்புத்வீபத்தை விவரிக்கும் போது பாரததேசம், அதன் மலைகள், மலைகளிலிருந்து பெருகி ஓடும் நதிகள் ஆகியவற்றை குறிப்பிட்டு இந்நதிகளின் பெயர்களை உச்சரித்தாலும் புனிதமாக்கும் தன்மையுடையவை என்று கூறப்பட்டுள்ளது.

भारतेऽप्यस्मिन् वर्षे सरिच्छैलाः सन्ति बहवः मलयो मङ्गलप्रस्थः मैनाकः त्रिकूटः ऋषभः कूटकः इन्द्रकीलः कामगिरिरिति च अन्ये च शतसहस्रशः नितम्बप्रभवा नदा नद्यश्च सन्ति असङ्ख्याताः। एतासाम् अपः भारत्यः प्रजा नामभिरेव पुनन्ती नामात्मना च उपस्पृशन्ति।

இவைகளை மேலும் விவரித்து பாரததேசத்தில் பிறப்பெடுக்க மக்கள் என்ன தவம் செய்திருப்பார்கள் என்று தேவர்களே வியந்ததாகக் காணப்படுகிறது. மேலும் ஒரு கல்பகாலம் ஸ்வர்கத்திலிருப்பதைக்

காட்டிலும் ஒரு நொடிக்கால ஆயுளிருப்பினும் அதை பாரததேசத்தில் தோன்றுமாறு அமைத்தல் நலம் என்றும் தேவர்கள் விரும்பியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

कल्पायुषां स्थानजयात्पुनर्नवात क्षणायुषां भारत भूजयो वरम्।

क्षणेन मर्त्येन कृतं मनस्विनःसन्यस्य संन्यान्त्यभयं पदं हरेः॥

ஏனெனில் ஒரு நொடிக்காலத்தில் அனைத்தையும் விலக்கி இறைவனின் திருவடிகளைத் தஞ்சம் புக இயலும். இதுவே விஷ்ணு புராணத்திலும் காணப்படுவதாகும் .

ஹரிவம்சபுராணத்தில் மனிதர்களுக்கும் அவர்களது தாய்நாட்டிற்குமுள்ள நெருக்கமான பிணைப்பு அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

वर्धनीया वयं वीरा त्वया यादवनन्दन।

अथवा प्राणिनस्यात रमन्ते जन्मभूमिषु॥

சிவபுராணத்தில் உமாஸம்ஹிதையில் எவரொருவர் பெறற்கரிய மனிதப் பிறவியெடுத்து பாரததேசத்தில் தோன்றி, நற்காரியங்களில் ஈடுபட்டு மகிழ்பவரோ அவர் ஸ்வர்கம், மோக்ஷம் என்ற இரு பேறுகளையும் பெறுவர் என்று கூறப்பட்டுள்ளது.

आप्स्यन्ति धन्याः खलु ते मनुष्याःसुखैर्युताः कर्मणि सन्निविष्टाः।

जनुर्हि येषां खलु भारतेऽस्ति ते स्वर्गमोक्षोभय लाभवन्तः॥

வராஹ, மத்ஸ்ய, கருட புராணங்கள் பாரததேசத்தை வர்ணிப்பதுடன் தேசத்தின் ஒற்றுமையையும் நலனையும் குறிப்பிடுகின்றன. வராஹபுராணம் நாட்டின் வளர்ச்சியையும், அமைதியையும் இறைவனிடம் வேண்டுகிறது.

राष्ट्रं प्रवर्धतु विभो शान्तिर्भवतु नित्यशः।

மத்ஸ்ய புராணம் எவனொருவன் நாட்டுநலனை கருத்தில் கொள்கிறானோ அவன் நாட்டைக் காப்பாற்றுபவனாவான் என்றுரைக்கிறது.

यो राष्ट्रमनुगृह्णाति स राष्ट्रं परिरक्षति ।

அவ்வாறே கருடபுராணமும் க்ஷத்ரியனானவன் எதிரிகளை அழித்துத் தனது தாய்நாட்டைக் காக்கவேண்டுமென்று குறிப்பிட்டு பகைவர்களற்ற அமைதியான நாட்டில் மக்களனைவரும் எல்லா நலனையும் பெற்று நோய் நொடியின்றி வாழவேண்டும், எவரும் அல்லல்படக்கூடாது என்று வேதங்களின் வழியில் அருள்கிறது

सर्वेषां मङ्गलं भूयात् सर्वेसन्तु निरामयाः ।

सर्वे भद्राणि पश्यन्तु मा कश्चिद् दुःखाभाग्भवेत् ॥

Recent Developments in the Library of Sridurga Indological Research Institute

S. VENKATACHALAM
Researcher
Sridurga Indological Research Institute

I am very glad and proud to share about our library's recent developments in this occasion. As a part of Indological research institute we declared it as a library only three years back but started collecting rare books, paper-scripts etc., very long back.

Expert Committee:-

There are two full time library staffs, a librarian and an assistant are there and other staffs give supporting hand to them. Our librarian is a polyglot, well versed in reading, writing and spoken Sanskrit, Telugu, Kannada, Malayalam and Tamil. He also possesses good command over in reading Granta script also.

National Mission for Manuscripts:-

National Mission for Manuscripts (NMM) certified our institute as "Manuscript Partner Centre (MPC)". We issued them the details of our manuscript collections completely.

Conservation and Preservation:-

As a part of maintaining a library, we are doing conservation works also. In conservation process, we are conserving old damaged books by binding it, else digitizing it. We are digitizing the old books and also manuscripts by scanning it or taking photographs by using high resolution

digital camera with the help of a professional photographer. We are trying our level best to impart the latest technologies in all aspects.

Sales of Books:-

As far as now institute has around 25 books in it's own publication arena viz. "Subhashita Sloka Manjari – I, Subhashita Sloka Manjari – II, Shiva Sankhabhisheka Kriya Manjari, Tamraparni Vaidika Samajam (Address Book), Stuti Sangraham, Rig-Veda Satabhisheka Vidhi Prayoga, Guha Sankhabhisheka Kriya Manjari, Shodasopacara Mantra Sangraham, Iraivanai Tarisikka Ellorukum Urimai, Shiva Pujastavam, Shivashtottara Satanama Stotram, Dikbalaka Suktam, Shivalaya Vazhipatu, Unnatapurishvara Mahatmyam, Sivapunya Telivu, Saivanushtana Vidhi, Sivajnyana Bodham, Pushpanjali" etc., and several books are under process to get publish. The books are predominantly in Sanskrit language but in various scripts viz., Devanagari, Granta. Copies of our own publications are also available for sale.

Improvement of Readers:-

Readers are the backbone on the development of a library. Keeping the point in mind we are concentrating in developing the infrastructure of our library to provide a good service for readers to easily find books, easy browsing options, reference area (reading hall) and cards system.

To find books easily, we prepared one primary hand-list in script wise. By this a reader can easily search books script wise. Similarly to borrow books easily we are using card system and according to this process we are giving a membership number for each reader and also issuing them a membership card. They can use their card and easily borrow books under that.

Cataloguing:-

As far as yet we fully catalogued Tamil and Devanagari books by using a CRM designed specially considering all our needs and designed in our own style by keeping ease of work and data security in our mind. Also we completed preparing a hand-list catalogue for our manuscript and presently working on descriptive catalogue.

தென்னிந்தியச் சுவடிகளும் அவற்றைப்பற்றிய விழிப்புணர்வும்

J. வரதராஜன்
ஆராய்ச்சியாளர்,
ஸ்ரீதுர்கா ஆய்வு நிறுவனம்

உலகிலுள்ள நாடுகளில் நம் பாரததேசத்திற்குத் தனிச்சிறப்பும், பெருமையும் உள்ளன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். நம் பாரததேசத்திற்குப் பெருமை சேர்க்கக்கூடிய விஷயங்களில் முக்கியமானது நம் கலாச்சாரமாகும். பண்டையகாலத்து நம் கலாசாரங்களை நாம் அறிந்துகொள்ள நமக்கு உதவுவன அக்கால கல்வெட்டுக்களும் ஓலைச்சுவடிகளும் ஆகும். அவற்றைப் பாதுகாத்ததன் மூலம் நம் முன்னோர்களின் பழக்கவழக்கங்கள், அந்தக்காலத்தில் நடந்த சம்பவங்கள், கணக்குவழக்குகள் போன்றவற்றை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. இன்றைய விஞ்ஞான உலகில் கணினி, தொழில்நுட்ப வளர்ச்சி, குறுந்தகடு, புத்தகம் போன்றவைகளால் நமக்கு மிகவும் நன்மைகள் உள்ளன. இவற்றின்மூலம் நாம் சுலபமான முறையில் விஷயங்களைப் பதிவுசெய்து வருங்காலத்தினருக்கு நாம் அவற்றைப் பயனுள்ளதாகக் கொடுக்க முடியும். ஆனால் முந்தைய காலத்தில் இவ்வித வசதியில்லாத காரணத்தால் அறிந்த விஷயங்களைச் சுவடிகளில் பதித்து அவற்றைப் பாதுகாத்து நமக்கு கொடுத்திருக்கிறார்கள். அவற்றை நாம் நன்கு பாதுகாத்து அவற்றிலுள்ள பல அரிய விஷயங்களை அறிந்துகொண்டு அவற்றிற்கேற்றாற்போல் நாம் செயல்பட முயற்சிக்க வேண்டும். உதாரணத்திற்கு அக்காலத்தில் நோய்களுக்கு அவர்கள் பயன்படுத்திய மூலிகை மருந்துகள் பற்றிய குறிப்பை

ஓலைச்சுவடியில் எழுதியுள்ளார்கள். அதை மூலமாக (ஆதாரமாக) வைத்து இன்றைய மருந்துகள் உருவாக்கப்படுகின்றன என்றால் அது மிகையல்ல. இது போன்ற பல விஷயங்களை உள்ளடக்கிய சுவடிகள் பற்றியும் இன்று அவை எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றன என்பன பற்றியும் நம் பாரத அரசாங்கம் அவற்றிற்கு என்னென்ன வழிவகைகள் செய்துள்ளது என்பது பற்றியும் இக்கட்டுரையில் சற்றுச் சுருக்கமாகக் காண்போம்.

சுவடி பற்றிய சிறு குறிப்பு :-

சுவடி என்னும் சொல் கையால் எழுதிய நூலைக் குறிப்பது (காரணப்பெயராய் அமைந்தது.) தந்திரம், தூக்கு, நூல், பனுவல், புத்தகம் போன்ற சொற்களும் சுவடியைப் போன்று அமைந்தனவாகும். சுவடியைப்பற்றி அறிவது சுவடியியலாகும்.

சுவடியின் தோற்றமும் வளர்ச்சியும்:-

இக்காலத்தில் நாம் கல்விகற்க அச்சுநூல்களும், தாள்களும், கரும்பலகைகளும் பயன்படுவதுபோல முந்தைய காலத்தில் பாடங்களைப் பகிர்ந்துகொள்ள வசதியில்லாததாலே ஆசிரியர் திண்ணைப்பள்ளிக்கூடம் சென்று கற்பிக்கும் முறை போன்றவையின் மூலமே மனிதன் நினைத்ததை எழுதிவைக்க எடுத்த முயற்சியின் வரிசையில் ஓலைச்சுவடியின் தோற்றம் உருவாகியது. அதன்படி ஒருவர் எழுதிய விஷயமானது (உதாரணத்திற்கு தொல்காப்பியம்) வேறு ஒரு பண்டிதருக்கு தேவைப்படும் நிலையில், அதைப் படியெடுக்க உதவியதன் மூலமாகவே வளர்ச்சியும் ஏற்பட்டது. படி எடுத்தல் என்பது ஒரு சுவடியைப் பார்த்து அப்படியே வேறொரு சுவடியில் எழுதுவது ஆகும். அரசர் காலத்தில் வரவு - செலவு என்னுமுறை, வைத்யமுறை குறிப்புகளும் சுவடிகளிலேயே பதிப்பிக்கப்பட்டு மாபெரும் வளர்ச்சியைக் கண்டது.

2003- 2008 இந்தியச் சுவடி பாதுகாப்பு இயக்கம்

நம் (இந்திய) மத்திய அரசின் கலாசாரத்துறையானது நம் நாட்டின் பழமையைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்திவந்த காலகட்டத்தில் கடந்த 2003ஆம் ஆண்டு தேசிய சுவடி பாதுகாப்பு இயக்கம் (NMM) என்ற

அமைப்பை உருவாக்கி நம் நாட்டில் உள்ள சுவடிகளின் எண்ணிக்கை, நிலை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை அறிய பல வழிமுறைகளை மேற்கொண்டது. அதில் ஒரு பகுதியாக தன்னார்வம் கொண்டவர்களைக் கொண்டு ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று சுவடிகள் பற்றிய விவரங்களை சேகரிக்கத் தொடங்கியது. அதுவரையில் நம் நாட்டில் சுவடிகள் அதிக அளவில் உள்ளது என்பது ஒரு கருத்தாகவே இருந்தது. ஆனால் இந்த விபர சேகரிப்புக்குப்பின் நம் நாட்டில் சுமார் 5 கோடி சுவடிகள் உள்ளது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இன்றும் நம் தேசத்தில் சுவடி கணக்கெடுப்பு நடந்துகொண்டிருக்கிறது. இந்த ஆய்வு நிறுவனத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட சுவடிகள் உள்ளது. இவற்றை நன்கு பாதுகாத்து அவற்றிலுள்ள பல அரிய பொக்கிஷங்களை புத்தகவடிவில் மாற்ற இந்த ஆய்வு நிறுவனம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்த ஆய்வு நிறுவனம் தேசிய சுவடி பாதுகாப்பு இயக்கத்தினால் துணை சுவடி பாதுகாப்பு நிறுவனம் என அங்கீகரிக்கப்பட்டிருந்தது என்பதை இந்த தருணத்தில் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

தென்தமிழகத்தில் சுவடிகளின் விழிப்புணர்வு:-

நம் தமிழகத்தில் பொதுவாக சுவடிகள் அதிகமாக காணப்படுகிறது. அதிலும் தென் தமிழகத்தின் மாவட்டமான திருநெல்வேலி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிளான தாமிரபரணி நதிக்கரையோரம் அமைந்துள்ள கிராமங்களில் குறிப்பாக கிருஷ்ணாபுரம், திருவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, குரும்பூர், திருச்செந்தூர் வரையிலான (குறிப்பாக ஸம்ஸ்க்ருத பண்டிதர்கள் நிறைந்த) கிராமங்களில் (அக்ரஹாரம்) காவ்யம், ப்ரயோகம், வைத்யம், புராணச்சுவடிகள் காணப்படுகின்றன. இவைகள் சுமார் 200 வருடங்களுக்கு முன் எழுதப்பட்டு உள்ளது. அவற்றை பாதுகாத்து வைத்துள்ளனர். இன்றைக்கு இந்த சுவடிகளை எவ்வாறு பாதுகாப்பது என்பது சிலபேருக்குத் தான் தெரிந்திருக்கிறது. பலருக்கு தெரியாத காரணத்தால் சுவடிகள் பல மிகவும் சிதிலம் அடைந்து அழிந்து வருகின்றது. சுவடி பாதுகாத்தல் பற்றி அவர்களுக்கு தெளிவுபடுத்தினால் சுவடிகளின் அழிவிலிருந்து அவற்றை நாம் பாதுகாக்க முடியும். இதற்கான முயற்சியில் இந்த ஆய்வு நிறுவனம் செயல்பட்டு வருகின்றது.

தமிழகத்தில் க்ரந்த லிபியின் ஆதிக்கம்:-

நம் பாரததேசத்தில் பல்வேறு மொழிகள் உள்ளன. இவற்றுள் ஸம்ஸ்க்ருத மொழியும் ஒன்று. இம்மொழி இந்தியா முழுவதும் பொதுவாக பயன்படுத்தப்பட்டது. இந்த ஸம்ஸ்க்ருத மொழியில் பல முனிவர்களும் அறிஞர்களும் இதிஹாஸங்கள், புராணங்கள், சாஸ்த்ரங்கள், காவ்யங்கள், வைத்யம் ஆகியவற்றை சுவடிகளில் எழுதியுள்ளனர். சுவடிகளில் ஸம்ஸ்க்ருத மொழியின் லிபியான தேவநாகரியில் எழுதுவது மிகவும் கடினமான ஒன்று. எனவே சுவடி பதிப்பிற்காக உருவாக்கப்பட்டது க்ரந்த லிபியாகும். இந்த லிபியின் எழுத்துக்களில் சில தமிழ் எழுத்துக்களைப் போல் காணப்படுவது தனி சிறப்பாகும். இந்த க்ரந்த லிபியில் எழுதப்பட்ட சுவடிகள் மிக அதிகமாக நம் தமிழகத்தில் காணப்படுகின்றது.

சுவடிகளின் எதிர்காலம்:-

நம் நாட்டின் பொக்கிஷமாக கருதப்படும் சுவடிகளில் பல முறையான பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு வசதிகளின்றி அழிந்துவரும் நிலையில் உள்ளது. இச்சுவடிகளில் பல அரிய விஷயங்கள் அடங்கியுள்ளது. இவற்றை நாம் சரிவர பராமரித்து பாதுகாத்தால்தான் எதிர்காலத்தில் அவை எத்தனை ஆண்டுகளானாலும் அவற்றை பயன்படுத்த முடியும். நம் தேசத்தின் பொக்கிஷமான சுவடிகளை பாதுகாப்பது இந்தியரான நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

சிவபூஜை - ஓர் அறிமுகம்
(சைவசித்தாந்த அடிப்படையில்)

சத்யோ. சு. ஸ்ரீதர் சாமிநாதன்
ஆய்வாளர்,
சமஸ்க்ருதத் துறை,
சென்னை பல்கலைக்கழகம்.

शिवं शिवां शिवसुतौ शिवभक्तान् शिवाधिमान्।
अस्मदाचार्य पर्यन्तान् गुरुवर्यान्नतोस्म्यहम्॥

உலகில் இருக்கும் அனைத்து ஜீவராசிகளின் ஒரே நோக்கம் "நான் சுகமாக இருக்க வேண்டும்" என்பதே ஆகும். இந்த அடிப்படையான கருத்தினை மனதில் கொண்டுதான் ப்ரபஞ்சத்தில் அனைத்து உயிர்களும் தன்னுடைய செயல்களை செய்கின்றன. ஆனால் பல நேரங்களில் ஆன்மாக்களால் சுகத்தினை அனுபவிக்காமல் துக்கத்திலே மூழ்கி இருக்கும்படியான நிலை ஏற்படுகின்றது. அதற்கு மூலக்காரணம் என்னவென்று யோசித்தால் "எந்த விஷயம் நமக்கு சுகத்தினை கொடுக்கும்" அல்லது "எது சுகம்" என்பதை சரியாக புரிந்து கொள்ளாமல் இருக்கும் அறியாமை தான் துக்கத்திற்கு அடிப்படை காரணம் ஆகும். இதனை ஒரு சிறிய உதாரணத்தின் மூலம் உணரலாம். ஓர் குழந்தைக்கு பசியால் தவிக்கும் சமயத்தில் விளையாட்டு பொருளினை கொடுத்தால் அதனுடைய நிலை எப்படி இருக்கும் என்பதை நினைத்து பார்க்க வேண்டும். ஆம் அடுத்த நொடியே அந்த பொம்மையை வீசி எரிந்து விடும். இதன் மூலம் அக்குழந்தையின் உண்மையான தேவை உணவு என்பதை அறிய முடியும். இப்படி உண்மையான தேவை எது என்பதை அறியாமல் தேஹசுகம்,

செல்வம் ஈற்றுதல் போன்ற செயல்களை செய்து கொண்டு இருப்பவர்களுக்கு உண்மையான சுகம் என்பது எப்படி கிட்டும்.

இனி உண்மையான சுகம் என்பது யாது? மேற்கூறிய உதாரணத்தின் மூலமாகவே அதனை அறியலாம். பசியில் வாடும் குழந்தைக்கு உண்மையான தேவை "உணவு" போல; துன்பத்தில் சிக்கித் தவிக்கும் ஆன்மாக்களுக்கு உண்மையான தேவை பரம்பொருளின் அருள் என்பதே ஆகும், அதன் மூலமே இன்பம்.

அப்படிப்பட்ட (i) பரம்பொருள் என்பவர் யார்? (ii) அவர் இருக்கிறார் என்பதை எவ்வாறு அறிய முடியும்? (iii) அவருடைய அருள் கிடைப்பதற்கு ஆன்மாக்கள் என்ன செய்ய வேண்டும்? என்பதை சிறிது ஆராய்வதன் மூலம் சைவசித்தாந்தத்தின் ஒரு சிறிய அறிமுகத்தினை கொடுக்க முயற்சிக்கிறேன்.

(i) பரம் பொருள் என்பவர் யார்?

இதுவும் ஓர் உதாரணம் மூலம் அறியலாம். வறுமையில் இருக்கும் ஓர் மனிதனுக்கு, மற்றொரு தனவந்தர் உதவி செய்கிறார். இதிலிருந்து உதவி பெறும் மனிதனைவிட உதவி செய்பவர் ஏதாவது ஓர் விதத்தில் உயர்ந்தவராக இருக்கவேண்டும் என்பது தெளிவாக புலப்படுகின்றது. இதனையே ஆன்மாக்களின் விஷயத்தில் எடுத்துக் கொண்டோமேயானால், தான் முன் ஜென்மத்தில் செய்த செயல்களின் பயனால் அறியாமை, துன்பம் போன்றவைகளால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் ஆன்மாக்களின் இன்னல்களை நீக்க ஒருவர் வேண்டும். அந்த ஒருவர் எக்காலத்திலும் நிலைத்து இருப்பவராகவும், அனைத்தையும் அறிந்தவராகவும், எப்பொழுதும் இன்பத்தின் வடிவமாக இருத்தல் வேண்டும். அந்த ஒருவரையே சைவசித்தாந்தம் "பதி, சிவன்" என்றெல்லாம் கூறுகின்றது. पति என்பதற்கு எவர் நம்மை காப்பாற்றுகிறாரோ அவரே பதி எனப்படுவர்; शिवः என்ற சொல்லிற்கு மங்களமான குணம் உடையவர் என்பது பொருள் ஆகும்.

(ii) பரம் பொருள் அதாவது பதி இருக்கிறார் என்பதை எவ்வாறு அறிய முடியும்?

ஒரு பொருள் உண்டு என்பதை தக்க சாட்சிகளைக் கொண்டு நிரூபித்தல் வேண்டும். அவ்வாராக நிரூபிக்கும் வழிகளை ப்ரமாணம் (प्रमाण) என்று கூறுவர். சைவசமயத்தில் பரம் பொருள் இருக்கிறார் என்பதை நிருபிக்க மூன்று வகையான ப்ரமாணங்களை கையாள்கிறார்கள். அவைகள் (அ) சப்தம் (शब्द) (ஆ) அநுமானம் (अनुमान) (இ) ப்ரத்யக்ஷம் (प्रत्यक्ष) என்பதாகும். இதில் சப்த (शब्द) ப்ரமாணம் எனப்படுவது "அனுபவம் மிக்க அநுபூதிமான்களுடைய வாக்கே" ஆகும். இவ்வாறாக கூறுகின்றவர்களை ஆப்தர் (आप्तः) எனக் கூறுவர். இவ்வாறாக ஆப்தராக இருக்கும் தன்மையானது முதலில் "பதி" க்கே இருக்கும். அடுத்தபடியாக பதியின் அருளால் அறியாமை நீங்கப்பட்ட முக்தான்மாக்களிடத்தில் இருக்கும். அப்படிப்பட்ட ஆப்தர்களுள் மிகவும் முதல்வரான பதியான ஈஸ்வரரினால் அருளிச் செய்யப்பட்ட "காமிம்" போன்ற ஆகமங்களே சப்த ப்ரமாணத்தில் முதன்மையானதாக இருக்கின்றது. அடுத்ததாக இறைவனின் அருளால் அறியாமை நீங்கப்பெற்ற ஆன்மாக்களால் தான் அடைந்த அனுபவத்தை மற்றவரும் அடைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில், அவர்களின் திருமுகத்தால் அருளிச் செய்யப்பட்ட "ஸ்தோத்ர" (स्तोत्र)மற்றும் சாஸ்த்ர (शास्त्र) நூல்களே ஆகும். உதாரணத்திற்கு "தேவாரம்" போன்ற நூல்கள். இதன் மூலம் பரம் பொருள் இருக்கிறார் என்பதை உணர்தல். இரண்டாவதாக அனுமானம் (अनुमान) எனப்படும் ப்ரமாணம் ஆகும். மேற்கூறிய ஆப்தர்களின் வாக்யங்களால் அறியப்பட்ட ஞானத்தினை தகுந்த யுக்திகளைக் கொண்டு உறுதி செய்வதன் பொருட்டு தகுந்த துணை பொருளை (उपाय) கொண்டு உண்மையாக செய்யும் ஆராய்ச்சியே அனுமானம் எனப்படும். இதற்கு சிவஞானபோதத்தின் (शिवज्ञानबोध) முதல் சூத்திரத்தை உதாரணமாக கூறலாம்.

स्त्रीपुन्नपुंसकादित्वात् जगातः कार्यदर्शनात् ।

अस्तिकर्ता सहत्वैतत् सृजत्यस्मात् प्रभुर्हरः ॥

மேற்கூறிய உதாரணத்தின் மூலம் பதியின் இருப்பை ஆராய்வதற்கு முன் சைவசித்தாந்தத்தின் ஒருசில அடிப்படை கொள்கைகளை காணலாம். பதி என்பவர் பக்குவப்படாத ஆன்மாக்களின் புலன்களுக்கு தென்படாதவர், ஆனால் நித்யமானவர். பதியை அறிய விரும்பும் ஆன்மாக்களும்

நித்யமானவை. ஆனால் அவைகள் அறியாமை போன்ற இருள்களால் கட்டுண்டு பல துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. இவைகள் சஞ்சரிக்கும் கண்களுக்கு புலன் ஆகும் உலகமும் நித்யம், ஆனால் அவை பதியின் அருள் சக்தியால் தோன்றி, நிலைப்பெற்று, ஒடுங்கும் தன்மை உடையது என்பதாகும். இந்த அடிப்படையில் மேற்கூறிய உதாரணத்தை ஆராய்வோம்.

கண்களுக்கு புலன்படும் இந்த உலகத்தில் அவன், அவள், அது எனப் பிரித்துக் கூறப்படும் நிலையில் அனைத்து பொருள்களும், உயிர்களும் இருக்கின்றன என்பதால் அவை அனைத்தும் காரியப் பொருள் ஆகும். அதாவது குடம், துணி போன்ற பொருள்களை போல பிறரால் தோற்றுவிக்கும் தன்மையை கொண்டது. இதைப்போல் இந்த உலகமும் தானாகத் தோன்றாமல், பிறனொருவரால் தக்க சமயத்தில் தோற்றுவித்தல், நிலைபெற்றிறுத்தல், ஒடுக்குதல், பின்பு தோற்றுவித்தல் போன்ற செயல்களை செய்ய வல்லமை பெற்ற ஒருவர் வேண்டும் என்றும், அந்த ஒருவரே ப்ரபுவான ஹரர் (हरः) அல்லது சிவன்(शिवः) என்பது கருத்தாகும். இதில் கடவுள் இருக்கிறார் என்பதை சாதகர்(साधकः) ஆனவர் தகுந்த யுக்திகளைக் கொண்டு அறிந்து கொள்கிறார்.

அடுத்தபடியாக ப்ரத்யக்ஷம் (प्रत्यक्षः) எனப்படும் ப்ரமாணம் ஆகும். ஆப்தர்களின் வாக்யங்களால் அறியப்பட்டும், தக்க யுக்திகளைக் கொண்டு நிச்சயிக்கப்பட்டதுமான ஞானத்தின் மூலமாக அறியப்பட்ட பொருளின் இடைவிடாத சிந்தனையின் (த்யானத்தின்) மூலம் அடையும் ஓர் உயர்ந்த நிலையை ப்ரத்யக்ஷம். இந்த வழியானது ஒரு சில ஆன்மாக்களால் அவர்களது இடைவிடாத முயற்சியால் அடையப்பட்டது.

மேற்கூறிய ப்ரமாணங்கள் மூன்றின் மூலமாக இறைவன் இருக்கிறான் என்பதை உணர்ந்து கொள்ளுதல் ஆகும்.

(iii) பரம் பொருளின் அருள் கிடைக்க பசுக்கள் என்ன செய்ய வேண்டும்?

பதியின் அருள் கிடைக்க பசுக்கள் (ஆன்மாக்கள்) செய்ய வேண்டிய பல கடமைகளுள் முதன்மையானது வழிபாடு அல்லது பூஜை (पूजा) எனப்படும் செயல் ஆகும். இனி பூஜை (पूजा) என்பதன் அர்த்தத்தை சிறிது ஆராய்வோம்.

पूर्यन्ते सर्वकर्माणि जायते ज्ञानमात्मनि ।

पूरणाज्जायते येषां पूजा इत्यभिधीयते ॥

அனைத்து செயல்களையும் முழுமை அடைய செய்து, ஆன்ம ஞானத்தை உண்டாக்குவதால் (அதாவது பூர்த்தி செய்தல், உண்டாக்குதல்) என்னும் இரு செயல்களால் இதனை பூஜை எனக் கூறப்படுகின்றது.

இத்தகைய பூஜை போன்ற செயல்களை செய்தால் மட்டும் தான் இறைவன் அருள் செய்வாரா, அப்படி என்றால் சாதாரண மனிதர்களுக்கும் குணத்தால் உயர்ந்த இறைவனுக்கும் என்ன வேறுபாடு. மனிதர்களுக்கு வேண்டியதை செய்தால் அவர்கள் மூலம் கிடைக்கும் நிம்மதியானது, சிறிது நேரத்தில் நசித்து ஆன்மாக்கள் த்ருப்தி அடையாமல் மேலும் வேறு சில வழிகளைத் தேடும். இது ஒருமுடிவற்ற தொடர்ச்சியான செயலாகவே அமையும். ஆனால் உண்மையான பக்தியுடன் பரம்பொருளை நோக்கி செய்யக் கூடிய பூஜை போன்ற செயல்கள் அனைத்துமே எக்காலத்திலும் அழிவற்ற, குறையாததுமான ஞானம் தோன்ற வழியாக அமையும். இதனை கீழ்வரும் "देवीकालोत्तर" என்னும் நூலில் கிடைக்கக் கூடிய வரியின் மூலம் அறியலாம்.

ज्ञानोत्पत्ति निमित्तन्तु क्रियाचर्याः प्रकीर्तिताः ।

மேற்கூறிய ஞானம் தோன்றிவிட்டாலே நிலையான இன்பத்தை ஆன்மாக்கள் பெறலாம் என்பதாகும்.

இத்தகையதான ஞானம் அடைய எந்த தகுதிகளுடன் இறைவனை வழிபட வேண்டும். இறைவனை வழிபட தகுதிகள் தேவைதானா என்பது அடுத்த கேள்வியாகும். சற்று ஊர்ந்து கவனித்தால் தகுதிகள் அனைத்தும் அவசியம் தேவை என்பதை உணரலாம். உதாரணமாக அலுவலகத்தில் நம்மைவிட உயர்ந்த பொறுப்பில் இருக்கும் தலைவரை சந்திக்க வேண்டுமானால் அன்று தக்க ஆடை, தகுந்த பணிவு போன்ற அனைத்து வழிகளிலும் நம்மை தயாராக வைத்து கொள்வதை போல, பசுக்களுக்கு எல்லாம் தலைவராக இருக்கக்கூடிய பதியினை வழிபட அகம் மற்றும்

புறங்களின் தூய்மையானது தேவை என்பது நிச்சயமான ஒரு முடிவாகும். புறங்களின் தூய்மையானது ஸ்நாநம், த்ரிபுண்ட்ரதாரணம், ருத்ராக்ஷ தாரணம் போன்ற செயல்களால் கிட்டும். ஆனால் அகத்தின் அதாவது ஆன்மாவின் தூய்மைக்காக செய்யப்படும் ஓர் உயர்ந்த தெய்வீக செயலே தீக்ஷை (தீக்ஷா; दीक्षा) எனப்படும். ஆன்மாவானது இயல்பாகவே ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களால் கட்டுண்டு இருக்கின்றது என்பது சைவசித்தாந்திகளின் கொள்கை என்பதை மீண்டும் நினைவு கூற விரும்புகிறேன். அத்தகைய மும்மலங்களின் நீக்கமே தீக்ஷையின் முக்கிய நோக்கமாக கருதப்படுகின்றது. இந்த மலங்களின் நீக்கமே மலபரிபாகம் (मलपरिपाक) என்னும் சொல்லால் கூறப்படுகின்றது. இந்த மலபரிபாகம் ஆனது உபநயநம்(उपनयन) போன்ற வயது சம்மந்தப்பட்ட செயலாக இல்லாமல் அதற்கும் அப்பாற்பட்ட ஞானத்தின் முதிர்ச்சியால் மட்டுமே செய்யப்படும். இச்செயலை செய்விக்கும் குரு ஆனவர் ஸாக்ஷாத் சிவனின் அம்சமாகவே கருதப்படுவார். அதாவது இறைவனே பசுக்களின் முக்தியின் பொருட்டு குரு என்னும் வடிவம் கொண்டு, ஆன்மாக்களின் ஞானத்தை மேலும் ப்ரகாசம் அடையச் செய்கிறார் என்பது கருத்தாகும். இத்தகைய ஞானச் செயல் ஆனது நான்கு கட்டங்களாக நடைபெறுகிறது. அதில் முதலில் செயல்கள் समयदीक्षा , विशेषदीक्षा, निर्वाणदीक्षा எனவும் நான்காவது आचार्य अभिषेक ம் என்னும் சொல்லால் கூறப்படுகின்றது. மற்ற சமயங்களை போல இதிலும் சிஷ்யனே தக்க குருவை தேடி தீக்ஷையை பெற்றுகொண்டு ஞானத்தை அடையவேண்டும்.

மேற்கூறிய समयदीक्षा , विशेषदीक्षा, निर्वाणदीक्षा மற்றும் आचार्य अभिषेक த்தை எந்த ஆன்மாக்களுக்கு (அல்லது) பசுக்களுக்கு செய்ய வேண்டும் என்பதை சற்று ஆராய்வோம்.

समयदीक्षा - எதாவது ஓர் ஆன்மாவுக்கு, முன் ஜென்மத்தில் செய்த புண்யங்களின் பயனாக, ஏதாவது ஒரு ஆச்ரமத்தில் (ப்ரஹ்மச்சாரி, க்ருஹஸ்தன் போன்ற) இருக்கக்கூடிய, ஏதாவது ஒரு புண்ணிய நிகழ்ச்சியால் அநாதியாகவே அறிவை மறைத்துக்கொண்டிருக்கும் மலத்தின் நீக்கம் சிறிது நிகழும், அச்சமயத்தில் மிகவும் குறைந்த शक्तिनिपात ம் என்னும் ஞானம் தோன்றும் (शक्तिनिपातம் என்னும் நிலை ஆனது சூர்ய

ஒளியைப் போலவும், मलनाश ம் என்பது இருளின் நீக்கம் எனக் கருதல் வேண்டும், இரண்டு செயல்களும் ஏறத்தாழ ஒரே சமயத்தில் நடைபெறும். அவ்வாறான शक्तिनिपात ம் அடைந்த நிலையில் இருக்கக்கூடிய ஆன்மாவுக்கு செய்யக்கூடிய ஞானச் செயலே समयदीक्षा எனப்படும். இந்த சமயதீக்ஷாவை பெற்றுக் கொண்டவர்களை "ஸமயீ" (समयिन्)என்ற சங்கேதச் சொல்லால் அழைப்பர். (இங்கே கூறப்பட்ட ஸமயீ, கீழ்வரக்கூடிய विशेषदीक्षा , निर्वाणदीक्षा மற்றும் आचार्य अभिषेकம் செய்விக்கப்பட்ட அனைவருக்கும் தனித்தனியாக अनुष्ठानங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன, அவை அனைத்தும் ஞானத்தின் நிமித்தமாக என்பதை மீண்டும் நினைவு கூற விரும்புகிறேன். மேலும் லௌகிகமாக சக்தி நிபாதத்தினை கூறவேண்டுமானால், உதாரணமாக, தொலைக்காட்சியில் வரும் நிகழ்ச்சிகளையே கவனித்துக் கொண்டிருக்கும் ஒருவருக்கு, ஒரு நேரத்தில் திருக்கோவிலுக்கு செல்லவேண்டும் என்ற உண்மையான எண்ணம் தோன்றினால், அந்த நிலையை சக்தி நிபாதமாகக் கூறலாம்.)

विशेषदीक्षा – समयदीक्षा பெற்ற ஆன்மாவுக்கு மலத்தின் முதிர்ச்சியானது அதிகமாக நிகழும் அச்சமயத்தில் சக்தி நிபாதம் அதிகமாக நிகழும். அதனை அனுசரித்து समयदीक्षा பெற்றவருடைய பிறப்பினாலுண்டான ஜாதிபோன்றவைகள் நசிக்கப்பட்டு அவர் புதிதாக பிறப்பு எடுத்தவராக பாவிக்கப்படுவார். அவ்வாறு செய்யப்படும் தீக்ஷை विशेषदीक्षा என்ற இரண்டாவதாகும். இதனை பெற்றவரை புத்ரகன் (पुत्रकः)என்னும் குறியீட்டுச் சொல்லால் கூறுவர்

निर्वाणदीक्षा - பின்பு विशेषदीक्षा பெற்ற ஆன்மாவுக்கு மிகவும் அதிகமான மலத்தின் முதிர்ச்சி ஆனது அடையும் சமயத்தில் மிகவும் மிகுதியான शक्तिनिपात ம் ஆனது நிகழும் (மலங்களின் நாசம் முழுமையாக நிகழ்தல் என்பதாகும்). இத்தகைய நிலையில் இருப்பவருக்கு செய்யக்கூடிய தீக்ஷை தான் நிர்வாணம் (निर्वाण) எனப்படும் மூன்றாவதாகும். இவரை ஸாதகன் (साधकः) என்று கூறுவர். निर्वाणदीक्षा அடைந்தவருக்கு மலங்கள் முற்றிலுமாக நசித்து சிவத்வம் சித்திக்கும் என்பது உள்கருத்தாகும்.

அடுத்ததாக நடைபெறுவது ஆசார்ய அபிஷேகம் எனப்படுவதாகும். இதைச்சற்று கூறும் முன் இதனை ஏன் செய்ய வேண்டும்? என்ற கேள்விக்கு

சற்று பதிலளிக்க வேண்டும். முன்பு கூறிய निर्वाणदीक्षा விலேயே மலங்கள் முற்றிலுமாக நசித்து சிவத்வம் வெளிப்பட்டிருக்கின்ற காரணத்தால், அதனை பெற்றவரே சிவனாக அல்லது இறைவனாக இருக்கலாமே என்றால் அது கிடையாது. இச்சமயத்தில் தான் சைவசமயத்தினர் இரண்டு விதமான சிவன் என்ற கொள்கையை கையாள்கிறார். அவர்கள் அனுக்ரஹம் செய்பவர் என்றும், மற்றவர் அனுக்ரஹத்தை பெறுவதர்க்கு தகுதி உடையவர்கள், என்பவர்கள். முதலில் கூறப்பட்டவர் அனைவரையும் பாசங்களிலிருந்து விடுபடச் செய்து, அருள் புரிபவர். மற்றவர் சிவபுராணத்தில் கூறப்பட்ட "அவன் அருளாலே அவன் தாழ் வணங்கி" என்பதற்கிணங்க மேலே கூறப்பட்ட அனுக்ரஹம் செய்பவரின் அருளை எதிர்பார்க்கும் அனுக்ரஹத்தை பெறக்கூடியவர்கள் ஆவார். மேலும் நிர்வாண தீக்ஷை பெற்ற ஆன்மா அந்தந்தச் சமயத்தில் பாசம் அற்றவராக இருந்தாலும். தீக்ஷைக்குப்பின் செய்யக்கூடிய ஆசார்ய அபிஷேகத்தின் மூலம்தான் சிவத்தன்மையின் விளக்கம் முழுவதுமாக நிகழ்கின்றது. எப்படி மருத்துவ சாஸ்திரத்தை பயின்ற உடனேயே மருத்துவர் என்ற நிலையை அடையாமல் இடைவிடாத பயிற்சியின் மூலம் சிறந்த மருத்துவராக விளங்குகிறாரோ அதேபோல அந்த ஆசார்ய அபிஷேகமும் சிவபூஜையுடன் இடைவிடாத சித்தாந்த பயிற்சியினால் தான் முடிவை அடைகின்றது. "சிவ பூஜையின் மூலம் ஞானம் பெற்று நிலையான இன்பம் பெறலாம் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்".

முடிவுரை:-

இப்படியானதான உயர்ந்த சிவபூஜையை பக்தியுடன் செய்து நாம் அனைவரும் துன்பங்களிலிருந்து விடுபட்டு உண்மையான இன்பம் என்ற இறைவனுடன் ஒன்றர கலந்திருக்கும் நிலையை பெறுவோமாக !

"தென் நாடுடைய சிவனே போற்றி, என்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"